உ

சிவமயம்.

சிங்கார ரச மஞ்சரி.

இஃது

மதுரைஜில்லா கஸ்பாபழனியிலிருக்கும்

மஹா

வித்வகுலசிரோமணியாகிய

ம-ள-ள-ஸ்ரீ

மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்

பாடியது.

இதற்கு

சேலம்-சுகவனமுதலியார் குமாரன்

சே. மாரியப்பமுதலியார்

உரை எழுதி,

சேலம். கோவிந்தசாமிசெட்டியார்

ஷை. வெங்கடராமசெட்டியார்

இவர்களுதவியால்

சென்னை:

பத்தி-இராமாநுசுலுநாயுடு அவர்களது

ஸ்ரீநிகேதன அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தனர்.

Madras.

சிவமயம்.

அட்டவணை.

வகுப்பிலக்கம்.	பெயரட்டவணை.	பக்கம்.	ருக்கம்.	பாடல்.
	அ			
௧	அஞ்ஞாதயவ்வனைக்கிலக்கியம்...	௧0	௧	௧0
௨	அஞ்ஞாதயவ்வனையினிலக்கணம்	௯	௧	௯
௩	அட்டவிதநாயகிகளின்பெயர்...	௪௫	௨	௧
௪	அதமநாயகிக்கிலக்கியம்	௩௩	௧	௬௮
௫	அதமவைசிகனிலக்கணம்...	௮௧	௩	௨௧
௬	அதமவைசிகனுக்கிலக்கியம்...	௮௪	௩	௨௨
௭	அதிருத்தாநாயகிக்கிலக்கியம்	௩௪	௧	௭௧
௮	அதிவிசுரத்தநவோடைக்கிலக்கியம்	௧௩	௧	௧௮
௯	அதிவிசுரத்தநவோடையினிலக்கணம்	௧௨	௧	௧௬
௧0	அதிவ்வியாநாயகனுக்கிலக்கியம்	௮௫	௩	௩௪
௧௧	அதிவ்வியாநாயகிக்கிலக்கியம்	௩௬	௧	௭௫
௧௨	அதிராசேட்டைகனிட்டைகளுக்கிலக்கியம் ...	௨0	௧	௩௪
௧௩	அபலாபசதுரைக்கிலக்கியம்..	௩0	௧	௫௯
௧௪	அபலாபசதுரையினிலக்கணம்	௨௯	௧	௫௮
௧௫	அபிசாரிகையின்லக்கணமுங்குணங்களும்... ...	௬௧	௨	௪௪
௧௬	அபிஞனிலக்கணம்...	௮௩	௩	௨௮
௧௭	அபிஞனுக்கிலக்கியம்...	௮௩	௩	௨௯
௧௮	அபிலாசைக்கிலக்கியம்	௯௨	௩	௫௩
௧௯	அலங்கரித்தல்...	௭0	௨	௬௮
௨0	அவையடக்கம்	௫	0	௧0
௨௧	அனுகூலனிலக்கணம்...	௭௪	௩	௪
௨௨	அனுகூலனுக்கிலக்கியம்	௭௪	௩	௫
௨௩	அனுசயானைக்கிலக்கியம்	௨௬	௧	௫௧
௨௪	அனுசயானையினிலக்கணம்...	௨௬	௧	௫0
௨௫	அன்னியசம்போகதுக்கிதாதிபேதங்கள்... ...	௩௭	௧	௭௮
௨௬	அன்னியசம்போகதுக்கிதைக்கிலக்கியம் ...	௩௮	௧	௭௯
௨௭	அன்னியசம்போகதுக்கிதையினிலக்கணம் ...	௩௭	௧	௭௮
	ஆ			
௧	ஆகந்துகசாமானியைக்கிலக்கியம்	௩0	௧	௬௧
௨	ஆகந்துகசாமானியையினிலக்கணம்	௩0	௧	௬0

வரிசை இலக்கம்.	பெயரட்டவணை.	பக்கம்.	சூத்திரம்.	பாடல்.
	சொ			
க	சொர்ணம்பிகைதுதி...	உ	0	ஊ
உ	சொற்பனதெரிசனத்துக்கிலக்கியம்	கூசு	ங	சுச
	ஞா			
க	ஞாதயவ்வனைக்கிலக்கியம்	க0	க	கச
உ	ஞாதயவ்வனையினிலக்கணம்	கூ	க	கூ
	த			
க	தசாவத்தைகளினிலக்கணம்...	கூக	ங	ரு0
உ	தசாவத்தைகளின்பெயர்	கூக	ங	சகூ
ங	தட்சிணனிலக்கணம்	எச	ங	ச
ச	தட்சிணனுக்கிலக்கியம்...	எரு	ங	சு
	தி			
க	திரிவிதமானங்களுமுண்டாவதற்குக்காரணம்	ஙகூ	க	அச
உ	திரிவிதமான்னிவர்த்தியினிலக்கணம்	சக	க	அஅ
ங	திருட்டனிலக்கணம்...	எரு	ங	எ
ச	திருட்டனுக்கிலக்கியம்	எரு	ங	அ
ரு	திருத்தாதிபேதங்களுமிலக்கணங்களும் ...	ஙங	க	சுகூ
சு	திருத்தாதிருத்தாநாயகிக்கிலக்கியம்	ஙரு	க	எஉ
எ	திருத்தாநாயகிக்கிலக்கியம்	ஙச	க	எ0
அ	திவாபிசாரிகை...	சுங	உ	ருக
கூ	திவ்வியாதிநாயகப்பேதம்	அரு	ங	ஙங
க0	திவ்வியாதிபேதங்களுமிலக்கணங்களும் ...	ஙரு	க	எங
கக	திவ்வியாதிபேதமூன்றற்குமிலக்கியம் ...	ஙசு	க	எச
கஉ	திவ்வியாதிவ்வியாநாயகனுக்கிலக்கியம்... ...	அசு	ங	ஙசு
கங	திவ்வியாதிவ்வியாநாயகிக்கிலக்கியம்... ...	ஙஎ	க	எஎ
கச	திவ்வியாநாயகனுக்கிலக்கியம்	அரு	ங	ஙச
கரு	திவ்வியாநாயகிக்கிலக்கியம்...	ஙசு	க	எரு
	தீ			
க	தீராசேட்டைகனிட்டைகளுக்கிலக்கியம் ...	சக	க	ஙங
உ	தீராதிபேதங்கள்	சரு	க	உங
ங	தீராதீராசேட்டைகனிட்டைகளுக்கிலக்கியம் ...	உ0	க	ஙரு
	தூ			
க	தூதியினதிலக்கணமுங்குணங்களும்	சுக	உ	சுஉ
	தெ			
க	தெரிசனபேதங்களுமிலக்கணங்களும்	சுசு	ங	சுங

வகுப்பிலக்கம்.	பெயரட்டவணை.	பக்கம்.	இயக்கம்.	பாடல்.
	தொ			
க	தொழிலால்வியங்கியத்துக்கிலக்கியம் ...	எஎ	ங	கங
	ந			
க	நருமசசிவர்களிலக்கணம்	அசா	ங	ஙஅ
உ	நருமசசிவர்களின்பேதம்	அசா	ங	ஙஎ
ங	நவோடைகளின்குணங்கள்	கக	க	கங
ச	நவோடைக்கிலக்கியம்	கஉ	க	கச
ரு	நவோடையினிலக்கணம்	கக	க	கஉ
	நா			
க	நாயகர்களிலக்கணாரம்பம்	எங	ங	க
உ	நாயகர்பேதம்	எங	ங	உ
ங	நாயகாபாசனிலக்கணம்	அங	ங	உஅ
ச	நாயகாபாசனுக்கிலக்கியம்	அச	ங	ங0
ரு	நாயகிகளின்விரிதொகை	சாச	உ	ருஉ
சா	நாயகிநாயகனைப்பரிகாசித்தல்	எக	உ	எஉ
	நூ			
க	நூல்...	சா	க	க
உ	நூற்பெயர்க்காரணம்	ச	0	அ
	ப			
க	பதிகம்...	ரு	0	கக
உ	பதிக்கிலக்கியம்.	எங	ங	ங
ங	பதியினிலக்கணம்	எங	ங	உ
ச	பதியின்பேதம்	எங	ங	உ
ரு	பதினாறுவிதநாயகிகள்வருமாறு	ஙக	க	சாக
சா	பரகீயாகண்டிதை	ருசா	உ	ங0
எ	பரகீயாகலகாந்தரிதை	ருஅ	உ	ஙசா
அ	பரகீயர்சமாகச்சற்பதிகை	சாஅ	உ	சாரு
கூ	பரகீயாசுவாதீனபதிகை	சஎ	உ	சா
க0	பரகீயாபிசாரிகை	சாஉ	உ	சஅ
கக	பரகீயாபிரவச்சற்பதிகை	சாசா	உ	ருகூ
கஉ	பரகீயாபுரோடிதபதிகை	சா0	உ	சஉ
கங	பரகீயாபேதங்களுமவ்விலக்கணங்களும் ...	உக	க	ஙசா
கச	பரகீயாவாசககச்சிகை	சகூ	உ	கஉ

பெயரட்டவணை

முற்றும்.

பிழைதிருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
௧	௧௨	பிரகாசிக்கின்ற	பிரகாசித்த ... ...
௫	௬	தருளும்...	தருளிய... ... ...
௭	௨௧	புருடர்,...	புருடர்... ... ...
௯	௮	மூத்தா...	மூர்தா ... ...
௧௨	௮	இவளை...	இவள்... ... ...
௧௪	௨௪	யனுபவிக்கும்	யனுபவிக்கவும்... ...
௧௫	௩௦	பேசங்களை...	அப்பேதங்களை ... ...
௧௬	௨௯	மத்தியதீரா	மத்தியாதீரா,... ...
௧௮	௨௭	யெடுத்தோங்கக்	யெடுத்தோங்கிக்,... ...
௨௧	௨௪	திறமிகுந்	திறமிகுந்த... ...
௨௨	௧௭	தொகுப்பட்ட	தொகுக்கப்பட்ட... ...
௨௫	௨௪	சிகுப்,...	சிடுப்... ... ..
௨௬	௧௩	அல்லவா...	தல்லவா... .. ...
௨௯	௧௭	குறுகிட	குறுக்கிட்ட ... ...
௩௧	௨௬		வேறு.
௩௪	௩௦	யணிச்...	பணிச்... ... ...
௩௫	௧௦	வெண்...	வென்... ... ...
௪௪	௧௮	றுறை	றுறை.. ...[தல்
௫௦	௨௦	விட்டுப்போனது ...	நடுங்கல், விளையாடாதிருந்
௫௪	௨௨	முறுவல்...	முறுவற்,... ... ...
௫௭	௬	சொ...	சொல்... ... ...
௬௦	௧௮	தானறிய...	தாதறிய ... ...
௬௪	௨௨	டுணர்த்தாமன்றே... ...	டுரைத்தாமன்றே... ...
௭௧	௭	ருருவுக்...	ருருவுங்... ... ...
௭௪	௧௩	ரியல்பும்	ரியல்பு... ... ...
௮௦	௧௧	மதிலித...	மதிவித... ... ...
௮௦	௧௬	மருவமான	பருவமானமன... ...
௮௩	௫	வலைக்கட்...	வலைக்குட்... ... ...
௮௪	௨௮	யென்னுளே... ...	யென்னுமின்னே ...
௮௫	௩	திகிழ்..	திகழ் ... ...
௮௫	௮	கூபத்திற்	கூட்டத்திற் ... ...
௮௯	௧௦	தனே...	தணே .. ..
௯௧	௧௬	வையிலியிவை... ...	யிவையிலிவை ... ...
௯௩	௧௨	சுகிக்த	சுகித்த ... ...
௯௩	௧௬	ரளக...	றளக... ... ...
௯௭	௧௬	லிமை...	ளிமை ... ...
௯௭	௪௮	நான்றெறி	நான்றெரி ... ...

பிழைதிருத்தல் முற்றும்.

உ

சிவமயம்.

சிங்காரரசமஞ்சரி.

சிறப்புப்பாயிரம்.

இந்நூலுக்கு உரையெழுதியவரால்
இயற்றியது.

விருத்தம்.

திருமருவுநாயகிகணாயகர்களியல்பலவுந்தெரிவித்தற்கு
வருமொருசிங்காரரசமஞ்சரிநூல்வடகலையுள்வழங்குமாற்று
லருமையுளதெவருமுணர்வதற்காதலாலதனையவனிமீத்
விருதுபுனைதமிழாற்செய்தருள்கெனநன்னேயர்சிலர்வேண்டமாதோ.

இதுவுமது.

சிகரசிவகிரிமுருகன் றிருவருள்பெற்றோங்கு பெருஞ்செல்வன்செஞ்
சுகவனிதைநடனமிடு சுமுகனமுதினுமதுரன்றுளிக்கத்தக்க [சொற்
சகலவிதகவியுநொடி தனிற்பகருஞ்சண்டப்ரசண்டவாக்கி
புகழ்விசுவகுலதிலகன் புலவர்சிகாமணியெனுநற்புனிதசீலன். (உ

இதுவுமது.

தடகிரணமணிமகுடதளசேதுபதிசமுகந்தனிலனேக
திடவரிசைபெறுகனவான்முத்தையமாலீன்றசற்புத்திரசிலாக்கன்
மடல்வனசமலர்வாவிவளம்புடைசூழ்பழனிநகர்வளருங்கோமான்
கடலுலகெலாம்புகழ்மாம்பழக்கவிச்சிங்கக்குரிசில்கனிவுகூர்ந்தே(ங

இதுவுமது.

அருமைவிருத்தங்களினு லிலக்கணமுங்கலித்துறைபாலவைகட்கேற்ற, பெருமையிலக்கியமு மமைந்திட வடநூன் முறைசிறிதும் பிறழாவண்ணம், பொருவருசிங்காரரசமஞ்சரியைத்தொடுத்துமுற்றும்புவிகொண்டாட, மருவினியசேலநகர்ச் சுகவனர்தாண்மிசைச்சூட்டிவளம்பெற்முனே. (௪)

பழனுபுரியிலிருக்கும்,

ம-ா-ா-ஸ்ரீ,

இரத்தினகிரிக்கவிராயரவர்கள்

இயற்றியது.

விருத்தம்.

பலகலையுமுணர்தமிழ்மாம்பழக்கவிச்சிங்கக்குரிசில்பாடித்தந்த நலனுயர்சிங்காரரசமஞ்சரியை யெல்லோருநயந்துநோக்கி [று யிலகுமதிலுளகருத்தை யெளிதினுட்கொண்டிடவுரைநீயெழுதுகென் சிலர்கனிவினெடுவேண்ட நன்றெனச்சம்மதித்து றுதி செனிக்கப்பெற்றே. (௫)

இதுவுமது.

இருளகலச்சிறருமுணர்ந்திடப்பொருள்செய்துதவினனுலெந்தஞான்றுங், குருவருளைத்துணையெனவுட்கொளுநேமன் செங்குந்தர்குலகிரீடி, திருமகளுற்றிடுபுருடசிகாமணிசற்கீர்த்திவள்ளல்சேலமூதூர் மருவுமெழிற்சுகவனமாலின்றெடுத்தமாரியப்பமதிவலோனே.

இராமாயணபாரதப்ரசங்கியாகிய

சேலம் - இராமலிங்கசெட்டியாரவர்கள்

இயற்றிய

இரட்டையடியாசிரியவிருத்தம்.

தடநதிப்பவளச்சடாமகுடசுகவன
தயாநிதியையினிதுவாழ்த்தித்
திருபழனிநகர்மாம்பழக்கவிச்சிங்கத்
தமிழ்ச்சக்ரவர்த்தியிந்நாள்
வடகலைப்படியேவழுத்துசிங்காரரச
மஞ்சரியையாங்கதற்கு
வாய்த்திடத்தெளிவாகவள்மாரியப்பமதி
வலனிடுபொழிப்புரையுடன்
கடலிடத்தமுதெனக்காண்பவர்கள்யாவருங்
கைக்கொளச்சேலமூதூர்
கனயோகதனவைஸ்யகுலசிகாமணிகளுப
காரர்வர்த்தகசிரேஷ்டர்
திடபுயக்கோவிந்தசாமிமகராஜனுயர்
செல்வவேங்கடராமவேள்
செப்புமிவரிருவருஞ்சென்னையச்சேற்றிமகிழ்
சீர்த்திநிலைநாட்டினரரோ.

சேலம்,

ப - அங்கமுத்துமுதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

சீர்புனைமடவார் சிறப்பிலக்கணமுந்
தார்புனைமார்பத் தலைவர்களியல்பும்
வடகலையுணர்த்து மரபுவழாமற்
றிடமுறத்தமிழிற் செய்தருளென்னப்

பற்பலர்வேண்ட பழனம்புடைசூழ்
பொற்பணிபழனு புரிவிற்றிருக்கும்
பிரபலவிஸ்வ ப்ரம்மகுலாதிபன்
சரஸ்வதிவிலாசன் சற்சனர்நேசன்
பார்துதிசேது பதிசமுகத்திற்
பேர்திகழ்வரிசை பெற்றுளநிபுணன்
கல்விதேர்முத்தயக் கற்பகதருவருள்
செல்வன்மாம்பழக்கவிச் சிங்கநன்னாவலன்
திசையெங்கணுமீ மிசைகொண்டாட
நிசசிங்கார ரசமஞ்சேரியென்
றொருபாமாலை யொழுங்கிற்றொடுத்து
மருவார்சேல மாநகர்தழைக்குஞ்
சுகவனநாதர் துணைத்தாட்கணிந்து
மிகவனைவர்க்கும் விளக்கினனதற்குத்
தகவுரையெழுதித் தந்தனனெங்கள்
சுகவனவள்ளல் சுபுத்ரசிகாமணி
வீரியத்திற்பொலி வேந்தர்சபாசெனு
மாரியப்பப் பெயர்மதிவல்லோனே.

சிறப்புப்பாயிரம்

முற்றும்.

உ

சிவமயம்.

சிங்கார ரசமஞ்சரி.

பாயிரம்.

விநாயகர் துதி.

விருத்தம்.

திருமேவும்புவியுவப்பத்திகழ்வடநூற் புலவர்முன்னந்தெரிவித்திட்ட மருடீர்சிங்காரரசமஞ்சரியைச்செந்தமிழால்வகுத்தல்செய்யக் குருவாய்வந்தன்பர்மனக்கோயில்குடிகொண்டருளிக்குறித்தவெல்லா ந், தருமோர்குஞ்சரவதனத்தலைவன்மலர்த்தாளிணைக டலைமேல்வைப்பாம்.

(இதன்பொருள்.) அழகியபூமியில் உயர்ந்தோர் அனைவரும்மகிழ்ந்து அங்கீகரிக்கும்படி பிரகாசிக்கின்ற கீர்வாண வித்துவான்களால் முன்னே யறிவிக்கப்பட்டிருக்கின்ற மயக்கமில்லாத சிங்காரரசமஞ்சரியென்னுங் கிரந்தத்தைத் தமிழால்மொழிபெயர்த்து நாம் பாடல்செய்தற்பொருட்டு காரணகுருவாய்த் தோன்றி யடியார்மனக்கோயிலிற் குடிகொண்டு குறிக்கப்பட்டவைகளெல்லாம் அவர்க்குத்தருகின்ற ஒப்பற்ற யானைமுக விநாயகமூர்த்தியினது தாமரைமலர்போன்ற விரண்டு பாதங்களையும் எமது தலைமேல்வைத்து வணங்குவாம் என்றவாறு. (க)

சுகவனேஸ்வரர் துதி.

கோலநெடுமாடமின்னார் குழற்கூட்டுமகிற்புகைசூற் கொண்மூவென்ன, நீலமயில்வண்டிசைக்குநெறிநடிக்கக்கனிமலர்தேனெகிழ்ந்து தூவச், சாலநதிமணிகொழிக்கத்தருத்தலையாட்டிடக்குவளைதருக்கிநோக்குஞ், சேலநகர்தழைத்தோங்கத் திகழ்சுகவனேசர் பொற்றாள் சிந்தைசேர்ப்பாம்.

(இ - ள்.) அலங்கரிக்கப்பட்டு நெடியனவாயுள்ள மேன்மாடங்களில்வசிக்கின்ற பெண்கள் தமதுகூந்தலுக் கூட்டுகின்ற அகிற்புகையைச் சூற்கொண்ட மேகமென்று நினைத்து நீலநிறத்தையுடைய மயிற்கூட்டங்கள் அங்கே வண்

டினங்கள் பாடாநின்றவழியை யனுசரித்து நடனமாட அந்நடனத்திற்குத் தியாகமாக, கனிகளும் மலர்களுங்குழைந்து தம்மிடத்துள்ள தேன்களைப்பொழியவும் நதிகள் நிரம்பவும் ரத்னங்களை அலைகளாகிய கைகளால்வாரி யிறைக்கவும் அச்சோலை விருக்ஷங்களெல்லாம் அதிசயித்துச் சிரகம்பிதஞ்செய்யவும் இவ்விதங்களை நீலோற்பலங்கள் களிப்புற்று நோக்குவனபோல் மலர்கின்ற வளமைசூழ்ந்த சேலமாநகர் தழைத்தோங்கும்படி அதனுடெழுந்தருளிய சுகவனநாதரது பொன்போன்ற திருவடிகளையாம் மனத்திடைவிடாது தியானிப்பாம் எ-று. (உ)

கயிலாசநாதர்துதி.

நமதுதலத்தினுக் கிணைபொன்னகரோபார்த்திட்ல் வேண்டுநாமென்றெண்ணித், தமதுசெருக்கானிமிர்ந்ததன்மையெனும்படிவிசும்புதடைவிநீண்டு, பமரமிசைத்திடவய்ங்கிப்பரிதியயர்வுயிர்ப்பதற்கோர்பந்தராகி, கமழுமலர்ப்பொழிற்பழனிக்கயிலாசநாதர்பதங் கருத்துள்வைப்பாம்.

(இ - ள்.) நமது தலமாகிய இந்நகரத்திற்கு அந்தத்தேவநகர் இணையாகுமோ அதனை நாம் பார்த்தறியவேண்டுமென்று தமது கருவத்தினால் தலையெடுத்துயர்ந்த தன்மையென்று சொல்லும்படி ஆகாயமுகட்டை யளாவிநீண்டு வண்டினங்கள் அடர்ந்து கீதம்பாடப் பிரகாசித்து நெடுந்தூரஞ்சுழன்று வருகின்ற சூரியன் சற்றே சிரமபரிகாரஞ் செய்வதற்குத் தகுந்த வொரு பந்தல்போன்று பரிமளிக்கும் புட்பங்களை யுடைத்தாகிய சோலைசூழ்ந்த பழனியம்பதியில் எழுந்தருளியிருக்கின்ற கயிலாசநாதரது திருவடிகளை யெமது மனத்துள் இருத்துவாம் எ-று. (ங)

சொர்ணம்பிகைதுதி.

தனதியலைமயிலெனவெண்டலைப்புழைபெற்றரவொடுங்கச்சடைக்கட்டுடு, சினவுசிலைநுதலையஞ்சித்திங்கள்புகவிழிக்கயர்மான் றிரும்பிநாண, வனசமலர்வயற்சேல மாநகரிற்சுகவனர்பால் மகிழ்வுற்றோங்குங், கனவமுதகலசசுபகரதனசொர்ணம்பிகைதாள்கருதிவாழ்வாம்.

(இ - ள்.) தன்னுடையசாயலை மயிலென்று நினைத்து தனது நாயகர் ஆபரணமாகிய சர்ப்பங்கள் அவர் தரித்திருக்கும் மாலையாகிய வெண்டலைகளின் துவாரத்துள் ஒடுங்கவும் கோபித்துவளைகின்ற வில்லை நிகர்த்த நெற்றியைக்கண்டு நாமிணையாகோமென்றஞ்சி மூன்றாம்பிறையானது அவருடைய சடாபாரமாகிய காட்டுக்குட்புகுந்து மறையவுங் கண்களுக்குத் தோற்ற மானானது முகத்தைத் திருப்பிக்கொண்டு வெட்கப்படவுந் தாமரைகள் புட்பிக்கின்ற

வயல்சூழ்ந்த சேலமாநகரில் எழுந்தருளிய சுகவனநாதர் இடப்பாகத்தில் மகி
ழ்வுகூர்ந்து வீற்றிருக்கின்ற கனத்தவமிர்த கும்பத்தையொத்துச் சுபகரமாக
விளங்கிய தனங்களையுடைய சொர்ணாம்பிகையினது திருவடிகளைத் தியானித்
து வாழ்வுற்றிருப்பாம் எ-று. (௪)

பெரியநாயகியம்மைதுதி.

ஒருமதனுக்கிதுவரைநாமொளிர்கவரியிரட்டியுமிவ்வூர்மின்னார்த
ம், பருவமிடற்றழகினையற்பமும்பெறுகிலேமினிப்பற்பலதேவர்க்கு,
மருமையினத்தொழில்புரிந்தா லுமுயர்வாமெனவிண் ணடர்பூகங்க
ண், மருவுவயற்றிருப்பழனிவளர்பெரியநாயகிதாள் வழுத்தல்செய்
வாம்.

(இ-ள்.) ஒரு மன்மதனுக்கு நாமிதுவரை வெண்சாமரமாய் வீசிநின்
றும் இந்த ஊரிலுள்ள பெண்களினது பருவமான கழுத்தினழகைச் சிறிதும்
பெற்றுக்கொள்கிலோம் ஆதலால் இனிப் பலதேவர்களுக்கும் அருமையோடு
ம் அந்த வெண்சாமரம் வீசுந்தொழிலைச் செய்தேனும் உயரவேண்டுமென்று
தேவலோகத்துக்கடுத்து நிற்பவைகளைப்போல் ஆகாயவரை நெருங்கிய கமு
கவிருக்ஷங்கள் வேலிபோற் பொருந்துகின்ற வயல்சூழ்ந்து சிறப்பின்மிக்க
பழனியம்பதியி லெழுந்தருளிய பெரிய நாயகியினது திருவடிகளைத் துதிப்
பாம் எ-று. (௫)

சுப்பிரமணியர்துதி.

குழவிமதிதவழ்தொறுங்கூன் கோடுழலாவிறாலுடைந்துகுமிறி
ப்பாய்தேன், மழலைவரிவண்டிசைக்குமலர்ச்சுனைபுக்கடங்காமல் வழி
ந்துமேன்மேற், கழனிசெலநுகருமிளங்கயன்மகளிர்நயனவெழில்கா
ட்டுஞ்செல்வப், பழனிமலைவளர்வடிவேற்பண்ணவன்பொற்பதங்களின
ம்பணிதல்செய்வாம்.

(இ-ள்.) உச்சியிற் சந்திரப்பிறை தவழ்கின்றபோதெல்லாம் அதின்வளை
ந்த இருகோடுகளு முழுவதினால் ஆங்குள்ள தேன்கூடுக ளுடைந்து சத்தித்து
ப்பாய்கின்ற மதுவானது குதலையையும் புள்ளிகளையு முடையவண்டிசைபாடு
கின்ற மலர்கள் செறிந்த சுனைகளிற்புகுந்து நிரம்பி ஆங்கடங்காமல் அதிகரித்
து மேலேவழிந்து சார்பிற்சூழ்ந்த வயல்களிற்பிரவேசிக்க அதனை யுண்ணுகின்
ற கெண்டைமீன்கள் பெண்களினது கண்களைப்போற் செருக்கிவிளையாடும் வ
ளமைச் செல்வத்தாலுயர்ந்த பழனி யங்கிரியின்மீதுவளரும் குமரக்கடவுளின
து பொலிவுபெற்ற திருவடிகளாகிய தாமரைமலர்களை நாம் தோத்திரஞ்செய்
வாம் எ-று. (௬)

சரஸ்வதிதுதி.

படிகமணிமாலிகையும்பழமறைப்புத்தகமுமின்சொற்பகர்நல்யாழும், கொடியிடையுமமுதகும்பக்குவிமுலையுமிளநகையுங் குமுதவாயு, நெடியவருள்விழியுமதிநிகர்முகமுநினையுமன்பர் நெஞ்சிற்றோன்றி, வடிபனுவலுதவுதமிழ்வாணிபதம்பேணிநிதம்வரம்பெற்றுய்வாம்.

(இ-ள்.) தனது கையிலேந்திய படிகமணிவடத்தையும் புராதனவேத புத்தகத்தையும் இனிய சொற்களைச் சொல்லுகின்ற நல்லவீணையினையும் கொடிபோற்றுவண்ட சிற்றிடையினையும் அமிர்தகும்பத்தை யொத்துக்குவிந்த தனங்களையும் புன்சிரிப்பினையுங் குமுதமலர்போன்ற வாயினையும் நெடிய கிருபாநேத்திரங்களையுஞ் சந்திரனைநிகர்த்த முகத்தையுந் தியானிக்கின்ற அடியாருடைய மனத்தின்கண்ணே தோன்றிநின்று களங்கரகிதமான வித்தைகளைக் கொடுத்தாக்ஷிக்கின்ற தமிழ்மடந்தையாகிய நாமகளது திருவடிகளைவிரும்பி யெப்போதும்வணங்கி வரங்களைப்பெற்று வாழ்வுற்றிருப்பாம் எ-று. (எ)

நூற்பெயர்க்காரணம்.

மொழிபலவுமகரந்தமுதிர்பொருடே னலங்காரமுறைசூழ்வாசங், கொழிகவிதையிதழ்பகுதிகுசுமமன்னசிற்சிலவோர்குச்சமாக, வழுவிலவைமூன்றுடைத்தா யறிஞர்மனவண்டுறத்தோன் றழகாலின்பம், வழிதருசிங்கார ரசமஞ்சரியென்றிந்நூலை வகுப்பர்மாதோ.

(இ-ள்.) பல்வகைச்சொற்களே மகரந்தம், முதிர்ந்த அவற்றின் பொருளே மது, அலங்காரமே முறையிற்பரிமளிக்கின்ற வாசனை, தெளிவுதங்கிய கவியே யிதழ், அக்கவிபலகூடிய பகுதியே மலர், அம்மலர் சில கூடியொரு பூங்கொத்தாக, அப்பூங்கொத்துகள் மூன்றுடைத்தாகி யறிஞர்களின் மனமாகிய வண்டினங்கள் விரும்பியடைய ப்ரகாசிக்கின்றதோர் அழகினால் இந்தநூலை யின்பமேததும்பிவழிகின்ற சிங்கார ரசமஞ்சரியென்று பூர்வகிரந்த கர்த்தர்கள்சொல்வார்கள் எ-று. (அ)

இந்நூலாகியமாலையையின்னார்க்கு அணிவோமெனல்.

இனியகடைநாருளமைத்தெஞ்ஞான்றுமலர்ந்துபுலர்வின்றிமேன்மேற், கனிவுதவிவயங்குமிச்சிங்காரரசமஞ்சரியைக் கலைஞர்வாழ்த்தத், தனிவளமைபெறுசேலந் தனிற்சொர்ணம்பிகையை யிடந்தழுவியோங்கும், புனிதசுகவனநாதர்பொன்னடியிற்புனைந்துமுய்தற் பொருட்டுமாதோ.

(இ - ள்.) இனிதாகிய பனுவல்நடையென்னும் நார்க்குள்ளமைந்து சதா காலமுமலர்ந்து வாடுதலின்றி யனைவருக்கும் மனக்களிப்பை யதிகரிக்கக்கொடுத்துப் பிரகாசிக்கும் இந்தச் சிங்கார ரசமஞ்சரியை அறிஞர் துதிக்கவொப்பற்றவளமைபெற்ற சேலமாநகரிற் சொர்ணும்பிகையை யிடப்பாகங்கொண்டுவீற்றிருந்தருளும் பரிசுத்தகுண சுகவனநாதரது பொன்போன்ற திருவடிகளின்மேற் சூட்டுவோம்யாம் வாழ்தற்பொருட்டு எ-று. (கூ)

அவையடக்கம்.

உதித்ததினமுதற்சிறிதுமுணர்வின்றிவெறிமேற்கொண்டுழலுமுமன், விதித்தபலகலையுமிகவிரித்துரைசெய்திடப் புகுந்தவிதமேயொக்குங், கதித்தவடமொழிப்படிசிங்காரரசமஞ்சரியைக் கடல்சூழ்பாரிற், றுதித்ததமிழ்வலர்க்கெதிர்யான் சொல்வலெனத்தொடங்கியதோர்துணிவுதானே.

(இ - ள்.) உயர்ந்த வடமொழிப்படி யிந்தச் சிங்கார ரசமஞ்சரியைக் கடல்சூழ்ந்த பூவுலகிற்றுதிபெற்ற தமிழ்வித்துவான்களுக் கெதிரே யான்பாடுவேனென்று சற்றும்பயமின்றித்தொடங்கிய வென்மனத்துணிவானது பிறந்ததினமுத லிதுவரையெவ்வளவும் அறிவின்றிப் பயித்தியத்தையுமேற்கொண்டுவருந்துகின்றவோர் ஊமனானவன் முன்னோர்களால் விதிக்கப்பட்ட பலகலைகளையு மெடுத்தெவர்க்கும் புலப்படமிகவும் விவரித்துச் சொல்வதற்குப்புகுந்தவிதத்தையே யொத்திருக்கும் எ-று. (௧0)

பதிகம்.

தொகுத்தபலநாயகிகளிலக்கணமுஞ்சகிகுணமுந்தூதிபண்பு
மிகுத்தவிதநாயகர்பேதமுநருமசசிவர்களின்வேறுபாடும்
பகுத்துளசாத்துவிகமுஞ் சம்போகமொடுவிப்பிரலம்பத்தின்கூற்றும்
வகுத்ததசாவத்தைதெரிசனமுமற்றையவுமுணர்த்தவருமிந்நூலே.

(இ - ள்.) இத்தனையெனத் தொகையிடப்பட்ட நாயகிகளின் இலக்கணமுஞ் சகியினது இலக்கணமுந் தூதியினது இலக்கணமும்மிகுந்த கூறுபாடுகளையுடைய நாயகர்களினது இலக்கணமும் நருமசசிவர்களினது இலக்கணமும் பகுக்கப்பட்ட சாத்துவிகோத்ய விலக்கணமுஞ் சம்போகசிங்கார விலக்கணமும் விப்பிரலம்பசிங்கார விலக்கணமுந் தசாவத்தைகளின் இலச்கணமுந் தெரிசனங்களின் இலக்கணமும் இவைபோன்ற மற்றையவற்றின் இலக்கணமும் அறிவிக்கவருமிந்நூல் எ-று. (௧௧)

பாயிரம் முற்றிற்று.

ஆ செய்யுள் - ௧௧.

———

சிவமயம்.

சிங்கார ரசமஞ்சரி.

நூல்.

விருத்தம்.

சுருதிபுகழ்சேலமதிற்சுயம்புவடிவாயெழுந்தசுகவனேசர்
திருவருள்கொடினிதுமுடித்திடத்தொடங்குமிந்நூலிற்றெரிவிக்கின்ற
பொருவரியசிங்காரப்புதியசுவைக்கிருப்பிடமாய்ப்பொலியாநிற்போ
ரருமையுளநாயகிகளாமவர்தமிலக்கண்முன்னறைதுமாதோ.

(இ - ள்.) வேதங்களாற் புகழப்பட்ட சேலமாநகரிற் சுயம்புவடிவா யெழுந்தருளிய சுகவனநாதரது திருவருளைக்கொண்டு இனிதாக முடிக்கலாமெனத் தொடங்குகின்ற இந்நூலாலறிவிக்கும் ஒப்பிலாத புதுமையுள்ள சிங்கார ரசத்திற்கு இருப்பிடமாய்ப் பிரகாசிப்பவர்கள் அருமையுடைய நாயகிகளேயாம் ஆதலாலவர்களினது இலக்கணத்தை முதலில்யாம் எடுத்துச்சொல்லுவோம் எ-று. (க)

திரிவிதநாயகிகளின் பெயரும் சுவியாநாயகியி னிலக்கணமும்.

ஆவல்கூர்சுவீயைபரகீயைசாமானியையென்றறிவிக்கின்ற
மூவராநாயகிகளவர்தமில்வேட்டவனிடத்தேமுழுதுமன்பா
யேவல்கோணுதவற்காற்றிடல்சீலம்பொறுமைவஞ்சமின்மையின்ன
மேவவாழ்கற்புடையமெல்லியலேசுவீயைமற்றும்விரிப்பாமன்றே.

(இ - ள்.) நாயகிகள் (விருப்பமிகுந்த) சுவீயையும், பரகீயையும், சாமானியையும், என அறிவிக்கின்ற மூவராவர். அவர்களிற் சுவீயையென்னும் நாயகியானவள் விதிப்படி மணஞ்செய்துகொண்ட கணவனிடத்தே சதாகாலமும் பிரியமுடையவளாய் அவனால் ஏவப்பட்ட ஏவல்களை வெறுப்பின்றிச் செய்தலும், ஆசாரமும், பொறுமையுங், குடிலமில்லாமையும் இவைபோன்ற சற்குணங்கள் பலவும் பொருந்தவாழ்கின்ற பதிவிரதையாகிய பெண்ணேயாம் எ-று.

சுவீயை, பரகீயை, சாமானியை யென்னும் பெயர்களை வடநூலார் ஸ்விய்யா, பரகிய்யா, சாமான்யா என்பர். (உ)

சுவீயாநாயகிக் கிலக்கியம்.

சகியைநோக்கி நாயகன் சொல்லியது.

கட்டளைக்கலித்துறை.

சீலம்பொறுமைபுகழ்வாய்ந்துதீவினைதீர்ந்தெமர்மூற்
காலம்புரிபுண்ணியமோருருக்கொண்டென்கற்பினளாய்
ஞாலந்தனில்வரப்பெற்றேன்மற்றோர்தமைநாடுவனோ
மாலன்பினேத்துஞ்சுகவனநாதர்வரையணங்கே.

(இ - ள்.) திருமாலன்புகூர்ந்து துதிக்குஞ் சுகவனநாதருடைய மலைச் சாரலிலிருக்கும் பெண்ணே யென்னுடைய முன்னோர் பலரும் பூர்வகாலத்திற் செய்திருந்த புண்ணியமெல்லாந் திரண்டு ஒருருவாய் ஆசாரமும், பொறுமையும், புகழும், வாய்ந்த தீவினையென்பன எல்லாம் நீங்கி எனக்கு மனைவியாய் இந்தவுலகிற்கிடைக்க யான் பெற்றிருக்கின்றேன் இனி மற்றுளமாதரைக் கனவினும் விரும்புவேனோ விரும்பமாட்டேன் எ-று. (ரு)

பரகீயை சாமானியைகளின் இலக்கணம்.

மணம்புரிந்துகொண்டவனைமறந்துபரபுருடர்களைமனத்தேவேண்டி
யிணங்குகின்றகுடிலநடையேந்திழையேபரகீயையிவர்போலாது
பணங்கவர்ந்துசுகந்தகுந்தபடிபலர்க்குங்காட்டிமுறைபற்றுநீதி
தணந்திருந்தபொதுமடந்தைதானேசாமானியையாஞ்சாற்றுங்காலே.

(இ - ள்.) பரகீயையானவள் கல்யாணஞ்செய்துகொண்ட கணவனை விட்டுப் பரபுருடர்களை மனத்திற்கோரி வஞ்சகமாக நடக்கின்ற நாயகியேயாம். சாமானியையானவள் மேற்சொன்ன சுவீயை பரகீயைகளைப் போலிராமல் பலரிடத்தும் பணங்களைக் கவர்ந்து அப்பணத்திற்குத் தக்கபடி அவரவர்க்குச் சுகத்தைக்காட்டி முறையும், அன்பும், நீதியுந்தவிர்ந்து எல்லோர்க்கும் பொதுவாயிருக்கின்ற நாயகியேயாம் எ-று. (சு)

பரகீயாநாயகிக் கிலக்கியம்.

சகியைநோக்கி நாயகிசொல்லியது.

நதிக்கரைமாம்பொழின்மன்மதன்பூசைக்குநல்லிடமங்
குதித்திளமாருதமின்மணநல்குமுருவகைமஞ்
சதிர்த்துத்துளித்ததிதற்கென்செய்வேனவனென்மயங்க
விதித்தனனேயெனைவேதன்சுகவனர்வெற்பின்மின்னே.

(இ - ள்.) சுகவனநாதருடைய மலைச்சாரலில் வசிக்கின்ற சகியே அந்த ஆற்றங்கரையிலுள்ள மாஞ்சோலை மன்மதனைப் பூசிக்கத்தகுந்த நல்லிடமே,

அங்கே இளந்தென்றலானது எப்போதும் இனியவாசனைகளைக் கொண்டுவ ந்து கொடுக்கும், அச்சோலையில் இப்போது பிரவேசிப்பதற்குத் தடையாக மேகங்களதிர்ந்து துளிக்கின்றன, இதற்கு நானென்ன செய்வேன், அந்த நாய கன் மயலில் யான் அகப்பட்டு இப்படிவருந்த மஹாபாவியான பிரமதேவன் என்னைச் சிருஷ்டித்தானே எ-று. (ரு)

சாமானியாநாயகிச் கிலக்கியம்.

தலைவன்மனத்தொடு சொல்லியது.

அரைப்பணங்காட்டியநேகம்பணம்பிறராற்கவர்வாந்
தரைக்கணென்றுள்ளதனதிறுமாப்பைத்தனமுணர்த்த
விரைத்தடந்தோயுமிவளைக்கண்டாலெவர்மீளவல்லார்
திரைத்துயின்றோனயன்போற்றுஞ்சுகவனர்சேலத்தினே.

(இ-ள்.) பூமியில் யாம் அரைப்பணத்தை ஒருவருக்குங் கொடுத்து விடாமற் காட்டியே பிறர்களால் அநேசம் பணங்களைக் கொள்ளையிடுகின் றோம் எனத் தன்மனத்திலே தான் கொண்டிருக்கும் இறுமாப்பைத் தனது முலைகள் அன்னியர்க்குப் புலப்படுத்தும்படி கடலிற் பள்ளிகொண்ட திருமா லும் பிரமனுந் துதிக்குஞ் சுகவனநாதர் எழுந்தருளிய சேலமாநகரில் வாச னைதங்கிய தடாகத்திலே நீராடிக்கொண்டிருக்கும் இந்த நாயகியைக்கண் டால் இவளது மோகவலையைக் கடந்து திரும்பவல்லவர்யார் ஒருவருமில்லை எ-று.

பணமென்பது நாகபடம், அப்படத்திற்கும் அல்குலுக்குஞ் சமானமாத லால் அரையினிடத்துள்ள அல்குலை அரைப்பணமென்றார். முலைகளிறுமா ந்திருப்பதியல்பே அதுபோல் வேசைமனமு மிறுமாந்திருப்ப தியல்பேயாத லால் மனத்திறுமாப்பைத் தனமுணர்த்தவென்றார் எனவே தனங்களிறுமாந் திருந்தனவென்றாயிற்று. (சு)

சுவீயாநாயகியின் பேதங்களும், முத்தையி னிலக்கணமும்,
அம்முத்தையின் பேதங்களும்.

எடுத்துரைத்தசுவீயைமுத்தைமத்தியைநற்பிரகற்பையெனமுப் பேதம், அடுத்துநிற்குமுத்தைபுதிதாகவரும் யவ்வனத்தாளணையமா து, தொடுத்துணர்த்தினஞ்ஞாதயவ்வனையினெடுகளபத்துணைப்பொ ற்கொங்கை, வடுத்துரத்துவிழிஞாத யவ்வனையென்றிருபேதமருவும ன்றே.

(இ-ள்.) மேலே யெடுத்துச்சொல்லிய சுவீயாநாயகியானவள் முத்தை யென்றும், மத்தியையென்றும், பிரகற்பையென்றுந் திரிவிதபேதங்களைப்

பெற்று நிற்பள். அப்பேதங்களில் முத்தையென்பவள் நூதனமாகத் தோன்றும் யவ்வனத்தையுடையாள். இன்னுந்தொடுத் தறிவிக்கப்புகின் அம்முத்தை அஞ்ஞாத யவ்வனையென்றும் (களபந்திமிர்ந்த இருமுலைகளையும் மாவடுவைவென்ற கண்களையுமுடைய) ஞாதயவ்வனை யென்றும் இரண்டு பேதங்களைப் பொருந்துவள் எ-று.

முத்தை, மத்தியை, பிரகற்பை, அஞ்ஞாதயவ்வனை, ஞாதயவ்வனை யென்னும் பெயர்களை வடநூலார், முத்தா, மத்யா, ப்ரகல்பா அல்லது ப்ரவ்டா, அக்ஞாத யவ்வநா, ஞாதயவ்வநா என்பர். (எ)

முத்தாநாயகிக் கிலக்கியம்.

தலைவன்தலைவியினது நலம்புனைந்துரைத்தல்.

மதன்புரியவ்வனச்சோலைபுதிதின்மலரவதி
விதம்பெறுவண்டிரண்டொத்தகண்டேனொத்தினித்தசொற்சன்
னதம்புகுமன்னவன்மாமுடியொத்தகில்கவிகை
விதந்தமுவிற்றுமுகமிச்சுகவனர்வெற்பினட்கே.

(இ-ள்.) சுகவனநாதரது மலைச்சாரிலிருக்கின்ற இந்நாயகிக்குக் கண்கள் இரண்டும் இவள் சரீரமாகிய நிலத்தில் மன்மதனால் உண்டாக்கப்பட்ட யவ்வனமென்னுஞ்சோலை இப்போது புதிதாகமலர அம்மலர்களிற் சஞ்சரிக்கும் இரண்டு வண்டுகளை யொத்திருந்தன. சொற்கள் அச்சோலையில் துளிக்குந் தேனையொத்திருந்தன. முலைகள் தனது நந்தனவனம் புட்பித்ததென்னுங் களிப்பினோடு அதைப்பார்த்துக்கொண்டு நிற்கும் மன்மதனுடைய கிரீடத்தையொத்திருந்தன. முகம் அம்மன்மதனது குடையாகிய சந்திரவிம்பத்தி னழகைப்பெற்றுப் பிரகாசித்தது எ-று. (அ)

அஞ்ஞாதயவ்வனை ஞாதயவ்வனைகளின்
இலக்கணமு மவருட்பிரிவும்.

உரைசெயுமவ்வஞ்ஞாத யவ்வனையவ்வனமடுத்ததுணராப்பேதை
வரைநிகருமுலைஞாதயவ்வனைமற்றஃதுணர்வாள்வருமின்னோர்க்குள்
விரையளகநவோடையென்றும் விசுரத்தநவோடையென்றும் விரிந்து
சூழ்ந்த, திரைபுலகிலிருபேதத்தெரிவையருண்டவ்வியல்பைத்தெரிவிப்போமால்.

(இ - ள்.) மேலேசொல்லிய அஞ்ஞாதயவ்வனை யென்பவள் தனக்கு நூதனமாக யவ்வனம்வந்த தன்மையை யறியாதிருக்கின்ற நாயகியே யாம். (மலையைநிகர்த்த முலைகளையுடைய) ஞாதயவ்வனையென்பவள் தனக்குவந்த

யவ்வனத்தன்மையை யறிந்துகொண்ட நாயகியேயாம். இவ்விருவர்க்குள்ளும் (வாசனைபொருந்திய கூந்தலையுடைய) நவோடையென்றும் விசுரத்தநவோடையென்றுஞ் சொல்லப்பட்டு விரிந்து சமுத்திரஞ்சூழ்ந்த பூமியின் கண்ணே யிருவிதபேத நாயகிகளுண்டு அவர்களுடைய இலக்கணங்களை யினித் தெரிவிப்போம் எ-று.

நவோடை, விசுரத்தநவோடையென்னும்பெயர்களை வடநூலார் நவோடா, விஸ்ரப்தநவோடாவென்பர். (௯)

அஞ்ஞாதயவ்வன நாயகிக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

சலமூழ்கிநின்றுவப்பாற்செவிச்சென்றசைதன்கணைக்கா
ரலரோவெனத்தொடுமங்கவுரோமவணியையச்சை
வலமோவென்றேவிலக்குங்கடிபாரமதித்துவகை
மெலவேவினவுஞ்சகியைச்சுகவனர்வெற்பணங்கே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சார்பிலிருக்கும் இந்த நாயகி தடாகத்திலே நீராடிக் கரையேறிநிற்கும்போது களிப்பினால் காதுவரை வியாபித்து அசைந்துகொண்டிருக்குந் தனது கண்களை நீலோற்பலபுட்பங்களோவென்று கைகளால், தொடுவள் பின் தனது சரீரத்திற்றோன்றிய வுரோமபந்தியை அந்நீரிலுள்ள பாசிதானோவென்று நகங்களால் தள்ளுவள், அன்றியுந் தனக்கு நூதனமாகக் கடிதடங்கனத்திருந்த தன்மையைக்குறித்து இதுவென்ன காரணமென்று சகியை விசாரிப்பள் எ-று. (௧0)

ஞாதயவ்வன நாயகிக்கிலக்கியம்.

தலைவி சகியை வினவுதல்.

நயம்பொலிசேலநகர்வாழ்சுகவனநாயகனுஞ்
சுயம்புவடிவிற்பருத்தவென்கொங்கைத்துணையினியெவ்
வியம்புனைபுண்ணியவானுகிராற்றலைமேற்பிறைகொண்
டியம்புமம்மூர்த்தியினந்தமுற்றும்பெறுமேந்திழையே.

(இ - ள்.) ஆபரணங்களை யேந்தியபெண்ணே! எனது தனங்களிரண்டும் நன்மைமிகுந்த சேலமாநகரில் எழுந்தருளிய சுகவனநாதரென்னும் பரமேசுவரருடைய சொரூபமாகிய இலிங்கவடிவைப்போற் பருத்துத் தோன்றுகின்றன, இவை யினியெந்தப்பெருமைதங்கிய புண்ணியவானது கைநக இரேகையாகிய சந்திரப்பிறையைத் தமது தலைமேற்கொண்டு மேலேசொல்லிய மூர்த்தியினது அழகு முழுவதையும்பெறும் நீ சொல்வாய் எ-று. (௧௧)

நவோடைவிசுரத்தநவோடைகளின்

இலக்கணம்.

சகிமுதலோர்பரிகாசத்தால்வருவெட்கமும்பயமுந்தான்மேற்கொ
ண்டு, சுகியெனுநாயகன்சுரதத்தொழிற்கிசையாணவோடை யந்தச்சு
ழற்சியின்றி, நெகிழ்தருபூமலரமளிநேர்ந்துமங்கசங்கோசநீங்காப்பே
தை, விகிதகலாமதிவதனவிசுரத்தநவோடையெனவிரிப்பர்நல்லோர்.

(இ - ள்.) நவோடையென்பவள் பாங்கி முதலானவர்கள்செய்யும் பரிகாசத்தாலுண்டாகின்ற வெட்கத்தையும் கலவியெப்படி யிருக்குமோவென்ற பயத்தையும் மேற்கொண்டவளாய் அதிக ரசிகனுகிய தனது நாயகனுடைய சுரதத்திற் குடன்படாமல் தத்தளிக்கின்ற நாயகியேயாம். (முறைப்படிநிறைந்த சந்திரனையொத்த முகத்தையுடைய) விசுரத்தநவோடையென்பவள் அந்தநவோடைபோற் றத்தளிக்காமல் விரிந்த பூமெத்தைமேற் புருடன் கிட்டப்படுத்தும் அங்கசங்கோச முடையவளாயிருக்கின்ற நாயகியேயா மென்று சொல்வருயர்ந்தோர் எ-று.

எனவேநாயகன் சமீபத்திற் படுக்கவுஞ் சம்மதமில்லாமற் றத்தளிக்கின்றவளே நவோடை. நாயகனுடன்படுத்தும் அங்கசங்கோச நீங்காதிருப்பவளே விசுரத்தநவோடை யென்றுமிற்று. (௧உ)

எண்டுக்கூறிய

நவோடைகளின் குணங்கள்.

விலகாததமதுபெருவெட்கத்தாலுளக்குறிப்பைவெளியாக்காமை
பலபேதநூதனவாபரணாதிகளின்மேன்மேற்பட்டுமாசை
மலர்கோபசமையமதின்மதுரவமுதெனுமிருதுவார்த்தையின்ன
குலநீதிதனைக்காக்குங்குவளைவிழிநவோடைகளின்குணங்களாமே.

(இ - ள்.) தம்மைவிட்டு நீங்காதிருக்கின்ற பெரியவெட்கத்தினாலே தமது மனக்குறிப்பைச்சகி முதலோர்க்கு வெளியிடாதிருக்கையும் நூதன நூதனமாகப் பலவித ஆபரணாதிகளினிடத்தே யுண்டாகும் விருப்பமும், கோபந்தோன்றியசமயத்தில் இனித்த அமுதத்தையொத்த மிருதுவார்த்தையும் இவைபோல்வனபிறவுங் (குலவொழுக்கத்தைக் காப்பாற்றுங் குவளைமலர்போன்ற நேத்திரங்களையுடைய) நவோடை விசுரத்தநவோடையென்னும் நாயகிகளின் குணங்களாம் எ-று. (௧௩)

நவோடாநாயகிக்கிலக்கியம்.
நாயகன்கருத்து.

காத்தாற்பிடிக்கினும்பூவணைசேர்க்கினுங்கட்டிமெள்ள
வுரத்தாலணைக்கினுந்தான்புறஞ்செல்லவுடன்விரையுந்
தரத்தாலிரதஞ்சிதராதமைக்கிற்றழுவிடலாம்
வரத்தாலுயருஞ்சுகவனர்வெற்பினிம்மாதினையே.

(இ - ள்.) இவளை யான்கையாற்பிடித்தாலும் பலவந்தமாகப் பூமெத்தை மேற் சேர்த்தினுலும் மார்பிற்கட்டியணைத்தத் தழுவினுலும் அவற்றில் ஒன்றி னும்பிரியமின்றி யென்னை விட்டுத்தப்பி வெளியிற்போவதற்கே விரைகின்ற னள், சாமர்த்தியத்தினுற் பாதரசத்தைச் சிதராமற் கையிலமைக்கக் கூடுமா யின் வரங்களாலுயர்ந்த சுகவனநாதர் மலைச்சாரலி லிந்நாயகியைப் புணர லாம் எ-று. (கச)

விசுரத்தநவோடாநாயகிக்கிலக்கியம்.
நாயகனுரைத்தல்.

உற்றொருகைதொடைக்குள்வைத்துடைமுடியூட்டக்கி
மற்றொருகையின்முலைமூடிக்கண்வடிவாள்புதைத்துச்
சொற்றொடர்சூடுஞ்சுகவனர்வெற்பிற்சுருக்கெனவப்
பொற்றொடியென்னருகிற்படுத்தாளுடல்பூரித்ததே.

(இ - ள்.) அன்பர் பலசொற்களாற் றொடுக்கும் பாமாலைகளைத் தரிக்கின் ற சுகவனநாதர் மலைச்சாரலிற் பொன்னாற்செய்த வளைகளை யணியுமந்த நாயகி சம்மதித்தவள்போல் ஒருகையைத் தனது தொடைகளிற் பிணைத்துச் சேலை முடியைப் பலமாக அந்தக் கைக்குளடக்கி மற்றொருகையால் முலைகளைமறை த்து கூரியவாள்போன்ற கண்களை மூடிக்கொண்டு விரைவா யென்னருகில்வ ந்து படுத்தாள் அப்போதே யெனது தேகம் பூரித்தது எ-று. (கரு)

மேலேசொல்லிய மத்தியாநாயகி அதி விசுரத்தநவோடாநாயகிகளின்
இலக்கணமுங் குணங்களும்.

கலவிதனிற்பிரியமும்வெட்கமுஞ்சமமாகப்படைத்தகன்னிதானே
நலனுயர்மத்தியைமிகவுநாணிலதிவிசுரத்தநவோடையென்பர்
குலபதிதப்பிதம்புரிந்தபோதுதயிரியமுளதேற்கோணைச்சொல்லும்
பலனுடையத்தயிரியமின்றேற்கடுஞ்சொல்லும்பகர்தல்பண்பாமன்றே

(இ - ள்.) (நன்மையாலுயர்ந்த) மத்தியையென்பவள் மதனகேளிப்பிரி யமும் வெட்கமுஞ் சமமாகவுடைய நாயகியேயாம்; அந்நாயகிதானே வெட்

கத்தை யதிகமாகக்கொண்டிருக்குஞ் சமயத்தில் அதிவிசுரத்தநவோடை யாவாளென்று சொல்வர் அறிஞர். தனது நாயகன் அபராதஞ்செய்த காலத்திற் றயிரியமிருந்தால் வக்கிரவார்த்தையுந் தயிரியமில்லாவிடிற் கடினவார்த்தையும் பேசுவது அந்த மத்தியாநாயகியின் குணமாம் எ-று.

அதிவிசுரத்தநவோடையென்னும் பெயரை வடநூலார் அதிவிஸ்ரப்தநவோடாவென்பர். (கசு)

மத்தியாநாயகிக்கிலக்கியம் கவிக்கூற்று.

துயிலிற்குரிசின்முகங்காண்பரிதுதுயின்றிலனேற்
பயிலிற்பெரியவிவனங்கரங்களைப்பற்றுவனென்
றயிலிற்சிறந்தவிழிமாதுவெட்கமுமன்புமொக்க
வொயிலிற்பதியணையுற்ருள்சுகவனரோங்கலினே.

(இ - ள்.) வேலினுஞ் சிறந்த கண்களையுடைய அந்நாயகி நாம் நித்திரை செய்வோமாயின் நமது கணவனுடைய முகவிலாசத்தைப் பார்க்கமாட்டோம், நித்திரை செய்யாவிடிற் செய்கையில் வல்லவனுகிய இவன் நமது கைகளைப்பிடித்துக்கொள்வான், இதற் கென்னசெய்வோமென்று வெட்கமும் பிரியமுஞ் சமமாகவுடையவளாய் உல்லாசத்தோடு சுகவனநாதர் மலைச்சார்பிற் றனது நாயகன் படுக்கையைச் சேர்ந்தாள் எ-று. (கஎ)

அதிவிசுரத்தநவோடாநாயகிக்கிலக்கியம்.

நாயக னுரைத்தல்.

கலவிவிருப்பினள்போற்படுக்கைக்குட்கடிதடுத்தும்
விலகுவண்முத்தமிடிற்றொடின்மேனிவிதிர்த்துழல்வள்
சிலவகைசெப்பித்திருத்தினுநாணுவள்சேர்வள்கொஞ்சா
ளுலகமதிக்குஞ்சுகவனளூர்மின்பண்போர்வரிதே.

(இ - ள்.) உயர்ந்தோராற் றியானிக்கப்பட்ட சுகவனநாதர் தலத்திருக்கும் இந்நாயகி மதனகேளிப் பிரியமுடையவளைப்போல் எனது படுக்கைக்குட் சீக்கிரமாக வந்தும் யான் முத்தமிட்டால் விலகிக்கொள்ளுகிருள், கையால்தொட்டால் மேனி நடுங்கி வருந்துகிருள், அந்தச்சமயத்திற்குத் தகுந்த சில வுபசாரங்களைச் சொல்லித்திருத்தினும் வெட்கப்படுகிருள், பின்பு சேரவுடன்படுகிருள், அங்ஙனஞ்சேர்ந்துஞ் சரசஞ்செய்யாதிருக்கிருள், இவள் குணம் இத்தன்மைத்தென்று அறிவதற்கு அரிதாயிருக்கின்றது இதுவென்ன ஆச்சரியம் எ-று. (கஅ)

பிரகற்பைநாயகியினிலக்கணமுமவளுட்பிரிவும் அவ்விலக்கணமும்.

தவனுருகக்கலவிசெயுஞ்சமர்த்திபிரகற்பையென்த்தக்கபெண்மற்
றிவள்சுரதப்பிரியைசுரதானந்தமோகிதையென்றிருபாலாகு
மவனிமிசைக்கலவிநயப்பவள்சுரதப்பிரியையென்பரதினுமின்பத்
துவகைகொளப்பூவைசுரதானந்தமோகிதையென்றுரைக்கலாமே

(இ - ள்.) பிரகற்பையென்று சொல்லத்தகுந்தவள் தனது கணவன் மன முருகும்படி மதன கிரீடைசெய்யுஞ் சமர்த்துடைய நாயகியேயாம், இந்நாய கி சுரதப்பிரியையென்றுஞ் சுரதானந்த மோகிதையென்றும் இருவிதபேதங்க ளையுடையவள். சுரதப்பிரியையென்பவள் பூமியின்கண்ணே கலவியைத்தானே விசேடித்து விரும்புகின்ற நாயகியேயாமென்று சொல்வரறிஞர். சுரதா னந்த மோகிதையென்பவள் அக்கலவியாலுண்டாகிய இன்பத்தில் அதிக மகி ழ்ச்சியை யடைகின்ற நாயகியே யாமென்று சொல்லப்படும் எ-று.

சுரதப்பிரியை, சுரதானந்த மோகிதையென்னும் பெயர்களை வடநூலார், சுரதப்ரியா, சுரதானந்த மோஹிதாவென்பர். (௧௯)

பிரகற்பாநாயகிக்கிலக்கியம் தலைவன்றலைவியைப்புகழ்ந்துரைத்தல்.

பொறிபலவுஞ்சமவின்பந்திளைக்கப்புளகெழுமென்
னறிவணுவேனுமகலாதுதன்வசத்தாழவன்பிற்
குறிமதகேளிநடாத்துமிவளைக்கொடுத்துளதாற்
செறிவுறநான்முன்சுகவனர்வெற்பினிற்செய்தவமே.

(இ - ள்.) எனது மெய்வாய் கண்மூக்குச் செவியென்னு மைம்பொறிகளு ஞ்சமமாக வின்பத்தை யனுபவிக்கும் புளகமிகுந்த என்னறிவு சற்றும்விலகா மல் அவள் வசத்தே யமிழ்ந்துவிடவும் பிரியத்தோடு குறிக்கப்பட்ட மதனகிரீ டையை நடத்தி யென்னை யுருகச்செய்யத்தகுந்த இந்நாயகியைச் சுகவனநாதர் மலைச்சாரில் யான் முன்னமே யதிகமாகச் செய்திருந்த தபோபலனானது இப்போ தெனக்கு மனைவியாகக் கொடுத்திருக்கின்றது எ-று. (௨௦)

சுரதப்பிரியாநாயகிக்கிலக்கியம். கவிக்கூற்று.

தட்டுமுலைதொட்டிதழுண்டணைத்தாடைத்தனையகற்றிப்
பட்டர்குழல்கோதித்தன்வாண்முகத்தைப்பதிபார்த்தவுடன்
சுட்டொழில்காண்பனென்னநீலப்பூஞ்செவிதோகையினுன்
மடவரலெங்கள்சுகவனர்வெற்பின்மறைத்தனளே

(இ - ள்.) எமது சுகவனநாதர் மலைச்சாரில் அந்தநாயகி தன்றுநாயகன்விடியுஞ் சமயத்திற் றன்னுடைய விசாலித்த தனங்களைக் கையினால்நெருடி அதரபானஞ்செய்து கட்டித்தழுவித் துகிலைநெகிழ்த்து வளரும் கூந்தலைக் கோதித் தன் முகத்தைப்பார்க்க உடனே நமது காதிலிருக்கும் நீலோற்பலமலர்குவிவதா லிப்போது சூரியனுதிப்பதை யிவனறிந்து விலகுவானென்று விரைவாய் முன் றானையைக்கொண்டு அந்த நீலோற்பலமலரைத்தரித்த காதை மறைத்தனள் எ-று. (உக)

சுரதானந்தமோகிதாநாயகிக்கிலக்கியம்.

நாயகிசகியொடுசொல்லியது.

சூதேதுவைத்திருக்கின்றனனோவென்றுணைவனனை
மீதேகலவிதொடுத்தான்சுகவனர்வெற்பினிலப்
போதேயென்னையுமறந்தேனங்கேயவன்போன்மயக்க
மாதேநின்றற்கற்றகல்வியொன்றேனும்வரவில்லையே.

(இ - ள்.) அடிசகியே யெனது நாயகன்பெண்களை யுருக்கத்தக்க சூதென்ன வைத்திருக்கின்றானோ தெரியாது. மலர் மெத்தையின்மேல்வந்து என்னோடு கலவிசெய்யத்தொடுத்தான். சுகவனநாதர் மலைச்சாரில் அப்போதே நானெல்லாவற்றையும் மறந்ததுமன்றி யென்னையு மறந்திருந்தேன். அவன் என்னை மயக்கியதுபோல நானவனை மயக்குதற்கு நின்னிடத்து நான் முன்னமே படித்துக்கொண்ட கல்வியில் ஒன்றாயினும் அந்தச்சமயத்திற்கு வரவில்லை இது என்ன அதிசயமம்மா எ-று. (உஉ)

தீராதிபேதங்கள்.

பேசிவருமத்தியைநற்பிரகற்பையென்னுமிருபெண்களுள்ளு
மாசிறயிரியமுளதாற்றீரையென்றுமிலாமையினாலதீரையென்றுங்
தேசிலகவஃதிருந்துமிராதவியல்பாற்றீராதீரையென்றுங்
காசினியின்மிசைவழங்குமப்பேதங்களைவிரித்துக்காட்டுவோமால்

(இ - ள்.) சொல்லிவந்த மத்தியை பிரகற்பையென்னும் இவ்விருபெண்களுள்ளுங் (குற்றமற்ற) தயிரியமுடைமையாலே தீரையென்றும் அங்ஙனந் தயிரியமிலாமையால் அதீரையென்றும் (பிரகாசிக்கும்படி) தயிரியமிருந்தும் இராததன்மையாலே தீராதீரையென்றும் பூமியின்கண்ணே வழங்கிவரும்பேதங்களை யினி விவரித்துக்காட்டுவோம் எ-று.

இருபெண்களுள்ளும் வழங்கிவருமென்றமையால் மத்தியதீரை, மத்தியாதீரை, மத்தியதீராதீரை, பிரபுடதீரை, பிரபுடாதீரை, பிரபுடதீராதீரை யென்று ஆறு வகைப்படுமென்றறிக. மேற்சொல்லிய பெயர்களை வடநூலார் தீரா, அதீரா, தீராதீரா என வழங்குவர். (உங)

மத்தியதீராதிநாயகிகளின் இலக்கணம்.

மனவெகுளிக்குறிப்பையுபசாரவுரையாலுணர்த்துமட்ங்கைவாட்கட்
கனதனமத்தியதீராகடியசொல்லாலழுகையினற்காட்டுகிற்பா
ளனநடைகற்றுலவுமத்தியாதீராயிருவரியல்பாலுந்தோன்ற
முனமறிவித்திடுபவண்மத்தியதீராதீராயெனமொழியலாமே.

(இ-ள்.) (வாள்போன்ற கண்களையுங் கனத்த முலைகளையுமுடைய) மத்தியதீராயென்பவள் கணவனுக்குத் தனது மனக்கோபக்குறிப்பை உபசார வசனங்களாலறிவிக்கும் நாயகியேயாம். (அன்னம்போலு மெல்லிய நடைகற்றுலாவுகின்ற) மத்தியாதீரா யென்பவள்மேற் கூறியபடி கோபக்குறிப்பைக் கடின வசனங்களினாலும் அழுகையினாலும் அறிவிக்கு நாயகியேயாம். மத்திய தீராதீராயென்பவள் அக்கோபக்குறிப்பை மேலிருவரியல்புமாகிய உபசாரச்சொல், கடுஞ்சொல், அழுகை யிம்மூன்றாலும் நேராகத் தெரியச்செய்யு நாயகியேயாமென்று சொல்லப்படும் எ-று. (உச)

மத்தியதீராநாயகிக்கிலக்கியம்
தலைவனொடு தலைவி சொல்லியது.

தோகைகளாடுமலர்க்காவுலாவித்துவண்டனையோ
வோகைவிடாநின்னுடல்மிகவேர்த்ததுணர்குவதன்
ருகையின்மாந்தளிரால்வீசிநானவ்வயர்வகற்ற
வாகையுளாய்நினைக்கின்றேன்சுகவனர்மாதலத்தே.

(இ-ள்.) வெற்றியிற் சிறந்தநாயகனே! நீ சுகவனநாதரது பெருமைதங்கிய தலத்தின்கண்ணே மயில்களாடாநின்ற புட்பங்கணிறைந்த சோலைகடோறுஞ் சுற்றித்திரிந்து வருந்தினையோ, களிப்பைவிடாத வுனது சரீரமிகவும் வேர்த்திருக்கின்றது, இன்னகாரணத்தாலென்று அறியப்படுவதன்று, ஆதலாலிப்போது மாந்தளிர்களாலே தென்றலுண்டாகும்படி வீசி அவ்விளைப்பைத் தீர்க்கலாமென்று நானினைக்கின்றேன் எ-று.

தோகைகளென்பது குறிப்பாற் பெண்களையும் ஆடல் விளையாட்டையுங் காட்டிநின்றன. (உரு)

மத்தியதீரா நாயகிக்கிலக்கியம்
தலைவனொடு தலைவி சொல்லியது.

வேறுநிமித்தமுமாத்திதுகாறும்விழித்திருந்தா
யூறுபுனல்சிவப்புற்றவென்கண்களுண்டுள்ளைதடு
மாறுமென்னெஞ்சுனக்குச்சோலையிற்கனிவாய்த்ததுவேள்
சீறுவனென்னையிதுவென்சுகவனர்சேலமன்னே.

(இ - ள்.) சுகவனநாதர் எழுந்தருளிய சேலமாநகரிலிருக்கும் நாயகனே நீ பொய்யாக வேறேகாரணங்களை யெனக்குச்சொல்லி யிதுவரையுனது இச்சைப்படி விழித்திருந்தனை; எனதுகண்கள் பெருகிவருகின்றநீரையுஞ் செந்நிறத்தையும்பெற்றன; நீ மதுவுண்டுகளித்திருக்கின்றாய்; என்மனந் தத்தளிக்கின்றது; அந்தச்சோலையி லுனக்கு நல்லகனிகிடைத்தது; மன்மதனென்னை யிதோகோபிக்கின்றான் இதுவென்ன எ-று.

உனக்குக் கனிகிடைத்தது எனக்கு மன்மதகோபங்கிடைத்தது எனக் கூட்டுக. கன்னி கிடைத்ததென்றுசொல்லப் புகுந்தநாயகி அந்தச்சோலைக் கிணங்கக்கனியென்றனள். அஃது தொகுத்தல்விகாரம். (உசு)

மத்தியதீராதீராநாயகிக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

சரசமுதற்பலதன்மைகளாலுஞ்சமானமிலா
வரசனுமென்னுயிரன்பனுநீயின்றலுத்ததென்ன
விரசுபொழிற்குயில்வேட்டனையோவென்றுவிம்மினின்றாள்
முரசதிர்சேலச்சுகவனர்வெற்பிறைமுன்னணங்கே.

(இ - ள்.) இடைவிடாது மும்முரசங்களுமொலிக்கின்ற சேலமாநகரிலெழுந்தருளிய சுகவனநாதர் மலைச்சார்பிலிருக்கும் நாயகனுக்கு நேராக நாயகிநின்றவனைநோக்கி சரசமுதலாகிய சகலவிசேட குணங்களினும் எதிரற்றிருக்கின்ற மஹாராஜனும் எனதுபிராண நாதனுநீயே; இப்போது தேகவருத்தத்தை யடைந்திருக்கின்றதென்ன; நெருங்கியசோலையிற் குயில்வேட்டையாடினையோவென்று அழுதனள் எ-று.

குயிலென்றது குறிப்பாற் பெண்ணென்றாயிற்று, வேட்டலென்பது வேட்டையாடுதற்கும், விரும்புதற்கும் விவாகஞ்செய்து கொள்வதற்குமாம். ()

பிரபுடதீராதிநாயகிகளின்

இலக்கணம்.

மருவநகையிலாதவள்போன்றிருத்தலினாற் சினமுணர்த்துமதர்
வேற்கண்ணி, கருதுபிரபுடதீரைமிரட்டியடித்தக் குறிப்பைகாட்டவ
ல்லா, டருபிரபுடாதீரையிவ்விருபண்பினுந்தெரியத்தான்செய்கிற்பா,
டருவினுயர்பிரபுடதீராதீரையெனவட்நூற்செப்புமாலோ.

(இ - ள்.) மதிக்கப்பட்ட பிரபுடதீரையென்பவள் கணவனுக்குத் தனது கோபக்குறிப்பை மதனகேளியிற் பிரியமில்லாதவள்போன் றிருத்தலாலே அறியச்செய்கின்ற (மதர்த்த வேல்போன்ற கண்களையுடைய) நாயகியே யாம். (சுகத்தைத்தரும்) பிரபுடாதீரையென்பவள் மிரட்டுதலாலுந் தாடனங்களா

லும் அக்குறிப்பைக்காட்டவல்ல நாயகியேயாம். (அழகாலுயர்ந்த) பிரபுடதீராதீராயென்பவள் இவ்விருவரியல்புமாகிய கலவிப்பிரியமிலாதவள்போன் றிருத்தல், மிரட்டுதல், அடிக்குதல் இம்மூன்றாலும் அக்குறிப்பைத் தெரியச் செய்யும் நாயகியேயாமென்று வடகலைசொல்லும். (உஅ)

பிரபுடதீராநாயகிக்கிலக்கியம்

தலைவியொடுதலைவன்சொல்லியது.

மலரணைசேரமனமிலையேனுமதுரமொழி
சிலசொலவுந்தடையாதுன்சகிகளைச்சிறுதல்போன்
மெலவதனத்தைத்திருப்பினையுண்மைவெளியிலிடாய்
நலனிதுவன்றுசுகவனர்மால்வரைநாயகியே.

(இ - ள்.) சுகவனநாதர் பெருமைதங்கிய மலைச்சார்பிலிருக்கும் நாயகியே யுனக்கிந்தப் பூமெத்தையின்மேல் வருவதற்கு மனமில்லாவிட்டாலும் மதுரமான சிலவசனங்களையாவது பேசுவதற்குந் தடையென்ன; உனது சகிமார்களைக் கோபிப்பதுபோல மெள்ள முகத்தை யப்புறந்திருப்பிக்கொண்டாய் உள்ளசெய்தியையும் வெளியிற் காட்டமாட்டாய் இதுநன்மையல்ல எ-று.

பிரபுடாதீராநாயகிக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

சடைமதியூடிதன்சாயைகண்டிங்கொருதையலுற்று
ளிடையிலெனச்சினங்கொண்டேசொர்ணம்பிகையெண்ணமின்றி
மிடைவளையோலிடக்கையெடுத்தோங்கிமிரட்டினளாற்
படைமழுவேந்துஞ்சுகவனநாதர்பயப்படவே.

(இ - ள்.) சொர்ணம்பிகையானவள் தனது நாயகரது சடாமகுடத்துள்ள சந்திரவிம்பத்தில் தன் நிழல் பிரதிபிம்பிக்கக்கண்டு நமக்குங் கங்காதேவிக்கும் இடையிலொருகன்னிகை நூதனமாக இங்குவந்தனளென்றுகோபித்து மதிப்பில்லாமல் நெருங்கியவளைகள் சத்திக்கத் தனதுகைகளை யெடுத்தோங்கிக்கொண்டு மழுவாயுதத்தைத்தாங்கிய சுகவனேசுவரர் பயப்படும்படி மிரட்டினாள் எ-று.. (கூ0)

பிரபுடதீராதீராநாயகிக்கிலக்கியம்

தலைவன் மனத்தொடு சொல்லியது.

கடிமாமலரணைசேர்த்தாலுடன்புறங்காட்டுவள்பின்
னடியேயென்றாலுமடிப்பளுபசரித்தாலவட்டம்
விடிகாலைமட்டுமிரட்டினுமெத்தமிரட்டுவளெப்
படியோசுகவனர்வெற்பினெஞ்சேயிவள்பாவனையே.

(இ-ள்.) மனமே சுகவனநாதர் மலைச்சாரலில் இந்த நாயகியானவள் நான் வாசனைபொருந்திய பூமெத்தையிற் பலவந்தமாகச் சேர்த்தினாலும் உடனே முதுகுகாட்டிப் படுக்கின்றனள், பின் உனக்கு நானடிமையென்று சொல்லிவேண்டிக்கொண்டாலுந் தாடனஞ்செய்கின்றனள் அப்பாலுபசரித்து விடியுமட்டும் விசிறிவீசினாலும் என்னை மிரட்டுகின்றனள், இவளெண்ணமெவ்விதமோ தெரிகிலேன் எ-று. (௩க)

சேட்டாகனிட்டாதி பேதங்களும்
இலக்கணமும்.

சேட்டைகனிட்டைகளென வித்திறைமுதன்மூவரினுந் திகழ்வரோர்சார், வேட்டவனலன்புமிக்காள்சேட்டையதுசிறிதுபெற்றமின் கனிட்டை, காட்டுவர்தீராசேட்டைகனிட்டையதீராசேட்டைகனிட்டைமற்றும், வாட்டமிலாத்தீராதீராசேட்டைகனிட்டையென்றுவகுக்குங்காலே.

(இ-ள்.) ஈண்டுக்கூறியதீரை அதீரை தீராதீரையென்னு மூவருள்ளும் ஒரோவழிச்சேட்டை கனிட்டைகளென்பவர் பிரகாசிப்பர். சேட்டையென்பவள் கணவனாலதிக சிநேகத்தைப் பெற்றவள். கனிட்டையென்பவள் கொஞ்சச்சிநேகத்தைப் பெற்றவள். வகுத்துச்சொல்லுங்கால் தீராசேட்டை கனிட்டை, அதீராசேட்டைகனிட்டை, தீராதீராசேட்டைகனிட்டை, யென வழங்குவதொன்று சொல்வர் புலவர் எ-று.

தீரை முதன்மூன்று பேதங்களினுஞ் சேட்டைகனிட்டைகள் சேரவே மத்தியதீராசேட்டைகனிட்டை, மத்தியாதீராசேட்டாகனிட்டை, மத்தியதீராதீராசேட்டாகனிட்டை, பிரபுடதீராசேட்டாகனிட்டை; பிரபுடாதீராசேட்டாகனிட்டை, பிரபுடதீராதீராசேட்டாகனிட்டை எனப்பெருகும். சேட்டைகனிட்டையென்னும் பெயர்களை வடநூலார் ஜேஷ்டாகனிஷ்டா யென்பர். ()

தீராசேட்டைகனிட்டைகளுக் கிலக்கியம்.
கவிக்கூற்று.

இருபாலிருவருறவணையொன்றினிணங்கியபோ
தொருமான்முக்காடிட்டுறங்குனரோப்பமற்றோர்மயிலி
னருகேபுரண்டொலியின்றித்துகிலையவிழ்த்துமெல்ல
விருதோளெழுப்பினன்சேலச்சுகவனர்வெற்பிடத்தே.

(இ-ள்.) சேலமாநகரில் எழுந்தருளிய சுகவனநாதர் மலைச்சாரலில் வெற்றிமிகுந்த வொருநாயகன் தன்னிருபுறத்திலும் இரண்டு நாயகிகள் பொருந்த வொருபடுக்கையில் இணங்கியபோது ஒருநாயகி நிறையமுக்காடிட்டு தூ

ங்கிறவர்களைப்போல் விழித்துக்கொண்டிருக்க வதுகண்டு மற்றொரு நாயகியின் அருகேபுரண்டு படுத்துச் சத்தமில்லாமற் சேலைமுடியை யவிழ்த்துக்கொண்டு அவளை மெள்ள வெழுப்பினான் எ-று.

இவர் களிற் றயிரியமிருந்தமையால் திராசேட்டைகனிட்டைகளாயினர்.

அதிராசேட்டைகனிட்டைகளுக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

அருத்தியைத்தான்வெளியாக்காதிருமனையாட்டிகளி
லொருத்தியைப்பூவுக்கனுப்பிச்சற்றேயிமைத்துள்ளகணிற்
கருத்தினைக்காட்டுமுகத்தெழின்மற்றொருகன்னிதனைத்
திருத்தியச்சோலையிற்சேர்ந்தான்சுகவனர்சேலமன்னே.

(இ - ள்.) சுகவனநாதர் சேலமாநகரில் ஒருநாயகன் இரண்டுநாயகிகளோடு கூடிவிளையாடும்போது தனது விருப்பத்தை வெளியாக்காமல் ஒரு நாயகியை பூவெடுத்துக்கொண்டு வரும்படி யனுப்பிவிட்டுச் சிறிது திறந்தகண்களாற் றனதெண்ணத்தைக்காட்டிநின்ற முகவிலாசத்தையுடைய மற்றொருநாயகியைத் திருத்தியுண்டாக்கத்தக்க வச்சோலையினிடத்திற் கூடினான் எ-று.

இவர்களிற் றயிரியமில்லாமையைக் காண்க. (நச)

திராதிராசேட்டைகனிட்டைகளுக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

இருமட்டவார்சினந்தோர்பாலுறக்கண்டிணக்குதற்குப்
பருமணியாரமொருத்திகைமேல்வைத்தப்பண்பின்மற்றோர்
பொருவில்பெண்கையில் வைக்கும்போதக்கைதொட்ல்போல்விலக்கி
திருமுலைதொட்டுமகிழ்ந்தான்சுகவனர்சேலமன்னே. [த்

(இ - ள்.) சுகவனநாதர் சேலமாநகரில் ஒருநாயகன் தனது இரண்டு நாயகிகளுந் தன்மேற்கோபங்கொண்டு ஓரிடத்திலிருக்கக்கண்டு தானந்த நாயகிகளைச் சமாதானஞ் செய்யும்பொருட்டுப் பருத்தரத்னமாலிகையை யொருத்தி கைமேல்வைத்துப் பின்னுமப்படியே யொருரத்தனமாலிகையை யொப்பிலாத மற்றொருத்திகைமேல் வைக்கும்போது அவள்கையைத் தொடுவதுபோல் அந்தக்கையைச் சற்றேவிலக்கி யழகியதனங்களைத் தீண்டி மகிழ்ந்தான் எ-று.

இவர்களிற் றயிரியமிருந்து மிராமை காண்க. (நரு)

க - வது மலர் முற்றும்.

பரகீயாபேதங்களு மவ்விலக்கணங்களும்.

கருதுப்ரகீயைதனிற்கன்னிகைபரோடையெனக்காட்டும்பேத
மிருவகைகன்னிகைதந்தைதாய்முதலோர்க்கடங்கிமனவிச்சைதன்னை
யொருவருமங்கறியாமலொளிப்பவளாம் பரோடைமணந்துளகேள்வ
ற்கு, வெருவிமுனமெடுத்துரைத்த மெல்லியலேபோன்றிருக்குமின்
னுமன்றே.

(இ - ள்.) மேற்குறித்த பரகீயையிற் கன்னிகையென்றும் பரோடையெ ன்றும் இருவிதபேதங்கள் காட்டப்படும்; கன்னிகையென்பவள் தந்தைதாய் முதலானவர்களுக்கடங்கித் தனது மனவிருப்பத்தை யொருவருமறியாம லொளிக்கு நாயகியேயாம்; பரோடையென்பவள் தன்னை விவாகஞ்செய்துகொ ண்ட கணவனுக்குப் பயந்து முன்னே யெடுத்துச்சொல்லிய கன்னிகைபோல வே மனவிருப்பத்தை மறைத்துக்கொண்டிருக்கும் நாயகியேயாம் எ-று.

கன்னிகை பரோடையென்னும் பெயர்களை வடநூலார் கன்னிகா பரோ டாவென வழங்குவர். (௩௬)

கன்னிகாநாயகிக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

புருவவிற்கோட்டிக்கட்பூங்கணைதீட்டிப்புனைகழுத்தின்
குருமணித்தாமமுன்னுடைப்புயத்தைக்குழைதழுவத்
திருவிரற்காதிற்செறித்துச்சுகவனர்சேலமதிற்
பருமுலைக்கோமின்சிரித்தோரத்தோர்செல்வற்பார்த்தனளே.

(இ - ள்.) சுகவனநாதர் சேலமாநகரிற் பருத்த தனங்களையுடைய வோ ரிராஜகன்னிகை தனது புருவமாகிய வில்லைவளைத்துக் கண்களாகிய பாண ங்களைக் கூர்மைசெய்துகொண்டு அலங்கரிக்கப்பட்ட கழுத்திலுள்ள நிறமிகுந் ரத்னாபரணங்கள் முன்னே துவண்டசையவுங் காதணிகள்புயத்தைப் பொ ருந்தவுமிருந்து அழகிய சிறுவிரலைக் காதிலமைத்துப் புன்சிரிப்புடனே யக் கே யோரமாக வொரு சீமானைப்பார்த்தனள் எ-று. (௩௭)

பரோடாநாயகிக் கிலக்கியம்.

நாயகிதானே யெண்ணியது.

இந்தக்குரிசிலழகென்மனங்கவர்ந்திட்டதந்தோ
சந்தச்சிலைமன்மதனிவனேயிவ்வன்றன்னைநண்ணிச்
சொந்தக்கணவனறியாதெவ்வாறுசுகிப்பனியான்
பந்தச்சுகவனர்நாட்டேழையேன்செய்தபாவமென்னே.

(இ - ள்.) அன்பு நிறைந்த சுகவனநாதர் நாட்டில் இந்த நாயகனது பேரழகென் மனத்தைக் கொள்ளையிட்டுக்கொண்டதையோ, இந்நாயகனே நிறமிகுந்த வில்லேந்திய மன்மதனுவான், இவனையடுத்த நானெனது சொந்தநாயகனறியாதிருக்கும்படி யெவ்விதத்திற்சுகிக்கப்போகின்றேன்; இங்ஙனம் வருந்த முன்னமே யேழையாகிய நான் என்ன பாவஞ்செய்தேன் எ-று. (௩அ)

பரகீயையினுட் பிரிவுகள்.

வேறு.

குத்தைவிதத்தையிலக்கிதைவெங்குலடையனுசயானையினே
டொத்தமுதிதைசாகசிகையுலையாப்பிரதிபாசதுரை
தத்தையனையவபலாபசதுரைமுதற்பேதம்பலமுன்
வைத்தபரகீயையில்வழங்கிவருமென்றுணர்த்தும்வடநூலே.

(இ - ள்.) முன்னமே சொல்லிவந்த பரகீயையிற் குத்தையென்றும், விதத்தையென்றும், இலக்கிதையென்றும், (விருப்பமிகுந்த) குலடையென்றும், அனுசயானையென்றும், (பொருந்திய) முதிதையென்றுஞ், சாகசிகையென்றுங், (கெடாத) பிரதிபாசதுரையென்றுங், (கிளிபோன்ற) அபலாபசதுரையென்றுந் தொகுப்பட்ட பலபேதங்களும் வழங்கிவரும் என்று வடநூலறிவிக்கும் எ-று.

மேற்சொல்லிய பெயர்களை வடநூலார், குப்தா, விதக்தா, லக்ஷிதா, குலடா, அனுசயானு, முதிதா, சாஹஸிகா, ப்ரதிபாசதுரா, அபலாப சதுரா வெனவழங்குவர். (௩௯)

குத்தையின்பேதங்கள்.

விடயமறைக்கவல்லகுத்தைவிருத்தசுரதகோபனைமேல்
வடிவுமிகுத்தவருத்தீசமாணசுரதகோபனைவெங்
குடிலவிருத்தவருத்தீசமாணசுரதகோபனையென்
றுடையதிறத்தின்முப்பேதமுறும்பின்விவரித்துரைசெய்வாம்.

(இ - ள்.) தனது கிரியாகாரியங்களை மறைக்கவல்லவளாகிய அந்தக்குத்தையானவள், விருத்தசுரத கோபனையென்றும், (மேனிவடிவுமிகுந்த) வருத்தீசமாண சுரதகோபனையென்றுங், (கொடிய வஞ்சனையையுடைய) விருத்தவருத்தீசமாணசுரதகோபனையென்றுஞ் சொல்லப்பட்ட மூன்று பேதங்களையுந் தனக்குரிய குணகாரணத்தால் அடைவள், இனி விவரித்துச்சொல்வோம் எ-று.

இப்பெயர்களை வடநூலார் வ்ருத்தசுரதகோபனு, வர்த்திஷ்யமாண சுரதகோபனு, வ்ருத்தவர்த்திஷ்யமாண சுரதகோபனுவெனவழங்குவர். (சo)

அப்பேதங்களினிலக்கணம்.

நடந்தகலவிதனை மறைக்குநங்கைகுடமுநாணவிம்மி
மிடைந்தசுகந்தகளபமுலைவிருத்தசுரதகோபனைபின்
றொடர்ந்துநடப்பதாகியவத்தூயகிரீடைத்தொழிலொளிக்கு
மடந்தையடுத்தவ்ருத்தீசமாணசுரதகோபனையே.

(இ - ள்.) கும்பங்களும் (வெள்கும்படி பருத்து நெருங்கிய பரிமளகளப ந்திமிர்ந்த முலைகளையுடைய) விருத்தசுரத கோபனையென்பவள் நடந்தவிட்ட கலவியைமறைக்கின்ற நாயகியேயாம். இவளுக்கடுத்த வருத்தீசமாண சுரத கோபனையென்பவள் பின்னேதொடுத்து நடப்பதாகிய (குற்றமற்ற) கிரீடைத்தொழிலை மறைக்கின்ற நாயகியேயாம் எ-று. (சக)

இதுவுமது.

மூந்தநடந்தகலவியும்பின்முயுன்றுநடக்குங்கலவியுமங்
கெந்தமனிதர்க்குந்தெரியாதிருக்கமறைக்குமேந்திழையாள்
வந்தவிருத்தவருத்தீசமாணசுரதகோபனையென்
றந்தவட்நூல்வகுத்திடுமற்றவர்பண்பினையுமறிவிப்பாம்.

(இ - ள்.) தொகையிடவந்த விருத்தவருத்தீசமாண சுரதகோபனையென்பவள் முன்னே நடந்தவிட்டகலவியையும் பின்னேமுயற்சியால் நடக்குங் கலவியையும் அங்கே யெவ்வகைப்பட்ட மனிதர்களுக்குந் தெரியாதிருக்கும்படி மறைக்கின்ற நாயகியேயாமென்று அழகிய வடநூல்சொல்லும், ஏனைய ருடைய விலக்கணங்களையும் இனியறிவிப்போம் எ-று. (சஉ)

குத்தாபேததிரிவிதநாயகிகளுக்கு மிலக்கியம்.

கவிக்கூற்று.

அத்தைவெறுக்கினும்பாங்கிகடூறினுமல்லவர்மற்
றெத்தையுரைக்கினும்பள்ளிபுகேனின்றெலியளைசார்
கத்திநகவெருகென்செய்யுமோசற்றுங்கண்பொருந்தா
தொத்தினிதென்றனண்மெய்போற்சுகவனஞர்வஞ்சியே.

(இ-ள்.) சுகவனநாதர்தலத்தில் வஞ்சனையாலுயர்ந்த நாயகி யென்னை யத்தைகோபித்தாலுஞ் சகிகள் தூறுசெய்தாலும் மற்றெல்லோரும் எவ்வித நிந்தையைச் சொன்னாலும் நானிப்போது படுக்கைவீட்டிற்குள் போகமாட் டேன், ஏனெனில் அங்கே யெலியளையின் சமீபத்திற் காத்துக்கொண்டிருக்கி ற கத்திபோன்ற நகங்களையுடைய பூனை யின்று என்னை யென்னசெய்யுமோ சிறிதாயினுஞ் சம்மதித்து இனிதாக வெனதுகண்பொருந்தி நித்திரைவராதெ ன்று மெய்போற் பெரிய பொய்யைச்சொல்லினள் எ-று. (சங)

விதத்தையினிலக்கணமும்பேதங்களும்
அவ்விலக்கணங்களும்.

சமையவுசிதசாதுரிய சமர்த்திவிதத்தையாமவட்குட், கமை
யில்வாக்குவிதத்தையென்றுங் கயற்கட்கிரியா விதத்தையென்று, ம
மையுமிருபான்முன்னவள்சொல்லதனுன் மேற்காட்டமைதியுளாள்,
சிமைய மூலப்பின்னவடொழிலாற் றிறமன்னதுபெற்றிடுபவளே.

(இ - ள்.) விதத்தையென்பவள் சமயோசித சாதுர்ய சாமர்த்தியமிகுந்த நாயகியாம்; அவட்குட் (பொறுமையில்லாத) வாக்குவிதத்தையென்றுங் (கெண்டைபோன்ற கண்களையுடைய) கிரியாவிதத்தையென்றும் இரண்டு பேதங்களுண்டு; முன்னமேசொன்ன வாக்குவிதத்தை யென்பவள் மேற்குறித்த சாமர்த்திய வளமைகளைத் தனது வார்த்தையாற் காட்டுகின்ற நாயகியாம்; பின்னேசொன்ன (மலைநிகர்த்த முலைகளையுடைய) கிரியாவிதத்தை யென்பவள் அந்தச்சாமர்த்தியங்களைத் தனது தொழில்களாற் காட்டுந்தன்மையைப் பெற்றிருக்கு நாயகியாம் எ-று.

இப்பெயர்களை வடநூலார் வாக்விதக்தா க்ரியாவிதக்தா வென்பர். (சச)

வாக்குவிதத்தாநாயகிக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

செங்கதிர்பொங்கப்பலபூவும்வாசனைசெய்யுமந்தத்
துங்கநதிக்கட்பொழில்விலகாமற்சுகங்கருதித்
தங்கவழிச்செல்பவன்வேண்டுவதுதகுந்ததன்றே
வெங்கள்சுகவனர்வெற்பினென்றோர்பெண்ணியம்பினளே.

(இ - ள்.) ஒரு நாயகி யெமது சுகவனநாதர் மலைச்சார்பில் சூரியன் சிவந்து பிரகாசிக்கப் பலவிதபுட்பங்களு மலர்ந்து அதிகவாசனையை வீசுகின்ற அந்த ஆற்றங்கரைச்சோலையை வழிப்போக்கன் விட்டு விலகாமல் இன்பமனுபவிக்க நினைத்து அவ்விடத்தே வசிப்பதற்கு விரும்புவது தகுந்ததாக விருக்கின்றதன்றே வென்றுதானே சொல்லினள் எ-று.

சூரியன் சிவந்து பிரகாசிக்கவென்றது அந்திநேரத்தைக்காட்டி நின்றது.

கிரியாவிதத்தாநாயகிக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

பனிநாளிலந்தைப்பழத்திற்குச்செல்வதுபண்பலவென்
றினிதாமனைக்கறிவித்தத்தருவைவெட்டென்னவொரு
தனியாளைநாயகனேவக்குடாரந்தனைக்கிணற்று
நனிநீரிலிட்டுமறைத்தாள்சுகவனர்நாட்டவளே.

(இ - ள்.) சுகவனநாதர் நாட்டிலே ஒரு நாயகன் தன்மனைவியை நோக்கி நீயிந்தப் பனிகாலத்தில் அடிக்கடி யிலந்தைப்பழத்திற்காகச் செல்வது சரியல்லவென்று உபசாரத்தோடறிவித்து அப்பாலந்த இலந்தைமரத்தை வெட்டிவிடென்று ஓராளையேவியபோது அந்த நாயகி வீட்டிலிருந்த கோடாலியைநிறைந்த நீரையுடைய கிணற்றிற் கொண்டுபோய்ப்போட்டு மறைத்துவிட்டனள் எ-று. (சகூ)

இலக்கிதை குலடையென்னு நாயகிகளின்

இலக்கணம்.

வேறு.

ஒளிப்பறுதனதுசெய்கையுலகிலெல்லோருங்காண
வெளிப்படையாக்கிக்கொண்டமின்னிலக்கிதையாமென்பர்
களிப்பொடுகுலவரம்புகடந்துசேர்ந்துழலுங்காமி
துளிப்புயலிடிக்குமஞ்சாத்துணிவுடைக்குலடையாமே.

(இ. - ள்.) இலக்கிதையென்பவள் இரகசியமற்ற தனது கிரியைகளைப் பூமியின்கணெல்லோரும் அறியும்படி வெளியாக்கிக்கொண்ட நாயகியேயாமென்று சொல்வருயர்ந்தோர், (துளிக்கின்றமேகத்தின் இடிக்கும் பயப்படாத கொடுந்துணிவையுடைய) குலடையென்பவள் மனச்செருக்குடனே ஜாதிமார்க்கத்தை விடுத்துந் தன்வீடுவிட்டுப் புறஞ்சென்றும் அன்னியரைக் கூடித்திரிகின்ற பெருங்காமியாகிய நாயகியேயாம் எ-று. (சஎ)

இலக்கிதாநாயகிக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

இதுவரையாகியதாகியதேமற்றினிச்செயப்போ
மதுவுமுறுதிநடக்கின்றதுந்தவறுதுசிகுப்
பதுமதியின்மைகுரூரத்திலென்னபலன்சொலென்றாள்
விதுமுகநண்பனைநோக்கிச்சுகவனர்வெற்பொர்மின்னே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரில் ஒரு நாயகி சந்திரனையொத்த முகத்தையுடைய தனது கணவனைநோக்கி இதுவரைநடந்த காரியம் நடந்தே போயிற்றன்றோ, இனிமேற்செய்யப்போம் காரியமும் உறுதியாகவே நிறைவேறும், இப்போது நடக்கின்றகாரியமு நிற்கமாட்டாது நீயென்னை வீணிற்கோபிப்பது புத்தியில்லாமைதான், இந்தக்குரூரத்தாலுனக்கென்ன பிரயோசனமுண்டாகப்போகிறதென்று சற்று மதிப்பின்றிச் சொல்லினள் எ-று. (சஅ)

குலடாநாயகிக் கிலக்கியம்.
கவிக்கூற்று.

மிகுமழைபெய்யுமுகில்பலபுல்விளைவிக்குமலை
தொகுகனிகாட்டுந்தருக்களவ்வாறுதுணைவர்நல்கத்
தருவனவோவெம்பொருட்டென்னநீபடைத்தாயெனத்தே
னருமலரோனைவெறுத்தாள்சுகவனர்நாட்டோர்மின்னே.

(இ - ள்.) சுகவனநாதர் நாட்டில் ஒரு நாயகி தேன்பொருந்தி விளங்கா நின்ற கமலாசனத்திலிருக்கும் பிரமனைநோக்கி நீ மேகங்களையும் மலைகளையும் விருக்ஷங்களையும் சிருட்டித்திருக்கின்றாயே, அவைகளாலென்ன பிரயோசனம், மேகங்கள் அதிகமழையைமாத்திரம்பெய்யும், மலைகள் பலபுற்களையும் விளையச்செய்யும், விருக்ஷங்கள் அநேக பலங்களைக்காட்டும், இவையன்றி அந்தப்படி புருஷர்களைக் கொடுக்கமாட்டா அல்லவா ஆதலால் என்னைப்போலிருப்பவர்கள் பொருட்டாக என்னபடைத்தாயென்று மிகவுநொந்து வெறுத்தாள் எ-று. (சுகூ)

அனுசயானை நாயகியின்
இலக்கணம்.

தாங்கருற்றிடுசங்கேதத்தலமதுதவறியேனு
மாங்கதற்பின்வேண்டுஞ்சார்பமையுமோவமையாதோவென்
றேங்கல்பெற்றேனுமுன்சென்றிருப்பனோவென்னோகோனப்
பாங்கருக்கென்றேனும்புண்படுபவளனுசயானை.

(இ - ள்.) அனுசயானையென்பவள் தானும் அன்பனும் வழக்கப்படி பொருந்துகின்ற சங்கேதத்தலந் தவறிவிட்டதினாலாவது பின்பு குறிக்குஞ் சங்கேதத்தலம் நமக்குக்கிடைக்குமோ கிடையாதோவென்ற சந்தேகத்தினாலாவது தான் ஒரு சங்கேதத்தலத்திற்குப்போவ தன்முன்னமே தனதன்பன் அவ்விடத்திற்குப் போயிருப்பானோ எப்படியோவென்றாவது மனவருத்தப்படுகின்ற நாயகியேயாம் எ-று. (ருo)

அனுசயானைநாயகிக் கிலக்கியங்கள்.
பாங்கிக்கூற்று.

வன்னவசந்தம்புகவிலவங்கவல்லிப்புதரின்
பன்னமுதிர்ந்தனபார்த்தலுங்கண்புனல்பாய்ந்தவன்றி
யென்னலமுங்கொள்சுகவனர்வெற்பிவளெண்ணமென்னோ
மின்னனும்பனையோலையைப்போலவெளுத்தனவே.

(இ - ள்.) அழகிய வசந்தகாலம் வந்ததால் இலவங்கக்கொடிகளாலுண்டான புதரின் இலைகளெல்லாம் உதிர்ந்தன, அவைகளைப்பார்த்தவுடனே எவ்விதநன்மைகளையுங் கொண்டருளிய சுகவனநாதர் மலைச்சார்பில் இந்த நாயகிக்கண்கள் இரண்டும் நீரையொழுகவிட்டன, பிரகாசித்த கபோலங்களும் பனையோலைபோல் வெளுத்தன, இவள்கருத்தேதோ தெரியவில்லை எ-று.

இது வழக்கப்படி பொருந்துகின்ற சங்கேதத்தலம் தவறியது. (ருக)

இதுவுமது.

நாயகிக்குச் சகிசொல்லியது.

வருந்தேலிருக்கைமருவினியன்பன்மனைப்புறத்திற்
பெருந்தேரிரவிகதிரும்புகாதிளம்பேடையொடு
திருந்தேர்மயிலுறங்கத்தழைக்கும்பலதேம்பொழில்க
ளிருந்தேயுளவென்சுகவனநாதர்வெற்பேந்திழையே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சார்பில் ஆபரணங்களைத் தரித்தபெண்ணே நீ மனதுவருந்தாதே இனியுனதிருப்பிடத்தைப் போய்ச்சேர் அந்த நாயகன்வீட்டின் புறவாசலிற் பெருமைதங்கிய தேரையுடைய சூரியனது கிரணங்களும் பிரவேசிப்பதற்கு இடையின்றி திருந்தியவழகுமிகுந்த மயிற்கூட்டங்கள் இளமையாகிய பேடைகளோடு கூடி யேகாந்தமாக உறங்கும்படி தழைக்கின்ற வாசனைநிறைந்த பலசோலைகளிருந்தேயுள்ளன, ஆதலால் உனக்கென்ன குறை எ-று.

இது பின்பு குறிக்குஞ் சங்கேதத்தலங்கிடைக்குமோ கிடையாதோ வென்றெண்ணியது. (ருஉ)

இதுவுமது.

கவிக்கூற்று.

விழிபுனல்பாயவிமையாதுநிற்குமவ்வேலைதனி
லெழில்புனைசண்பகங்காதில்வைத்துக்கனியேந்தியன்பன்
வழிவரநோக்கினளந்தோசுகவனர்மால்வரையிற்
பொழிமதுமாலைப்புரிகுழற்பூண்முலைப்பூங்கொடியே.

(இ - ள்.) சுகவனநாதர் பெருமைதங்கிய மலைச்சார்பிலே தேன்சிந்துகின்ற மாலையை யணிந்துகட்டிய கூந்தலையும் ஆபரணங்கணிறைந்த முலைகளையுமுடைய பூங்கொடிபோன்ற வொரு நாயகி தனதுபிரியனைக்கருதி இரண்டு கண்களினும் நீர்பெருகியோட இமையாமல் எதிர்பார்த்துக்கொண்டு நிற்குஞ் சமயத்தில் அந்தநாயகன் அழகைத்தரித்த சண்பகமலரைத் தனதுகாதிற் சொருகி பலகனிகளையுங் கையிலேந்திக்கொண்டந்தவழியூடேவர அவனைக் கண்டனளையோ எ-று.

இது சங்கேதத் தலத்திற்குத்தான்போகுமுன் பிரியன்போயிருப்பானோ வெப்படியோவென்று வருந்தியது. (ருங)

முதிதை சாகசிகை பிரதிபாசதுரா
யென்னுநாயகிகளினிலக்கணம்.
வேறு.

பையவினைவின்படிக்கமைவுபாத்துமகிழ்கூர்பவண்முதிதை
செய்யமுடியாக்காரியமுஞ்செய்யத்துணிவாள்சாகசிகை
வெய்யதனதுசொல்லையவ்வவ்வேளைக்கிசைந்தவிதமாற்றுந்
தையல்பிரதிபாசதுரையென்பர்வடநூற்சான்றோரே.

(இ - ள்.) முதிதையென்பவள் மெள்ளத் தனதெண்ணப்படி சமயவமைவுகிடைக்கக்கண்டு சந்தோஷிக்கின்ற நாயகியேயாம்; சாகசிகையென்பவள் செய்யமுடியாத காரியங்களையுஞ் செய்வதற்குத் துணிகின்ற நாயகியேயாம்; பிரதிபாசதுரையென்பவள் கொடிய தனதுவார்த்தைகளை அவ்வவ்வேளைக்குத்தகுந்தபடி மாற்றுகின்ற நாயகியேயாமென்று வடநூலறிஞர் சொல்லுவர் எ-று. (ருச)

முதிதாநாயகிக்கிலக்கியம்.
கவிக்கூற்று.

முதுமாமன்மாமிகண்ணில்லாரிந்நாத்திமுழுச்செவிடி
சதுரானநாயகனூர்க்கேகினனெனைத்தாங்குததி
யிதுவேயென்றோர்பதிகற்கோதிக்கொங்கையெழநெகிழ்த்தாள்
புதுவார்சுகவனர்வெற்பினண்மேனிபுளகிக்கவே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரிபில் ஒருநாயகி வழிச்செல்பவனாகிய வொருவனைநோக்கி யென்னுடைய கிழமாமனும் மாமியுங் கண்ணில்லாதவர்கள் இந்நாத்தியோ முழுதஞ் செவிடானவள் வலிமைதங்கிய சொந்தக்கணவனோ அயலூர்க்குப் போயிருக்கின்றான் ஆதலால் எனைக்காப்பதற்கு இதுவே நல்லசமயமென்று சொல்லிக்கொண்டு சரீரம்புளகிக்கவும் முலைகள் பூரிக்கவும் அடுத்த ரவிக்கைமுடியை யவிழ்த்தாள் எ-று. (ருரு)

சாகசிகாநாயகிக்கிலக்கியம்
கவிக்கூற்று.

என்விழிகட்டுனைக்காண்பனென்றங்கனுற்றேபிடித்து
நின்விழிகட்டுவனென்னைப்பிடியெனநேயபதி
தன்விழிகட்டிச்சுகவனர்நாட்டத்திவிட்டனைப்
பின்விழியானிலவிற்கூய்த்துய்த்தாளொருபெண்கொடியே.

(இ - ள்.) சுகவனநாதர்நாட்டிற் பூங்கொடிபோன்ற வொருநாயகி சந்திரிகையில் விளையாடும்போது தனது கணவனைநோக்கி நீ யென்னுடைய கண்ணைக்கட்டு நானுன்னைப்பிடிப்பேனென்று அவனு லப்படிக்கட்டப்பட்டு அவனைப்பிடித்தபின் யானுனது கண்களைக்கட்டுகிறேன் நீ யென்னைப்பிடியென்று அந்தபிரியனுடைய கண்களைச் கட்டிவிட்டு அப்போதேதான் கண்சாடையால் ஒருவிடனையழைத்துச் சேர்ந்தாள் எ-று. (ருசு)

பிரதிபாசதுராநாயகிக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

மதிநுவியாற்றைக்குடங்கொடுநீந்துழிவள்விரலா
லெதிர்மாமுதலைதள்ளிப்போய்த்துய்த்தேனவனின்பமெனுந்
ததிகோன்சகியுருக்கொண்டுற்றதோர்ந்தித்தகைக்கனவு
விதியோகண்டேனென்றுரைத்தாள்சுகவனர்வெற்பொர்மின்னே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரபி லொருநாயகியானவள் சகியைப்போலே தனதுகணவன் மாறுவேடம்பூண்டு வந்திருக்கச் சகியென்றேநம்பி பெண்ணே நான் இந்தக்கோட்டையைத்தாண்டி அந்தநதியை யொருகுடங்கொண்டு நீந்துகையிற் குறுகிட பெரியமுதலையைக்கூரிய விரலாற் றள்ளிவிட்டு அக்கரைசார்ந்து அந்தப்பிரியனுடையவின்பத்தை யனுபவித்தேனென்று சொல்லிக்கொண்டு வரும்போதே கணவன் மாறுவேடம்பூண் டிருப்பதைத்தெரிந்து எனதுவிதியோ விப்படிப்பட்ட சொற்பனங்கண்டேனென்றுசொன்னாள் எ-று. (ருஎ)

அபலாபசதுராநாயகியினிலக்கணம்.

மிக்கமோசவார்த்தைகளைவேளைதெரிந்துவிரித்துரைத்துந்
துக்கநீடியவள்போலச்சும்மாவழுதுஞ்சொந்தநண்பன்
பக்கமேவிவேண்டிநிற்கும்படியேயுபாயம்பாராட்டத்
தக்கபாவையபலாபசதுரையெனுமிச்சகதலமே.

(இ - ள்.) அபலாப சதுரையென்பவள்மிகுந்த மோசவார்த்தைகளைச் சமயமறிந்து சொல்லியும் விசனமதிகரித்தவள்போலப் பொய்யாக வழுதுந் தனது சொந்தக்கணவன் தன்னருகில்வந்து உபசரித்து வேண்டிக்கொள்ளும்படி யுபாயஞ்செய்யத் தகுந்த நாயகியேயா மென்றிந்த வுலகஞ்சொல்லும் எ-று. (ருஅ)

அபலாபசதுராநாயகிக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

சுகவனரூர்மின்னிருட்கரந்தன்னியற்றேய்ந்திடக்கான்
புகவுருமாற்றிவந்தான்கோனவனெப்புல்லிபறிந்
திகழ்திருடாநிற்பிடிக்கநிதந்திரிந்தேன்கிடைத்தாய்
மிகவெளியாச்சுன்பண்பென்றழுதாள்பதிவேண்டினனே.

(இ - ள்.) சுகவனநாதர்நகரில் ஒருநாயகி யொருவருக்குந் தெரியாமல் இருளிலேமறைந்து பரபுருடனைக்கூடுவதற்கெண்ணி யொருசோலையிற் பிரவேசித்தாள் அப்போதவளுடைய கணவனும் மாறுவேடம்பூண் டங்கேவந்தான் அவனையந்தச் சோரபுருடனென்று சேர்ந்து பின்பு கணவனென்பதையறிந்து யாவராலும் நிந்திக்கப்பட்ட திருடாவுன்னைப் பிடிப்பதற்கே நானனுதினம் அலைந்து கொண்டிருந்தேன் இன்று அகப்பட்டாய் உனது குட்டெல்லாம் மிகவும் வெளியாயிற்றென்றழுதனள் அதுகண்ட கணவன் வேண்டாமென்று உபசரித்தான் எ-று. (௫௯)

சாமானியையினுட் பிரிவும்.

அவ்விலக்கணமும்.

ஆங்குமொழிசாமானியைக்குளாகந்துகசாமானியையென்
றேங்குபவளுண்டொருத்தியன்னாளுரியகணவற்குப்பயந்து
தீங்குசிலநாண்மறைந்தியற்றித்தேர்ந்துபின்புவெளிச்சென்று
பாங்குபெறுநாட்டினிற்புதியபரத்தையாகும்பழிப்பினளே.

(இ - ள்.) முன்னமேசொல்லிய சாமானியைக்குள் ஆகந்துகசாமானியை யென்றொருத்தியுண்டு; அவளொத்தன்மையளோ வெனிற் றனதுகணவனுக்கஞ்சி யிரகசியமாகச் சிலகாலம் வீட்டிலிருந்துகொண்டே துன்மார்க்கத்தினடந்து பின்பு தேறி வெளியேறி வளமைபெற்ற நல்லநாட்டிற்புகுந்து நூதனவேசையாயிருக்குங் குற்றமுடையவளே எ-று. (௬0)

ஆகந்துகசாமான்யாநாயகிக் கிலக்கியம்.

நாயகியெண்ணியது.

அன்பற்கடங்கிமறைவாயிதுவரையன்னியர்பா
லின்பத்தினைச்சுகித்தேனித்தனைதொரட்டென்னவினித்
துன்பப்படாவிலைமாதிர்தெருவடுத்துத்தெளிந்து
தென்பச்சுகவனர்வெற்பிற்சதானந்தந்தேடுவனே.

(இ - ள்.) யானிது காலவரை கணவனுக்குப்பயந்தே மறைவாகப் பரபுருடர்களைக்கூடி யின்பஞ்சுகித்திருந்தேன் இத்தனைபாடென்ன இனிவருத்தப்

படாத விலைமாதர் தெருவிலடுத்து மனந்தேறி யதிகதென்பாக அந்தச்சுகவனநாதர் மலைச்சார்பி லெப்போது மானந்தத்தைச் சம்பாதிப்பேன் எ-று. (௬௧)

பதினாறுவிதநாயகிகள்வருமாறு.

வேறு.

மாதருக்குண்மத்திமைநற்பிரகற்பையென்றவிருவருந்தீராதி
பேதவர்க்கத்தறுவர்களாய்ப்பின்சேட்டாகனிட்டாதிபேதநண்ணி
யேதமற்றவியல்பினிற்பன்னிருவர்களாய் முத்தையைச்சேர்த்தெண்
ணவன்னோர், பூதலத்தின்மீதுபதின் மூவகையராவரின்னம்புகல்கிற்
பேமால்.

(இ - ள்.) பெண்களுக்குள்ளே மத்திமை பிரகற்பையென்ற விருவர்களுந் தீரை அதீரை தீராதீரையென்னும் பேதங்களாலாறுவகையராகி யப்பாற் சேட்டைகனிட்டையென்னும் பேதங்களைச்சார்ந்து குற்றமற்ற குணமுடைய பன்னிருவகையராகி முன்னின்ற முத்தையையும் உடன்கூட்டியெண்ண அவர்கள் பூமியின்கண்ணே பதின்மூவராவார்கள் இன்னமுஞ் சொல்லுவோம் எ-று.

இதுவுமது.

பரகீயைவகையிலிருவருமொருசாமானியையும்பகர்ந்துபோந்த
தரமேவுபதின்மூவர்தமிற்பொருந்தவிருமருங்குந்தருக்கியோடி
யரநேருமதர்விழிநாயகிகள்பதினறுவர்களாயமைவாரென்ன
மரபாகவடமொழிநாவலரொவருமினிதுணரவகுத்தாரன்றே.

(இ - ள்.) பரகீயாபேதத்தி லிருவரும் ஒருசாமானியையும் மேலே சொல்லிவந்த பக்குவத்தையுடைய பதின்மூவர்களிற் பொருந்தவே (இருபக்கங்களினுங் காதுவரைதாவிச்சென்று அரத்தை நிகர்த்து மதர்த்தகண்களையுடைய) நாயகிகள் பதினாறுபேர்களாய் அமைவார்களென்று முறையாகப் பூர்வகிரந்தகர்த்தர்களெல்லோரும் இனிதாக வறியும்படி சொன்னார்கள் எ-று. (௬௨)

கந்தமலிமலரிரண்டாற் பதின்மூப்பேதகளபதனசுவீயையிலக்க
ணமுமன்றிப், பந்தமுளவிருவகையாய்வழங்காநின்றபரகீயையிலக்க
ணமும்பணங்கைக்கொண்டு, பிந்தமருவுறுமொருசாமானியைக்குப்
பெற்றவிலக்கணமுமற்றைப்பிரிவுஞ்சொன்னோ, மிந்தவிதநாயகிகளெ
னுமூவர்க்குமிசைந்த பொதுக்குணங்களைமேலெடுத்துச்சொல்வாம்.

(இ - ள்.) வாசனைமிகுந்த விரண்டு புட்பங்களாலே பதின்மூன்று பேதங்களையுடைய (தளபந்திமிர்ந்த முலைபெற்ற) சுவீயையினது இலக்கணத்தை

யும் அழகுள்ள விருபேதங்களையடைந்து வழங்கிவருகின்ற பரகீயையினது இலக்கணத்தையும் யாவரிடத்தினும் பணத்தைக் கைப்பற்றிக்கொண்டபின் சேர்வதற்கிசையும் ஒரு சாமானியைக்குரிய விலக்கணத்தையும் மற்றைப் பிரிவுகளையும் இதுவரையிற் சொன்னேம் இனியிந்தத் திரிவிதநாயகிகளுக்குஞ் சம்பந்தமான பொதுக்குணங்களை யெடுத்து விவரிப்போம் எ-று. (௬௩)

உத்தமாதிகுணநாயகிகளின் பேதமும்.

அவ்விலக்கணமும்.

உயர்பிரியநாயகிகள்குணபேதத்தா லுத்தமமத்திமவதமவொழுங்கேயவ்வப், பெயர்பெறுவருத்தமநாயகிதன்கேள்வன்பிழைசெயினுந்தானிதமேபேணிச்செய்வா, ளயர்வரியமத்திமநாயகிமற்றன்னேனடுத்தேகின்றெவைசெயினுமவையேசெய்வா, டுயரதமநாயகிநன்னலஞ்செய்தாலுந்துணிந்ததுதீங்கெனவெகுளுந்தோகையாமே.

(இ - ள்.) (உயர்ந்த பிரியத்தைத்தரும்) திரிவிதநாயகிகளுங் குணபேதங்களாலே வுத்தமநாயகி மத்திமநாயகி அதம்நாயகியென முறையேபெயர் பெறுவார்கள்; அவர்களுள் உத்தமநாயகியென்பவள் தனது கணவன் குற்றத்தைச்செய்தாலுந் தான் விரும்வி இதமேசெய்கின்றவள், (மெலிவில்லாத) மத்திமநாயகியென்பவள் அக்கணவன் நன்மைசெய்தால் தானுநன்மையேசெய்து தீமைசெய்தால் தானுந்தீமையேசெய்து வருபவள், (துன்பத்தையுடைய) அதமநாயகியென்பவள் தன்கணவன் நன்மைகளையே செய்தாலும் அவற்றைத் தீமைகளாகவே பாவித்துக் கோபிக்கின்றவள் எ-று. (௬௪)

உத்தமநாயகிக்கிலக்கியம்

கவிக்கூற்று.

மறுமான்முலைக்குறிமார்பொடுநேர்மணவாளனைக்கண்
டுறுமூரலாஞ்சந்தனம்பூசிநோக்கெனுமுற்பலத்தாற்
சிறுகாமலர்ச்சித்தின்சொற்பனிநீர்தெளித்தேவியப்ப
நறுநேயவேடிக்கைசெய்தாள்சுகவனர்நாட்டணங்கே.

(இ-ள்.) சுகவனநாதர்நாட்டில் ஒருநாயகியானவள் வேறொருமாதினுடைய முலைக்குறிமார்பிற் றேன்றவந்த தனதுநாயகனைக்கண்டு நிறைந்த சிரிப்பாகிய சந்தனத்தை யவன்மேற்பூசிக் கண்களாகிய நீலோற்பலமலர்களாற் குறையாமற் பூசைசெய்து வுபசாரவசனங்களாகிய பனிநீரைத்தெளித்து அதிசயமுண்டாகும்படி நல்லபிரியத்தோடு இப்படி யொருவேடிக்கையைச் செய்தனள் எ-று. (௬௫)

மத்திமநாயகிக்கிலக்கியம்.
கவிக்கூற்று.

பிழைத்துந்துணிந்துகுழல்கோதிக்கோன்சுகம்பேணிநண்ணத்
தழைக்குஞ்சினக்கட்கணையாலொதுங்கச்செய்தாளவன்பின்
குழைக்குஞ்சொற்கொண்டுடைநீக்கச்சுகவனர்குன்றவள்பொன்
னிழைக்கும்பணித்தன்னுடற்கற்பகக்கொடியீய்ந்தனளே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரிலொருநாயகியானவள் தனது நாயகன் தனக்குக்குற்றஞ் செய்திருந்தும் அதையோசியாமலும் பயமில்லாமலுந் துணிந்துவந்து தன்கூந்தலைக்கோதிச் சரசஞ்செய்யவிரும்பி அடுக்கவுடனே தழைத்த கோபத்தையுடைய கண்களாகிய பாணங்களினால் அவனை விலகச் செய்தனள். பின்னும் அவன்மனத்தை யுருக்கத்தக்க வுபசாரவசனங்களைச் சொல்லிக்கொண்டு சேலையை மெல்லநெகிழ்க்கவே பொன்னாலிழைத்த ஆபரணங்களை யணிந்த தனதுசரீரமாகிய கற்பகக்கொடியை அந்நாயகி தன்நாயகனுக்குத் தானமாகக்கொடுத்தாள் எ-று. (௬௬)

அதமநாயகிக்கிலக்கியம்
தலைவியைநோக்கிச் சகிசொல்லியது.

கதிராலுடல்வருந்தும்பொடியாற்பதங்கன்றுமிற்கென்
றெதிர்தாமரையைக்குடையாவெடுத்துமண்ணெங்குமண
முதிர்நீர்தெளிக்கும்பதியைச்சுகவனமூர்த்திவெற்பிற்
கொதிவேலெனச்செங்கண்கொண்டுமிரட்டலென்கோமளமே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரில் சூரியகிரணங்களாலே உனக்கு மேனிவருந்துமென்றும் பொடியாலே கால்கள் கன்றிவிடுமென்றும் எண்ணியெதிராகத் தாமரைப்பூவைக்குடையாக வெடுத்துப் பிடித்தும் தரைமுழுதும் வாசனைமுதிர்ந்த பனிநீர் முதலியவைகளைத்தெளித்தும் உபசரித்துக்கொண்டு வருகின்ற உன்நாயகனை இளமைபழகையுடைய பெண்ணே நீ உலையிற்காய்ந்த வேல்போற்சிவந்த கண்களைக்கொண்டு அடிக்கடிமிரட்டுவதென்ன சொல்வாய் எ-று. (௬அ)

மேலேசொல்லியநாயகிகளுக்குத்
திருத்தாதிபேதங்களும் அவ்விலக்கணங்களும்
வேறு.

திருந்துமிவரோதிருத்தையதிருத்தையொடு திருத்தாதிருத்தை
யென்னப், பொருந்துவராற்கலவிசெயும் பொழுததனிற்றிருத்தியுற்ற
பூவையன்னாள், வருந்தரியதிருத்தையுருள் திருத்தையுற்றுமுருவடி

வேற்கண்ணி, முருந்தனையமுறுவலிளமுலைத்திருத்தாதிருத்தையென்
பர்மூதுநூல்வல்லோர்.

(இ - ள்.) திருந்திய விக்நாயகிகளே கிரீடாசமயத்தில் திருத்தையென்றும், அதிருத்தையென்றும், திருத்தாதிருத்தையென்றும், திரிவிதபேதங்களைப் பொருந்துவார்கள்; அவர்களில் (வருந்துதலில்லாத) திருத்தையென்பவள் அந்தக் கிரீடையினாலே திருத்தியடைந்த (நாகணவாய்ப்புட்போன்ற மொழிகளையுடைய) நாயகியாம்; அதிருத்தையென்பவள் அங்ஙனந் திருத்தியடையாத நாயகியாம்; (மயிலிறகின் அடிக்குருத்தைநிகர்த்த பற்களையும், இளமை தங்கிய தனங்களையுமுடைய) திருத்தாதிருத்தையென்பவள் அக்கிரீடையாலே திருத்தியடைந்தும் அடையாதவள்போலிருக்கின்ற (கூரிய வேலையொத்த கண்களையுடைய) நாயகியாமென்று பூர்வ கிரந்தகர்த்தர்கள்சொல்வர் எ-று.

இப்பெயர்களை வடநூலார் த்ரிப்த்தா, அத்ரிப்த்தா, த்ரிப்த்தாத்ரிப்த்தா வென்பர். (சுகூ)

திருத்தாநாயகிக்கிலக்கியம்.

நாயகன் பாங்கனொடு சொல்லியது.

இளைத்தேன்மிகவுநிற்கேநானடிமையென்றின்பவெள்ளந்
திளைத்தேதளரத்தழுவிக்குதலைசெழித்தபலாச்
சுளைத்தேனெனப்பலசொல்வாளைக்கூடிச்சுரதவகை
விளைத்தேனெனக்கெதிருண்டோசுகவனர்வெற்பிடத்தே.

(இ - ள்.) கிரீடாசமயத்தி லென்னைநோக்கி யிக்கலவியால் யான்மிகவும் அலுத்துப்போனேன், உனக்கே நான் அடிமையென்று அந்த வின்பக்கடலிலமுந்திமிதந்து தளர என்னைத்தழுவிக்கொண்டு செழித்துப் பழுத்தபலாக்கனிச் சுளையினது தேன்போலினிக்கப் பலதுதி வசனங்களைச்சொல்லும் அந்நாயகியைச் சுகவனநாதர் மலைச்சாரில் யான்கூடி அநேககலவிகளை நடத்தினேன் எனக் கிணையானவர்கள் வேறே யிவ்வுலகிலுண்டோ எ-று. (எ௦)

அதிருத்தாநாயகிக்கிலக்கியம்.

நாயகன் பாங்கனொடு சொல்லியது.

மார்பையடிக்கடிதட்டிப்புட்போற்கத்திவைதுகிள்ளிப்
பார்வையினாற்றெருடையாலெச்சரிக்கையணிச்சிரிப்பை
நேர்விவரீதப்படுத்தலுத்தும்பின்னெடிதிமுத்துச்
சேர்வலிவளை வெல்வாரார்சுகவனர்சேலத்திலே.

(இ - ள்.) சுகவனநாதர் சேலமாநகரி லிந்தநாயகி கிரீடாகாலத்தில் அடிக்கடி மார்பைத்தட்டியும் மாடப்புறவைப்போற் கத்தியும் வந்தபடி திட்டியும்

நகங்களாலே கிள்ளியும் கண்களாலுந் தொடைகளாலுஞ் சைகைசெய்து அடிக்கடி யெச்சரித்தும் விபரீதமாக நேசோசிரித்தும் என்னைவருத்தி யென்னாலே நடத்தப்பட்ட கலவியால் அலுத்துப்போயும் பின்னுமென்னைப் பலவந்தமாக விழுத்துக்கொண்டு சேருவள் இவளை யார் சுரதத்தால் வெல்லவல்லவர்கள் எ-று. (எக)

திருத்தாதிருத்தா நாயகிக்கிலக்கியம்.

நாயகன்பாங்கனொடுசொல்லியது.

கனிவாய்முறைமுறையோங்கித்தன்கூந்தல்கலைந்தசையத்
தனிமாமலர்குழைந்தென்னவென்மார்பினிற்சாய்ந்துநில்லி
தினிதாமினிக்கொஞ்சமேமேலெறென்றேசொலுமேர்திழையைத்
தொனிகூர்கலவியில்வென்றேன்சுகவனர்சோலையிலே.

(இ - ள்.) கிரீடாகாலத்தில் அதிக மனக்கனிவோடு வரவர அத்தொழிலால் உயர்ந்து தனது கூந்தலவிழ்ந்து அசைய பெருமைதங்கிய வொருபூ வதங்கியதுபோல் துவண்டு என்மார்பிலேசாய்ந்து நில்லுநில்லு இந்தச் சுரதமிகவும் இனிதேயாயினும் இனிக்கொஞ்சம் என்மேலே நீயேறிக் கலவிசெய்யென்று சொல்லுகின்ற அந்தநாயகியை சுகவனநாதர்மலைப் பூஞ்சோலையின்கண்ணே ஆபரணங்களெல்லாம் ஒலிக்கும்படி நடத்தும் அக்கலவியினால் யான் வென்றேன் எ-று. (எஉ)

இன்னுமந்த நாயகிகளுக்கு திவ்வியாதிபேதங்களும் அவ்விலக்கணங்களும்.

மின்னுறழுநுண்ணிடைநாயகிகண்மற்றோர் விதத்தாற்றிவ்வியையுங்கன்ன, லின்னுரைசொலதிவ்வியையுந்திவ்வியாதிவ்வியையுமென முப்பேத, மன்னுவர்வானுள்ளவடிவ்வியையல்லாளதிவ்வியைமுன்வானுளாளாய்ப், பின்னுலகில்வருபவளேதிவ்வியாதிவ்வியையாம்பிரிக்குங்காலே.

(இ - ள்.) (மின்னற்கொடிபோன்ற சிறிய இடையினையுடைய) அந்நாயகிகள் மற்றொரு காரணத்தாலே திவ்வியையென்றும், (கரும்பினுமினிய சொற்களைச் சொல்லுகின்ற) அதிவ்வியையென்றும், திவ்வியாதிவ்வியையென்றும் வகுக்கப்பட்ட மூன்று பேதங்களையும் பொருந்துவார்கள்; பிரித்துச்சொல்லுங் காலத்தில் திவ்வியையென்பவள் தேவருலகத்திருக்கும் நாயகி; அதிவ்வியையென்பவள் அதுவல்லாத வுலகத்திருக்கும் நாயகி; திவ்வியாதிவ்வியையென்பவள் முன்னமே தேவருலகத்திருந்தவளாய் அப்பால் யாதேனு மொருகாரணத்தால் அதுவல்லாத வுலகத்தில் வந்து பிறந்திருக்கும் நாயகியாம் எ-று.

இப்பெயர்களை வடநூலார் திவ்யா அதிவ்யா திவ்யாதிவ்யாவென்பர். ()

திவ்வியாதிபேதமூன்றற்குமிலக்கியம்.
கவிக்கூற்று.

சசிமுதலோர்சந்திரமதியர்தியர்தாரளக
வுசிதசனகியுருக்குமணியுள்ளிட்டோரொவருங்
கசிவுறுமன்பிற்சுகவனர்பாதங்கருதியன்றே
சுசிபெறுதத்தங்கருத்தின்படிக்கின்பந்துய்த்தனரே.

(இ-ள்.) தேவருலகத்திருக்கும் இந்திராணி முதலெந்தநாயகிகளும் பூமியின்கண்ணிருந்த சந்திரமதி முதலெந்தநாயகிகளும் முன்னேதேவருலகத்திருந்து ஒருகாரணத்தாற் பூமியிற்றோன்றிய மாலையணிந்த கூந்தலையும் ஆசாரத்தையுமுடைய சீதை உருக்குமணி முதலெந்தநாயகிகளுங் கனிந்தபத்தியுடனே சுகவனநாதரது திருவடிகளைத் தியானித்தல்லவோ பரிசுத்தத்தைப் பெற்ற தங்கள் தங்களெண்ணப்படி யின்பத்தை யனுபவித்திருந்தார்கள் எ-று. (எசு)

அன்றியும் வேறு வேறு காட்டுதும்.

திவ்வியாநாயகிக்கிலக்கியம்.
தலைவனெண்ணியது.

அடியாதிசேடன்முடிமேற்படிபடியாதுவிழி
நெடிதோவியத்தலர்பங்கேருகத்ன.தநிகர்த்திலங்க
வடிவாலராமவிருணீக்கித்தோன்றுமிம்மாதெவளோ
பொடிபூசுமேனிச்சுகவனநாதர்பொருப்பிடத்தே.

திருநீறணிந்த ஞானசொருபத்தையுடைய சுகவனநாதர் மலைச்சாரிபில் ஆதிசேடனது பணமகுடங்களின்மேலமைந்த பூமியின்கண்ணே தனதுபாதங்கள்படாமலுங் கண்கள் மிகவுஞ் சித்திரத்திலேயெழுதிய தாமரைமலர்களைப்போல் விரிதல்குவிதலின்றிப் பிரகாசிக்கவும் அழகின்காந்தியாலே சோலையிருளைத்துரத்தி யிப்போது தோன்றுகின்ற இந்தப்பெண் எவளோ தெரியக்கூடவில்லை எ-று. (எரு)

அதிவ்வியாநாயகிக்கிலக்கியம்
தலைவனெண்ணியது.

மயலாலுளத்துளவாட்டத்தைக்கூந்தன்மலருணர்த்தக்
கயலாயபார்வையெதிர்ந்தோரறிவைக்கவர்ந்துவிட
புயலூர்சுகவனர்வெற்பிற்பொலியுமிப்பூவைதன்
றியலோமயில்சொற்செயலோகுயில்சிற்றிடையில்லையே.

(இ-ள்.) விரகத்தினாலே மனத்திலுண்டாகிய வாட்ட மித்தன்மைத்தென்ற தனது கூந்தலிற்சூட்டிய மலர்களும்வாடிப் பிறர்களுக்குத் தெரியக்கா

ட்டவும் கெண்டைமீன்களையொத்த கண்கள் எதிரே வருகின்றவர்களுடைய புத்தியைக் கொள்ளையிட்டு உட்கொள்வனபோல்மூடிப் பின்னதை வெளியே விடுவனபோற் றிறக்கவுஞ் சுகவனநாதரது மேகங்கள் தவழாநின்ற மலைச்சார்பிற்பொலிந்துதோன்று மிந்தப்பெண்ணினுடைய சாயலோ மயிலையொக்குஞ் சொற்களின் செய்கையோ குயிலையொக்குஞ் சிறிய இடையொன்றுமாத்திரமில்லை எ-று. (௭௬)

திவ்வியாதிவ்வியாநாயகிக்கிலக்கியம்.

தலைவனெண்ணியது.

நரகன்னியர்க்குளொருகன்னியாய்நடுநண்ணினுமுற்
சுரகன்னியேயிவளந்நூலிலக்கணந்தொக்கமையால்
வரகன்னியல்லளெனினிக்கருணைமகிமையுண்டோ
சிரகன்னிநாதர்சுகவனவெற்பிற்றிகைக்குநெஞ்சே.

(இ - ள்.) சிரசிலே கங்காதேவியைத் தரித்தவராகிய சுகவனநாதர் மலைச்சார்பிற் சந்தேகித்துத் திகைக்கின்றமனமே! இந்தப்பெண் பூலோகமாதர் கூட்டத்தில் ஒருத்தியாக நடுவேபொருந்தினளேனும், இவள் முற்பிறப்பிலே தெய்வ கன்னியேயாம், ஏனெனில் அத்தெய்வகன்னிகளுக் குரியநூலிற்சொல்லப்படும் இலக்கணங்களெல்லாம் கூடியிருக்கின்றமையாலே தான், அன்றியுமிவள் அப்படித் தெய்வகன்னிகையல்லாளாயின் இவளிடத்தே யிவ்வித காருண்யமும் பெருந்தன்மையும் வருமோ எ-று. (௭௭)

பின்னுமந்நாயகிகளுக்கு

அன்னியசம்போகதுக்கிதாதிபேதங்களும்

அன்னியாசம்போகதுக்கிதையினது இலக்கணமும்.

மற்றுமவரன்னியாசம்போகதுக்கிதைவின்மதனேங்கச்சென்
றெற்றுவிழிவக்ரோத்திகருவிதைநன்மானவதியெனவுநாம
முற்றிடுவரன்னியாசம்போகதுக்கிதைபின்னொருத்திதன்னைப்
பற்றிசைதன்பதிபுணர்ந்தபரிசுணர்ந்துதுக்கிக்கும்பாவையாமே.

(இ - ள்.) பின்னுமந்த நாயகிகள் அன்னியசம்போகதுக்கிதையென்றும் (வில்லேந்திய மன்மதனும் பயப்படும்படி தாவிமோதுகின்ற கண்களையுடைய) வக்குரோத்திகருவிதையென்றும் (நன்மையையுடைய) மானவதியென்றும் நாமபேதங்களை யடைவார்கள். அன்னியசம்போகதுக்கிதையென்பவள் வேறேயொரு நாயகியை யன்பிசைந்த தனது கணவன்கூடிய தன்மையையறிந்து விசனப்படும் நாயகியாம் எ-று.

இப்பெயர்களை வடநூலார் அன்யசம்போகதுக்கிதா வக்ரோத்திகர்விதாவென்பர். (௭௮)

அன்னியசம்போகதுக்கிதைக் கிலக்கியம்.

தலைவிசகியை வினவுதல்.

தருக்ககலாதசகியேசுகவனர்தஞ்சிலம்பின்
மருக்கமழ்பூம்பொழிற்கேகினையோவன்றிவாய்மைமன
வுருக்கமிலான்மனையுற்றனையோவுன்னுடலிலெங்கு
முருக்கமலரணியுண்டாகியதென்மொழிகுவையே.

(இ - ள்.) நீங்காத மனக்களிப்பையுடைய சகியே! நீ சுகவனநாதர் மலைச்சார்பில் வாசனைவீசுகின்ற பூஞ்சோலைக்குப்போயிருந்தனையோ, அல்லது சத்தியமும் மனவிரக்கமுமில்லாத அந்தப்பாவியினுடைய வீட்டுக்குப்போயிருந்தனையோ, யுனது சரீரமெங்கும் முருக்கம்பூ வாபரணமுண்டாயிருக்குங் காரணமென்ன சொல்வாய் எ-று. (எக)

வக்ரோத்திகருவிதையின் பேதங்களும்

அவ்விலக்கணங்களும்.

விதித்துள வக்ரோத்திகருவிதைக்குளுயர்பிரேமகருவிதைகும்பம்போற், கதித்தமுலைச்சவுந்தரியகருவிதையென்றிருவகைதன்கணவனேய,மதித்துமதர்த்திடுமடந்தைபிரேமகருவிதைதனதுவடிவின்பொற்பா, லுதித்தசெருக்கினளந்தச் சவுந்தரியகருவிதையென்றுணர்த்துநூலே.

(இ - ள்.) விதித்திருந்த வக்ரோத்திகருவிதைக்குள் (உயர்ந்த) பிரேமகருவிதையென்றும் (குடங்களைப்போல்வளர்ந்தமுலைகளையுடைய) சவுந்தரியகருவிதையென்றும் இரண்டு பேதங்களுண்டு; பிரேமகருவிதையென்பவள் தனது நாயகன் தன்னிடத்துவைத்த பிரியத்தைக்குறித்துக் கருவமடையுநாயகி; அந்தச்சவுந்தரிய கருவிதையென்பவள் தனது சரீரவழகினாலுண்டாகிய கருவமுடைய நாயகியென்று வடநூலறிவிக்கும் எ - று.

இப்பெயர்களை வடநூலார் ப்ரேமகர்விதா செளந்தர்ய கர்விதாவென்பார்.

பிரேமகருவிதாநாயகிக் கிலக்கியம்.

தலைவிசகியொடு சொல்லியது.

மாமிபொறுமையென்றுமென்கண்சாடைவழித்திரும்புஞ்
சாமியெனக்குத்தகுமணிப்பூண்கட்ராமவிரான்
பூமியிலேனையர்போதனையாற்றப்பிப்போவதுண்டோ
தேமிளிர்சோலைச்சுகவனர்வெற்பிற்செழுங்குயிலே.

(இ - ள்.) சுகவனநாதரது வாசனைபொருந்தி விளங்குஞ்சோலைசூழ்ந்த மலைச்சார்பில் வசிக்கின்ற செழியகுயில்போலுஞ் சகியே! எனதுமாமியாள்

கொண்டபொருமையா லென்னவாகும் என்கண்சாடைகண்டு அந்தவழியி லே திரும்புகின்ற எனது நாயகன் எனக்குத்தகுந்த ரத்நாபரணங்களைக் கொடாமலிருக்கமாட்டான் அன்றியு மிவ்வுலகி லன்னியருடைய போதனையி னாலே யென்மேலவன்வைத்த பிரியந்தவறிப்போவதுண்டோ வொருபோது மில்லை எ-று. (அக)

சவுந்தரியகருவிதாநாயகிக்கிலக்கியம்

தலைவிசகியொடுசொல்லியது.

வழுவற்றமோகத்தெளிவேவிண்ணீள்கண்வனசநகை
முழுமுத்துவாயமுதந்தனஞ்செப்பென்றென்முற்றுதிக்குங்
கொழுநற்குநானென்னசொல்வேன்சொல்லாவிடிற்குற்றமன்றோ
செழுமைச்சுகவனர்வெற்பூடுலாவியசித்திரமே.

(இ - ள்.) அழகிய சுகவனநாதர் மலைச்சார்பிற் சித்திரம்போ லுலாவுகின்ற சகியே! என்னைப்பார்த்து நிறைந்த மோகத்தெளிவே உனதுநெடியகண்கள் செந்தாமரை மலர்களே, பற்கள் முழு முத்துக்களே, வார்த்தையமிர்தமே, தனங்கள் சிமிழ்களேயென்று கொண்டாடி யெனக்கு எதிரோதுதிக்கும் என்னுடைய நாயகனுக்கு நானென்ன பிரதியுத்தரஞ்சொல்லுவேன், அங்ஙனஞ்சொல்லாம லத்துதிகளை யங்கீகரித்துக் கொண்டிருந்தாலது குற்றமாக முடியுமன்றோ எ-று. (அஉ)

மானவதியின்பேதங்கள்.

மானவதிமானமிக்காண்மணவாளனபராதமதித்தேயந்தக்
கானளகமயில்வெளியிற்காட்டுசெய்கைமானமதுகருதுங்காலை
யீனமறுகுருமானமிணங்கியமத்தியமானமிலகுமான
மானவகையாலொருமூன்றா மவற்றினியல்பையினியறிவிப்போமால்.

(இ - ள்.) மானவதியென்பவள் மானமிகுந்தவளேயாம், அந்த (வாசனை பொருந்திய கூந்தலையுடைய) நாயகியானவள் தனது கணவன்செய்த அபராதத்தை யுட்கொண்டு வெளியாகக்காட்டுகின்ற கோபக்குறிப்பே மானமெனப்படும், அம்மானம் யோசிக்குமிடத்துக் (குற்றமற்ற)குருமானமென்றும் (பொருந்திய) மத்தியமானமென்றும் இலகுமானமென்றும்உண்டாகிய கூறுபாட்டால் மூன்றாகவழங்கும்; அவற்றின்றன்மைகளை யினிமேலறிவிப்போம் எ-று.

திரிவிதமானங்களும்

உண்டாவதற்குக்காரணம்.

வேற்றுவனிதையைக்கொழுநன்மேவுகுறி நாயகிதன்விழிக்கு
நேராய்த், தோற்றுதலுமவனவள்பேர்சொல்லுதலுமன்னவனத்தோ

கைதன்னை, யேற்றுமனமகிழ்வொடுபார்த்திட்லுங்காரணமாகவெழுந்தேகிற்குஞ், சாற்றுகுருமானமுதன் மூன்றுமுறைவகையினென்பர் சான்றோர்தாமே.

(இ-ள்.) தனதுநாயகன் வேறொருத்தியைக் கூடியதாலுண்டாகிய அடையாளம் நாயகியினுடைய கண்களுக்குப் புலப்படத் தோற்றுதலாலே குருமானமும் வேறொருத்திபெயரை அந்நாயகன் சொல்லுதலாலே மத்தியமானமும், வேறொருத்தியை யவன்எதிர்ந்து மனக்களிப்போடு பார்க்குதலாலே இலகுமானமும்பிறந்து பொருந்துமென்றுயர்ந்தோர் சொல்வர் எ-று. (அச)

குருமானநாயகிக்கிலக்கியம்

கவிக்கூற்று.

எதிர்சக்களத்திபதவிரற்கொம்பரக்கின்சுவடு
பதிநெற்றிதோன்றச்சுகவனர்வெற்பிற்பதிவரக்கண்
டதிசச்சினங்கொண்டனள்செங்கட்பார்வையினாற்செவிசூழ்
கதிர்முத்தெலாம்புதுமாணிக்கமானவக்காரிகைக்கே.

(இ-ள்.) சுகவனநாதர் மலைச்சார்பி லொருநாயகி தனக்கெதிரோ சக்களத்தியினுடைய கால்விரலில் அணிந்திருந்த கொம்பரக்கின் குறிபதிந்த நெற்றிப்ரகாசிக்கத் தனதுநாயகன் வரக்கண்டு அதிககோபங்கொண்டனள் அப்போது சிவந்தபார்வைகளாலே காதுகளிற்சூழ்ந்த கிரணங்களையுடைய முத்துக்களெல்லாம் அந்தநாயகிக்குப் புதியமாணிக்கங்களாயின எ-று. (அரு)

மத்தியமானநாயகிக்கிலக்கியம்

கவிக்கூற்று.

தழுவுறுமன்பன்மறுமாதினுமந்தனைச்சொலவப்
பொழுதினவன்றிருப்பொன்னுபரணப்புயவரைகள்
விழுமியசெஞ்சலசம்பூத்திலங்கமிகமுனிந்தாண்
மழுவணியுங்கைச்சுகவனர்நாட்டிளமாமயிலே.

(இ-ள்.) ஆலிங்கனஞ்செய்கின்ற தனது நாயகன் வேறொருத்தி பெயரைச்சொல்ல, அந்தச்சமயத்தி லவனுடைய அழகிய சொர்ணாபரணந்தரித்த தோள்களாகிய மலைகளிரண்டுஞ் சிறந்த செந்தாமரைமலர் புட்பிக்கப்பெற்று ப்ரகாசிக்கும்படி மழுவேந்திய கையையுடைய சுகவனநாதரது நாட்டின்கண்ணே யிளமையும் பெருமையும்பொருந்திய வொருநாயகியானவள் மிகவுங்கோபித்தாள் எ-று. (அசு)

இலகுமானநாயகிக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

உவகையிற்காதலியோடுறைகோன்மற்றொருத்திதனைப்
பவ்வமொழித்தாளுஞ்சுகவனர்வெற்பிடைப்பார்த்துடனிங்
கிவளிதைக்காணினென்னுமோவென்றெண்ணியெதிர்திரும்ப
வவனுதற்றீட்டியமான்மதஞ்சிந்துரமாகியதே.

(இ - ள்.) பிறவித்துன்பத்தைத் தீர்த்து அன்பர்களை யாண்டருளுஞ் சுக வனநாதர் மலைச்சாரிற் களிப்பாகத் தனது நாயகியோடிருக்கும் ஒருநாயகன் வேறொருத்தியை யேறிட்டுப்பார்த்துப் பின்னுடனே நாம்பார்க்கின்ற விக்குறிப்பை நமது நாயகியாகிய இவள் கண்டால் என்னவிளையுமோவென்று நினைத்துத் தன்னுயகிக்கெதிரே திரும்பியமாத்திரத்தில் அவனுடைய நெற்றியிலிட்டிருந்த கத்தூரித்திலகஞ் சிந்தூரத்திலகமாயிற்று எ-று. (௮௭)

திரிவிதமான நிவர்த்தியின்

இலக்கணம்.

மிகவருந்திநிவர்த்திசெயத்தகுந்துளதுகுருமானம்வேண்டியேசற்
றகமுழந்துபரிகரிக்கலாவதுமத்தியமானமவைபோலின்றி
யிகழ்விலன்பனெளிதாகத்தணித்திடப்பட்டதுதான்மற்றிலகுமானம்
பகரினெந்தவகையினுந்தீர்ப்பருமானங்கடினரசாபாசமாமே.

(இ - ள்.) மேற்கூறிய குருமானம் நாயகனானவன் மிகவும்வருந்தி நிவர்த்திக்கத்தக்கது; மத்தியமானம அந்நாயகன் வேண்டிநின்று சிறிது மனம் வருந்தி நிவர்த்திக்கத்தக்கது; இலகுமானம் அவ்விரண்டு தன்மையுமில்லாமல் (இகழ்ச்சியற்ற) நாயகன் எளிதிலே நிவர்த்திக்கத்தக்கது; சொல்லுமிடத்து எந்தவகையாலும் நிவர்த்திக்கக்கூடாதிருக்குமானம் (கொடிதான) ரசாபாசமாம் எ-று. (௮௮)

குருமானநிவர்த்திக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

தத்தியதத்தைநின்போற்பேசக்கேட்டதைத்தான்பிடித்தேன்
கொத்தியதிப்படிவேற்றோர்நகத்தின்குறியிதெனப்
புத்திகொளேலென்றனிச்சத்திற்கோன்கஞ்சப்பூப்புனைய
வொத்தினிதாகக்கலந்தாள்சுகவனரூர்வஞ்சியே.

(இ - ள்.) சுகவனநாதர் நகரிலோர்நாயகி யூடிருக்கத் தனதுநாயகன் அவளைநோக்கித் தாவிவிளையாடுகின்றகிளி உன்னைப்போலங்கே சிலவார்த்தைபேசியதால் அதிசயித்து அதைநான் கையாற்பிடித்தேன, அப்போதது என்

மேனியி லிப்படிக்கொத்தியது, நீயிதை வேறேபெண்களின் நகக்குறியென்று புத்தியிலெண்ணாதேயென, உபசரித் தவளது பாதமென்னும் அனிச்சப்பூவிற்ற னது கைகளாகிய தாமரைப்பூவையணியச் சமாதானமா யினிமையோடு சேர்ந்தனள் எ-று. (அகூ)

மத்தியமானநிவர்த்திக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

மோகனமாலைகிடைத்ததுனக்கெனுமுன்முழுது
நீகருதாதவள்பேறொன்ச்சீறுதனீதியன்றென்
ருகமதினப்பணிகோன்கொடுவந்தணிந்திடலுந்
தேகமகிழச்சுகவனரூர்வஞ்சிசேர்ந்தனளே.

(இ - ள்.) சுகவனநாதர்தலத்தில் ஓர்நாயகியூட நாயகனவளைநோக்கி மோகனமாலையென்னும் ஓராபரண முனக்குத்தரிக்க இப்போது கிடைத்திருக்கின்றதென்று நான் சொல்லிமுடிக்குமுன்னமே அவ்வார்த்தைமுழுதையும் யோசியாமல் வேறொருத்தியினுடைய பேறொன்றெண்ணி நீகோபிப்பது நீதியல்லவென்று அவளுடையமார்பிலந்தவாபரணத்தைக்கொண்டுவந்து அணிந்தமாத்திரமே சரீரம் புளகிக்கும்படி அந்நாயகனை அந்நாயகிகூடினள்எ-று. ()

இலகுமானநிவர்த்திக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

பிரிவெளிதோவெப்படித்தனித்தாளிந்தப்பேதையெனும்
பரிவதனென்மேலப்பார்த்தேனலதொருபாவமுமின்
றரியவமுதிகழ்ந்தார்நஞ்சுண்பார்முனிவாற்றுகெனக்
குரிசிறமுவச்சுகவனரூர்வஞ்சிகூடினளே.

(இ - ள்.) நாயகி யூடல்கண்டநாயகன் அவளைநோக்கி ஓபெண்ணே அந்தக்கன்னிகை தனித்து நின்றதைப்பற்றி பிரிவென்பதென்ன எளிதோ, நம்மையொவ்வொரு சமயங்களில் வாட்டியிருக்கின்றதே யிவளெப்படித் தனித்தாளோவென்ற இரக்கத்தினாலே பையப்பார்த்தேன், அல்லது வேறேயொருபாவமுமில்லை, அருமையான அமிர்தத்தை யிகழ்ந்துதள்ளி விடத்தையுண்பவர் யார், நீயிக்கோபத்தை யாற்றுவாயென்று தழுவியவுடனே சுகவனநாதர் தலத்திலிருக்கும் அந்தநாயகி அந்நாயகனைக் கொஞ்சிச்சேர்ந்தனள் எ-று. (கூக)

இரசாபாசத்துக்கிலக்கியம்

தலைவன்பாங்கனொடுசொல்லியது.

பணிந்தேனுபசரித்தேன்றொழுதேன்பொற்பணிகொடுபோ
யணிந்தேனடிக்கடியாணையிட்டேனவ்வரிவைசினந்
தணிந்தாளிலைமனங்கல்லோவென்னுசைதகாதெனத்
துணிந்தாள்சுகவனர்வெற்பினன்பாவென்னசொல்லுவதே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரிலில் வசிக்கும் பாங்கனே! அந்தநாயகியைச் சமாதானஞ் செய்யவேண்டுமென்று நான் காலில்வீழ்ந்து வணங்கினேன், உபசாரமாகத் துதித்தேன், கைகளால் கும்பிட்டேன், பொன்னாற்செய்த வாபரணங்களைக் கொண்டுபோய்த் தரித்தேன், அடிக்கடி பலவிதமாக ஆணையிட்டேன், இவைகளுக்கெல்லாம் அவளிரங்கிக் கோபந்தணிந்தாளில்லை, அவளது மனங்கல்லோவெனது சிநேகந் தனக்குத்தகுந்ததன்றென்று தணிந்தனள்; இதற்கு நாமென்னசொல்லுவது எ-று. (கஉ)

ஏகசையான்னியோன்னியவியோகசையோகத்
திற்கும் பிரேமாதிக்கியத்திற்குமிலக்
கணங்கள்.

ஒருபூவினணையிலொருவரையொருவர்பிரிதலுளமுவந்துசேர்தல்
கருதேகசய்யான்னியோன்னியவியோகசையோகந்தானுகு
மிருதேகமோருயிரொன்றிடும்படிநாயகிபுருடரொன்போர்தம்பால்
வருநேயமிகுதிபிரேமாதிக்கமெனும்பழயவடநூன்மாதோ.

(இ.- ள்.) ஒன்றேயாகிய புட்பசயனத்தில் ஒருவரையொருவர் பிரிதலும் பின்மனமகிழ்ந்து சேர்தலுமாகிய இதுவே குறிக்கப்பட்ட ஏகசையான்னியோன்னிய வியோகசையோகமாகும். நாயகிபுருடரொன்பவரிடத்திலே தேகந்தானிரண்டு வுயிரொன்றேயென்று மதிக்கும்படி தோன்றுகின்ற பிரிய மிகுதியே பிரேமாதிக்கமென்று புராதனமாகிய வடகலைகள் சொல்லும் எ-று. ()

ஏகசையான்னியோன்னிய
வியோகசையோகத்துக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

துணைவனதரச்சிவப்பினைக்கண்டுசுருள்பகிரா
தணைமிசைநாயகிபின்காட்டினளஃதருளிலளென்
றிணையவனும்புறந்தந்தான்சுகவனரின்பவெற்பிற்
கணைமதனாற்றுயிலூடவர்நேர்ந்துகலந்தனரோ.

(இ - ள்.) ஒருபடுக்கையிலே நாயகனும் நாயகியும் பொருந்தியபோது அந்தப்பிரியனது அதரத்தினியல்பான செந்நிறத்தைக்கண்டு வெற்றிலைச்சுருளை யவனுக்குப்பகிர்ந்துகொடாமல் ஊடி நாயகியானவள் முதுகுகாட்டிப் படுத்தனள்; இணங்குகின்ற அந்நாயகன் அதையறிந்து நமக்கிவள் வெற்றிலைகொடுக்கவில்லையேயென்று தானும் புறங்கொடுத்தான; சுகவனநாதரின் மிகுந்த மலைச்சாரிற் புட்பபாணங்களையுடைய மன்மதனது முயற்சியாற் பின்பு நித்திரையூடே யவ்விருவரும் புரண்டு திரும்பி நேராய்ச்சேர்ந்தார்கள் எ-று. ()

பிரோமாதிக்கியத்துக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

தொனித்தமறைக்குமெட்டாதசுகவனர்சோலைவெற்பிற்
றனித்தனிநாம்பிரிந்தான்மயலாமொன்றிற்சன்னதமு
மினித்தவுரையுங்கிரீடையுமில்லவென்றேபதியுங்
கனித்துவர்வாய்மயிலுந்தேர்வர்செய்யக்கடவதென்னே.

(இ - ள்.) சத்தித்தவேதங்களுக்கு மெட்டாத உயர்ந்த சுகவனநாதரது மலைச்சார்பிலொரு நாயகனுங் கொவ்வைப்பழம்போற் சிவந்தவாயினையுடைய ஒருநாயகியும் தங்களிலே யொருவரையொருவர் பார்த்து நாமிருவரும் வேறுவேருகப்பிரிவோமானால் விரகமுண்டாகின்றது; ஒன்றுப்படக்கலந்தாலோ காமசன்னதமும் மதுரவசனங்களுங் கிரீடைகளும் இல்லனவாயிருக்கின்றனவென்று யோசிப்பார்கள், ஆயின் அவர்கள் செய்யக்கடவதுயாது எ-று. (௧௫)

இத்தனைமலர்களா லிக்குச்சம்
முடிவுபெற்றதெனல்.

கறைதவிர்ந்தபொதுவியல்பாற் கனதனநாயகிகளிலக்கணமுமற்று, முறையமைந்தமலரிதொன்றுமுனமலர்ந்தவிரண்டுமெனுமூன்றுபூவாற், துறைசிறந்தமுதற்குச்சந்துலங்கவலங்கரித்தனமத்தொன்னூலொப்ப, மற்றவிலின்பமலியிரண்டாவது குச்சந்தனையினிநாம்வகுப்பாமன்றே.

(இ - ள்.) குற்றநீங்கிய பொதுக்குணங்களாலே வழங்கியகனத்த முலைகளையுடைய பலநாயகிகளின் இலக்கணமும் ஏனையவிலக்கணமும் கிரமமாக வமைந்திருந்த விப்பகுதியாகிய ஒருமலரும் முன்னமே யிருபகுதிகளாக விரிந்த இரண்டு மலர்களும் என்கின்றமூன்று மலர்களாலே சிறந்தவழியினையுடைய இந்தமுதலாவது குச்சமாகிய பூங்கொத்து ப்பிரகாசிக்கும்படி அலங்கரித்தோம்; அந்தப்பூர்வ கிரந்தம்போலவே யினியொழிவற்ற வின்பத்தால் மிகுந்த இரண்டாவது குச்சத்தை வகைப்படுத்துவோம் எ-று. (௧௬)

முதலாவதுகுச்சம் முற்றும்.

ஆ செய்யுள் ௧௦௭.

௩-வது மலர்

முற்றும்.

உ

சிவமயம்.

இரண்டாவதுகுச்சம்.

அஷ்டவிதநாயகிகளின்பெயர்.

தினமகிழ்கூர்சுவாதீனபதிகையொடுவாசகசச்சிகையேயன்றிக்
கனவிரகோற்கண்டிதைவிப்பிரலத்தைகண்டிதைபொற்கலசநாணுந்
தனகலகாந்தரிதைபுரோடிதபதிகைமலர்ந் தொசிந்ததளிர்ப்பூங்கொம்
ரனுவபிசாரிகையிவர்மற்றட்டவிதநாயகிகளாவர்மாதோ. [ப

(இ - ள்.) (எப்போதும் மகிழ்ச்சிமிகுந்த) சுவாதீனபதிகையென்றும், வாசகசச்சிகையென்றும், (கனந்தங்கிய) விரகோற்கண்டிதையென்றும், விப்பிரலத்தையென்றும், கண்டிதையென்றும், (சொர்னகலசமும் வெட்சப்படத்தகுந்த முலைகளையுடைய) கலகாந்தரிதையென்றும், புரோடித பதிகையென்றும், (மலர்ந்தசையாநின்ற தளிர்வாய்ந்த பூங்கொம்பைநிகர்த்த) அபிசாரிகையென்றும் சொல்லப்பட்ட இவர்களே அட்டநாயகிகளாவார்கள் எ-று.

இப்பெயர்களை வடநூலார், ஸ்வாதீனபதிசா, வாசகசஜ்ஜிகா, விரஹோத்கம்டிதா, விப்ரலப்த்தா, கண்டிதா, கலஹாந்தரிதா, ப்ரோஷிதபதிகா, அபிசாரிகா எனவழங்குவர். (க)

சுவாதீனபதிகாநாயகியினிலக்கணமும் அவள்குணங்களும்.

பகலிரவுந்தனதுமனதறிந்துசொன்னபடிநடக்கும் பதிவாய்ந்துள்ளாள், சுகமருவுஞ்சுவாதீனபதிகையென்பரவட்கு மலர்த்தோட்டஞ்சுற்றல், புகழ்மதனன்களிக்கவிழாப்புரிதன்மதமகங்காரம்பூணல்பின்னு, மிகநினையுங்காரியமவ்விதமுடித்தல்குணங்களெனவிளங்குமன்றே.

(இ - ள்.) (இன்பம்பொருந்திய) சுவாதீன பதிகையென்பவள் பகலினும் இராவினுந்தனது மனக்குறிப்பை யறிந்தவனாகித் தன்சொற்படியே நடக்கின்ற நாயகனையுடைய நாயகியாமென்றுசொல்வர் மூன்னோர்; பூந்தோட்டங்களிலேதிரிதலுங், சீர்த்திவாய்ந்த மன்மதன்மகிழும்படி அவனது திருவிழாநடத்தலும், மதம், அகங்காரம், இவற்றைக்கொள்ளுதலும், மிகவுந் தானினைக்குங்காரியங்களை அப்படியே முடித்தலும், அந்நாயகிக்குரிய குணங்களாகப்பிரகாசிக்கும் எ-று. (உ)

முத்தாசுவாதீனபதிகைக்கிலக்கியம்.
தலைவிசகியொடுசொல்லியது.

முலையிற்பருமையுமூரலிற்காந்தியும்மோகவிழி
வலையிற்குடிலமுமாடலிற்பாடலில்வல்லமையு
மிலையெற்கெனினுமிமையாமற்பார்ப்பனெனைக்கொழுநன்
மிலைசொற்சுகவனர்வெற்பணங்கேயென்னவிந்தையிதே.

(இ-ள்.) புகழைத்தரித்த சுகவனநாதர் மலைச்சாரில்வசிக்குஞ் சகியே முலைகளிற் பருக்குந்தன்மையும், சிரிப்பிற்காந்தியும், ஆசையைத்தருகின்ற கண்களாகியவலையில் வஞ்சனையும், ஆடுதலிலும் பாடுதலிலும் வல்லமையும், எனக்கில்லாமலிருந்தாலும் எனது நாயகன் என்னையிமையாமற்பார்த்துக்கொண்டிருப்பான் இது என்னஅதிசயஞ்சொல் எ-று. (௩)

மத்தியாசுவாதீனபதிகைக்கிலக்கியம்.
தலைவிசகியொடுசொல்லியது.

தடமாமுலைதொடுதற்கும்பலசரசத்தினுக்கு
மிடமேகொடாதுடைநானிறுக்கிக்கொண்டிடர்செயினுந்
திடநாயகனன்பொடுவேண்டுவனெனைச்சிறியெங்கு
கடவானிதென்னவியப்போசுகவனர்நாட்டணங்கே.

(இ-ள்.) சுகவனநாதர் நாட்டிலிருக்கின்ற சகியே! விசாலித்துப்பெருமைதங்கிய எனது முலைகளைத்தனது கைகளாற்றொடுவதற்கும், பலவித சரசங்கள் செய்வதற்கும் நான் சற்று மிடங்கொடாமல் சேலையையிறுக்கிச் சுருட்டிக்கொண்டு வருத்தத்தையுண்டாக்கினாலும், உண்மையையுடைய நாயகன் பிரியத்தோடு என்னை யுபசரித்து வேண்டுவன், என்மேற் கோபங்கொண்டு எப்புறத்திலுஞ் செல்லான், இதுவென்ன ஆச்சரியமோ எ-று. (௪)

பிரபுடாசுவாதீனபதிகைக் கிலக்கியம்.
தலைவிக்குச் சகிசொல்லியது.

முகநகைவாய்கண்மொழிமுலைமற்றுமுறையினொத்து
மிகவளர்மோகக்கனியாநினையன்றிவேறுளவெம்
மகளிரையுங்கனவூடுமெண்ணுதுன்வழியொழிகிந்
திகழ்பதியோடென்னபேதஞ்சுகவனர்சேலமின்னே.

(இ-ள்.) சுகவனநாதர் சேலமாநகரில்வசிக்கின்ற நாயகியே! முகமும், சிரிப்பும், வாயும், கண்களுஞ், சொற்களுந், தனங்களும், இவைபோல் வனபிறவும் நூன்முறைப்படி யொத்திருக்கப்பெற்று, மிகவும் வளர்கின்ற ஆசைக்கனி

யாகிப வுன்னை யல்லது வேறுள்ள எவ்வகை மேன்பாடுடைய பெண்களையுஞ் சொப்பனத்தினும் மதியாதவனாகி, உனது குறிப்பின் வழியேநடந்து விளங்குகின்ற நாயகனிடத்துனக் கென்னபேதம் அதைவிடுவாய் எ-று. (ரு)

பரகீயாசுவாதீனபதிகைக் கிலக்கியம்.

தலைவிசகியொடு சொல்லியது.

முனைவேல்விழிமடவார்பலர்தன்மனைமொய்த்துலவப்
புனைமேடைதிண்ணைபுறமுன்றிலாயம்பொழில்புகினு
மெனையேயவ்வல்லபன்பார்க்கின்றனனிதுவென்னவிந்தை
வினைதீர்முனிவர்பரவுஞ்சுகவனர்வெற்பணங்கே.

(இ - ள்) பாசங்களினின்று நீங்கிய முனிவோர்கள் துதிக்கின்ற சுகவனநாதர் மலைச்சார்பிற் சஞ்சரிக்குமெனது சகியே! கூரியவேல்போன்ற கண்களையுடைய இளமைப்பருவப் பெண்கள் அநேகர் தனதுவீட்டில் மொய்த்துலாவிக்கொண்டிருக்க, அவர்களை மதியாதவனாகி நான் அலங்கரிக்கப்பட்ட உபரிகைமேடை திண்ணை புறவாசல் முன்வாசல் பாங்கியர்கூட்டஞ் சோலை இவைகளிலெங்கே பிரவேசித்தாலும் என்னையே அந்தநாயகன் பார்த்துக்கொண்டிருக்கிறான் இதுவென்ன அற்புதம் எ-று. (சு)

சாமானியாசுவாதீனபதிகைக் கிலக்கியம்.

தலைவிசகியொடு சொல்லியது.

வேனேர்விழிமடவார்மனைதோறுமிருந்திருக்கத்
தானேகொக்கோககுருவென்றெனையத்தலைவனெண்ணி
வானேயெனப்பொன்மணிபெய்துதொண்டுசெய்வானிதென்ன
நானேமெச்சிக்கொள்ளலாமோசுகவனர்நாட்டணங்கே.

(இ - ள்.) சுகவனநாதர் நாட்டிற் சகியே! வேல்போன்றகண்களையுடைய வேசையர் வீடுகள்தோறும் பிரபலித்திருக்க அவர்களையெல்லாம்விட்டு வலிதிலென்னைக் கொக்கோகசாஸ்திர தீக்ஷாகுருவென்றுநினைத் தந்த நாயகன் மேகமே சமானமென்று சொல்லும்படி சொர்ணங்களையும் ரத்தினங்களையுங் கொண்டுவந்தெனக்கெதிரேசொரிந்து அடிமைத்தொழிலுஞ் செய்வான், இதுவென்னவிந்தை, நானே யென்னை மெச்சிக்கொள்ளலாகாது எ-று. (எ)

க - வது மலர் முற்றும்.

வாசகசச்சிகாநாயகியி னிலக்கணமும் அவள்குணங்களும்.

ஆகமுற்றவணிந்துபதியனுகுமிப்போதெனக்கலவிக்கானவெல்லாம்
சேகரித்துவைத்தெதிர்பார்த்திருப்பவளேவாசகசச்சிகையாமென்பர்
மேகமொத்தகுழற்சகிமார்தமைப்பரிகாசித்தல்பலவிதகோரிக்கை
தாகமுற்றுத்தூதிகளைத்தான்வினவன்முதலவவட்ன்பண்பாமே.

(இ - ள்.) வாசகசச்சிகையென்பவள் தனது சரீரமுழுதும் அலங்கரித்துக்கொண்டு இப்போது நாயகன் வருவானென்று கலவிக்குவேண்டிய பதார்த்தங்களையெல்லாம் சேகாஞ்செய்துவைத்து எதிர்பார்க்கும் நாயகியேயாமென்று சொல்வருயர்ந்தோர். மேகத்தையொத்த கூந்தலையுடைய சகிமார்களை பரிகாசித்தலும், பலவிதகோரிக்கைகளைக் கொள்ளுதலும், விருப்பத்தோடு தூதிகளை வினவுதலும், முதலானவை அந்நாயகியினது குணங்களாகும் எ-று. ()

முத்தாவாசகசச்சிகைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

சுருள்செயல்புட்பந்தொடுத்தல்வயங்கச்சுடர்திருத்தல்
பொருள்பிறதேடலிவற்றிற்சகிகள்புடைவிளையக்
குருநகைசற்றரும்பத்துகில்சேரவுட்கூசவன்பன்
வருவழிபார்க்குமொருமான்சுகவனர்மண்டலத்தே.

(இ - ள்.) சுகவனநாதர்நாட்டின்கண் ஒருநாயகியானவள் தனது சகிமார்கள் தாம்பூலமடித்தல் புட்பஹாரந்தொடுத்தல் ப்ரகாசிக்கும்படி தீபங்களைத்திருத்தல் மற்றுங் கலவிக்கு வேண்டியவைகளெல்லாவற்றையுஞ் சேகரித்தல் முதலாகிய இவ்விதமுயற்சிகளை யருகில்விளைந்துநடத்தத் தான் அழகிய புன்சிரிப்புத்தோன்றவும் இடையிற்கட்டிய சேலைநழுவவும் உள்ளேவெட்கமுண்டாகவுமிருந்துகொண்டு நாயகன் வரும்வழியை யெதிர்பார்ப்பள் எ-று. ()

மத்தியாவாசகசச்சிகைக்கிலக்கியம்

கவிக்கூற்று.

தொழிலைச்சகிகட்குக்காட்டலிற்புட்பந்தொடுக்குமயி
லெழிலிற்பிறரைவெல்வேண்டல்போற்பணியேந்துமன்றிப்
பழியற்றவோவியம்பார்த்தெனமெத்தப்பதிவருமவ்
வழியுற்றுநோக்குஞ்சுகவனர்வெற்பின்மதனகவே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரலின் மயில்போலு மொருநாயகியானவள் தனது தொழில் வல்லமைகளைச் சகிகளுக்குக்காட்டுவதுபோலப் புட்பஹாரங்களைத் தொடுப்பள், தன்னழகினாலே அயலிலுள்ளபெண்களையெல்லா

ம் வெல்லவேண்டுமென்று நினைப்பதுபோலப் பலவாபரணங்களையுந்தரிப்பள், அன்றியுங் குற்றமற்ற சித்திரங்களைப் பார்ப்பதுபோல மிகவும் நாயகன்வரும் வழியை உற்றுப்பார்ப்பள், இவைகளையெல்லாம் மன்மதன்கண்டு சிரிக்கும் படிக்கு எ-று. (௧௦)

பிரபுடாவாசகசச்சிகைக்கிலக்கியம்
கவிக்கூற்று.

நறைகுழலூட்டிநகைதுகில்பூட்டிநறுங்களப
நிறைமலர்கஞ்சனமெல்லாமமைத்துநிமிர்படுக்கை
யறைகமழ்சண்பகத்தால்வேய்ந்தெனத்தன்னணிநகவுற்
றிறைவரல்பார்க்குஞ்சுகவனர்வெற்பினிளங்குயிலே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரிலில் இளமைதங்கிய குயில்போலும் ஒருநாயகியானவள் தனதுகூந்தலுக் ககிற்புகையூட்டி ஆபரணங்களையுந் துகிலையுஞ் சிங்காரமாகத்தரித்து வாசனைபொருந்திய சந்தனகளபங்கள் நிறைந்த புட்பங்கள் கண்ணாடி முதலியவைகளெல்லாவற்றையும் படுக்கையிற் சேகரித்துவைத்துக்கொண்டு அப்படுக்கைவீடுமுழுதுங் கமழாநின்ற சண்பகமலர்களால் அலங்கரித்தாற்போலத் தனதுவடிவழகு பிரகாசிக்கும்படியிருந்து நாயகன்வரவை யெதிர்பார்ப்பள் எ-று. (௧௧)

பரகியாவாசகசச்சிகைக்கிலக்கியம்
கவிக்கூற்று.

அத்தையைத்தூங்கவைத்துத்திபத்தைக்கடிதாங்கவித்தோர்
நத்தைமுன்மேடைப்புறுவொலிகாட்டித்தனிப்புரண்டு
மெத்தையிலோலையசைந்திடச்சுற்றிமிகத்தடவி
யெத்தயற்சோரனைப்பார்க்குஞ்சுகவனரின்புரத்தே.

(இ - ள்.) சுகவனநாதரின் இனிமைதங்கியதலத்தின்கண் ஒருகிளிபோலு நாயகியானவள் தனது மாமியாளைத் தூங்கும்படிசெய்து விளக்கைச் சீக்கிரத்திலவித்து அங்கே முன்னுக்கிருக்கின்ற மேடையிலுள்ள புறுவைப்போற் கூவிக்கொண்டு மெத்தையின்மேலே தனித்துப்புரண்டு காதோலைக ளசையும்படி சுற்றுப்புறத்தையெல்லாங் கைகளாலேதடவித் தந்திரமாக அன்னியனாகிய கள்ளப்புருடனைத் தேடிப்பார்ப்பள் எ-று. (௧௨)

சாமானியாவாசகசச்சிகைக் கிலக்கியம்
கவிக்கூற்று.

கச்சுநெகிழ்க்கக்கைக்காப்பும்பிறகொங்கைகளைப்பிடிக்க
மெச்சுகடுக்கனுஞ்செவ்விதழ்த்தேனுண்ணமேற்சாமு
மூச்சுதலெண்ணிமணம்பூசியன்பருளம்பங்க
நச்சுறுகண்ணியிருந்தாள்சுகவனர்நாட்டிடத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் நாட்டின்கண் விடம்போன்ற கண்களையுடைய வொருநாயகியானவள் நாயகன்றனது இரவிக்கையை யவிழ்க்கவேண்டுமாயின் அவனது கைக்காப்பையும், பின்பு தனங்களைப்பிடிக்கவேண்டுமாயின் மெச்சத்தகுந்த அவன் வச்சிரக்கடுக்கனையுஞ், சிவந்த அதரபானஞ்செய்யவேண்டுமாயின் அவன்மேலே தரித்திருக்குஞ் சரப்பணியையும், எத்திப்பறிக்க நினைத்துக் கள்பங்களைப்பூசிக்கொண்டு புருடர்களெல்லாம் மனமயங்கும்படி யிருந்தனள் எ-று. (கங)

உ - வது மலர் முற்றும்.

விரகோற்கண்டிதாநாயகியி னிலக்கணமும் அவள்குணங்களும்.

குறியிட்முற்றிதுவரையிற்கொழுநனிங்கே யடுத்திலனேகூடற்கென்று, செறிவிரகத்தோடுசிந்திப்பவள்விரகோற்கண்டிதையாந்தேகநைத, லறிவறுகொட்டாவிவிடலழல் வருந்தனடுங்கல்விளையாட்டுருமை, வறியவெனப்பாங்கிகள்பான்மனத்துயர்கூறுதன்முதலம்மயில்பண்பாமே.

(இ - ள்.) விரகோற்கண்டிதையென்பவள் தாங்கள் குறித்தவிடத்திலிருந்துகொண்டு இதுவரை நாயகன் கூடுதற்கு வரவில்லையேயென்று நிறைந்த விரகத்தாற் சிந்திக்கும் நாயகியேயாம், மேனியிளைத்தல், புத்திமறந்து கொட்டாவிவிடுதல், அழுதல், வருந்துதல், ஏழைபோல் பாங்கிகளிடத்தே தனது மனவிசனத்தைச்சொல்லுதல் இவை முதலானவை யந்நாயகியின் குணங்களாகும் எ-று. (கரு)

முத்தாவிரகோற்கண்டிதைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

பதியுற்றிலானெவட்கூடினன்கொல்லெனப்பன்னுமின்னு
றொதிர்சொற்சொலாதுறும்நாண்மிக்குயிர்க்குமிலுப்பைமல
ரகின்மெய்க்கவுள்வெளுக்கப்புறம்பார்த்திலளாய்விழிநீர்
முதிரத்தளருஞ்சுகவனர்வெற்பினெர்மொய்குழலே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரிப்ல் நெருங்கிய கூந்தலையுடைய வொருநாயகியானவள் இன்னம் நமது நாயகன் வராதிருக்கின்றான் எவளைக்கூடினானோவென்று ஆலோசிப்பள், வெட்கமிகுந்து பாங்கிகளோடு வார்த்தையொன்றுஞ் சொல்லாதிருப்பள், பெருமூச்சுவிடுவள், சரீரத்திற் கபோலங்களிரண்டும் இலுப்பைப்பூப்போல் வெளுக்கப் பக்கமெங்குந் திரும்பிப்பாராதவளாய்க் கண்களிலே நீர்நிறைய வருந்துவள் எ-று. (சகு)

மத்தியாவிரகோற்கண்டிதைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

அழைத்திலளோமின்னழைத்துமிருட்கஞ்சியண்ணிலனே
பிழைத்தெவள்பாற்சிக்கினனேமன்னென்றுபிதற்றியிரு
குழைப்பொலிபூந்துகள்வீழ்ந்தெனக்கண்புனல்கூர்தரச்செய்
துழைப்பதுமக்கைச்சுகவனர்வெற்புற்றதோர்குயிலே.

(இ - ள்.) மானேந்திய தாமரைமலர்போலுங் கையினையுடைய சுகவன நாதர் மலைச்சாரில் ஒருகுயில்போலு நாயகியானவள் நாமனுப்பிய தூதி நாயகனை யழையாதிருந்துவிட்டாளோ, அல்லது அவள் அழைத்தும் அந்நாயகன் இந்த இருட்டுக்குப்பயந்து தான் வராதிருந்தானோ, வொருவேளைதவறி யெவளிடத்திற் சிக்கிக்கொண்டானோவென்று பலவாறாகப்புலம்பித் தனது காதிற் பிரகாசிக்கும்படிதரித்த புட்பத்தின்றுகள்வீழ்ந்த பாவனையாகக் கண்களிலே நீர் பெருகச்செய்துகொண்டிருந்தனள் எ-று. (சகூ)

பிரபுடாவிரகோற்கண்டிதைக்கிலக்கியம். உ

தலைவிசொல்லியது.

காயேவிராத்திரிநீயேயெற்கன்னைகடினவிரு
ணீயேபிதாமரங்காணீங்களேகிளைநீடிசைகூ
ரீயேயிமிர்புதர்நீயேசகியன்பனெய்திலனென்
வாயேமலர்ந்துசுகவனர்நாட்டென்புண்மாற்றுமினே.

(இ - ள்.) இராத்திரியே யெனைக்கோபியாதே, நீயே யெனக்குத்தாய், கடினவிருளே நீயேயெனக்குப்பிதா, விருக்ஷங்களே நீங்களே யெனக்குச்சுற்றங்கள், நெடியகீத மிகுந்தவண்டுகள் சத்திக்கப்பெற்ற புதர்வீடே நீயே யெனக்குச் சகி, யெனது நாயகனின்னம் வராதிருக்கின்றான் அதென்னகாரணம் உண்மையாக நீங்களெல்லோரும் வாய்திறந்தெனக் கின்னபடியென்று தெரிவித்துச் சுகவனநாதர் நாட்டில்வருந்தும் எனது மனவிசனத்தைத் தீர்ப்பீர்கள் எ-று. (கஎ)

பரகியாவிரகோற்கண்டிதைக்கிலக்கியம்

தலைவிசொல்லியது.

வனம்புகுந்தும்புயனீர்த்துளிமூழ்கியும்மாமலரா
லனங்கனைப்பூசித்தும்வெட்கத்தைத்தானமதாகவிட்டுந்
தனந்தனியுற்றும்விழிப்பாம்விரதந்தனைத்தொடுத்தே
வினங்குறியன்பன்சுகவனர்வெற்பினிங்கெய்திலனே.

(இ - ள்.) ஆரணியத்திற்புகுந்தும் மேகங்கள் பொழிகின்ற நீர்த்துளிக ளிலேமூழ்கியும் பெருவலம தங்கிய புட்பங்களால் அடிக்கடி மன்மதனைப்பூசை செய்தும் எனது வெட்கத்தைத் தானமிட்டும் தன்னந்தனியாகவிருந்துங் க ண்விழிப்பாகியதவசை நான்செய்தேன் இன்னமும் யான்குறித்தநாயகன் சுக வனநாதரது மலைச்சார்பாகிய இவ்விடத்திற்கு வராதிருக்கின்றனே எ-று. ()

சாமானியாவிரகோற்கண்டிதைக்கிலக்கியம்

கவிக்கூற்று.

அந்தப்பிரியனிதுவரையேனிங்கடைந்திலன்மற்

றெந்தச்சிறிக்கிப்கட்டினளோபொன்னெலாமவட்குச்

சிந்தத்துணியினென்செய்வேனென்றுள்ளந்திகைத்துகுத்தாள்

கந்தச்சுகவனர்வெற்போர்பெண்மையயிற்கட்புனலே.

(இ - ள்.) வாசனைபொருந்திய சுகவனநாதர் மலைச்சார்பில் ஒருநாயகி யான்வள் அந்தநாயகன் ஏனிதுவரையிங்கே வராதிருக்கின்றான், அவனை யிந் தத்தெருவில் எந்தச்சிறிக்கி யெத்திவசமாக்கினளோ, கையிலுள்ள பணங்க ளையெல்லாம் அவன் அவளுக்கு இறைத்துவிடத் துணிவானாகில் என்னசெய் வேன்என்று மனமயக்கி ஆசையினாலே கண்ணீரைச்சொரிந்தனள் எ-று. ()

ங-வது மலர்முற்றும்.

விப்பிரலத்தாநாயகியினிலக்கணமும்

அவள்குணங்களும்.

செப்பியசார்படைந்துபதிவராமையினிப்படிமோசஞ் செய்தா னேயென், றொப்பிலதாமனத்துயரமுழப்பவள் விப்பிரலத்தையுணர் த்தனாட்கு, மெய்ப்பொருவேதனைநெடுமூச்செறிதல் சகிகளைமுனி தல்விரகங்கூர்தன், மைப்படிவாள்விழிவழிநீர்மருவுதன்மூர்ச்சித்தலி ன்னவகைப்பண்பாமே.

(இ - ள்.) விப்பிரலத்தையென்பவள் தாங்கள் பேசிக்கொண்ட சங்கேத த்தலத்திற்குப்போய் நாயகன் வாராமையினாலே இப்படி மோசஞ்செய்தானே யென்று ஒப்பில்லாத மனவிசனத்தால் வருந்தும் நாயகியேயாம், சரீரத்தில் பெரியவேதனையுண்டாதல், நெடுமூச்சு விடுதல், சகிகளைக்கோபித்தல், விரகம திகரித்தல், மைபொருந்திய வாள்போன்ற கண்களினிடத்து நீர்பொருந்தல், மூர்ச்சித்தல் முதலானவையீண்டுத் தெரிவித்த அந்நாயகிக்குரிய குணங்களா கும் எ-று. (உ0)

முத்தாவிப்பிரலத்தைக் கிலக்கியம்.
கவிக்கூற்று.

பாங்கியர்தப்புமொழியானிகுஞ்சம்படர்ந்துபதி
யாங்கில்லெனன்பதுகண்டுறநீங்கவறிகிலளாய்த்
தேங்கியகள்ளுண்வண்டென்னமருண்டுதிசைதொறுமோர்
பூங்கிளிநோக்குஞ்சுகவனநாதர்பொருப்பிடத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சார்பில் ஓரழகிய கிளிபோன்ற நாயகியானவள் சகிமாருடைய தப்புவார்த்தையாற் புதர்வீட்டிற்குப்போய் அங்கே நாயகன்வராததைக்கண்டு நிற்கவும் அதைவிட்டு நீங்கவும் தெரியாதவளாய் நிறைந்த மதுவுண்ட வண்டுபோல்மயங்கித் திசைதோறும் பார்த்தாள் எ-று. ()

மத்தியாவிப்பிரலத்தைக் கிலக்கியம்.
கவிக்கூற்று.

உற்றேநிகுஞ்சத்தொருவருமின்மையுணர்த்துயிர்ப்பாற்
பொற்றேனிதழ்வதங்கப்பாதிப்பறப்பதிபூஞ்சுருளுஞ்
சற்றேதிறந்தகட்பார்வையும்வார்த்தைத்தழுதழுப்பும்
பெற்றேசுகவனர்வெற்பினின்றாளொருபெண்மறந்தே.

(இ - ள்.) ஒரு நாயகியானவள் புதர்வீட்டிற்சென்று அங்கே ஒருவருமில்லாமையையறிந்து பெருமூச்சினால் அழகிய தேன்போலு மினிமையைத்தருகின்ற தனது அதரங்கள் வதங்கிப்போகப் பாதிப்பறப்பதிந்த பொலிவான வெற்றிலைச்சுருளையுங் கொஞ்சந்திறந்த கட்பார்வைகளையுந் தழுதழுத்துத் தடுமாறிய வார்த்தைகளையும் உடையவளாய்ச் சுகவனநாதர் மலைச்சார்பிலே யசைவின்றி தனது தேகத்தைமறந்து நின்றாள் எ-று. (உஉ)

பிரபுடாவிப்பிரலத்தைக் கிலக்கியம்.
கவிக்கூற்று.

குறிவயினெய்தியங்கன்பனிலாமையிற்கூர்மயலை
யறிசகிமார்க்குஞ்சொலவில்லைத்தூதுமனுப்பவில்லை
மறிமருள்கண்ணிபுறம்பார்த்திடாதலர்வாளிபொரப்
பொறிமதனைப்பண்டெரித்தசுகவனர்ப்போற்றினளே.

(இ - ள்.) மானுமயங்கத்தக்க பார்வைகளையுடைய வொருநாயகியானவள் குறிப்பிட்டிருந்த இடத்திற்குப்போய் அங்கே நாயகனில்லாமையால் உண்டாகிய விரகத்தைத் தனது மனதறிந்து சகிமார்களுக்குந் தெரிவிக்கவில்லை, அந்நாயகனுக்குத் தூது மனுப்பவில்லை, பக்கமெங்குந் திரும்பிப்பாராதவ

ளாய் மன்மதபாணங்கள் வருத்துதலாலே செல்வமிகுந்த அந்த மன்மதனை முன்னாளிற் பொடியாக்கிய சுகவனநாதனைத் தியானித்துத் துதித்து நின்ருள் எ-று. (உ௩)

பரகீயாவிப்பிரலத்தைக் கிலக்கியம்,

கவிக்கூற்று.

நாணுநதியைக்கடந்துசர்ப்பத்தைநடுமிதித்து
மாணுவிருடுணையாகக்குறிவையின்வந்துமன்பற்
காணுமையால்விண்ணிடியைவெங்கூற்றின்கடாவொலியாப்
பேணுநின்ருளச்சுகவனர்வெற்பொருபெண்மெலிந்தே.

(இ - ள்.) அந்தச்சுகவனநாதர் மலைச்சாரிலொரு நாயகியானவள் வெட்கமென்னு நதியைக்கடந்து அல்லது வெட்கப்படாமல் இயல்பான நதியைக் கடந்து வழிநடுவே பாம்பைமிதித்து மாசுஇமையற்ற விருளே துணையாகக் கொண்டு குறித்தவிடத்திற்கு வந்தும் நாயகனைக் காணுமையினாலே மேககர்ச்சனையை வெவ்விய யமனுடைய எருமைக்கடாவின் சத்தமாகநினைத்து வருந்திநின்ருள் எ-று. (உ௪)

சாமானியாவிப்பிரலத்தைக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

காமாதுரரனைவோரையுமெத்துங்கபடியிவ
ளேமாறினளொருதுதிசொல்லாலென்றிசைந்தபுதர்
தாமாவறியவண்டாம்விழிகாட்டித்தளிர்க்கைகொட்டிப்
பூமாமுறுவல்சுகவனர்வெற்பிற்புரிந்ததுவே.

(இ - ள்.) காமவிருப்பின ரெல்லோரையும் மோசஞ்செய்கின்ற வஞ்சகியாகிய இந்தநாயகி யிப்போது ஒரு தூதிவார்த்தையினுலே மாறிப்போயினளென்று சுகவனநாதர் மலைச்சாரில் அவளடைந்த புதர்வீடானது தாவியெழுந்த மாமரங்களறியும்படி வண்டுகளாகிய கண்களாற்காட்டி தளிர்களென்னுங் கைகளைக்கொட்டி மலர்களென்னுஞ் சிரிப்பைச்செய்தது எ-று. (உ௫)

௪ - வது மலர்முற்றம்.

கண்டிதாநாயகியினிலக்கணமும்
அவள்குணங்களும்.

அயல்வனிதைதனைப்புணர்ந்தவடையாளத்துடனுதயத்தனுகா
நின்ற, நயபதியைமிகமுனியுநாயகிகண்டிதைகுணங்களுடுங்காலே, யி
யல்பொருளிலுளைபகர்தலின்னலொடுதவித்திடு மூச்செறிதல்வாளா,

வுயர்புதியசித்திரமொத்துறுதல்கண்ணீர்கொளல் முதலென்றுணர்த்தலாமே.

(இ - ள்.) கண்டிதையென்பவள் வேறே யொரு நாயகியைக்கூடின அடையாளங்களுடனே வுதயகாலத்தில் வராநின்ற (நலம்பொருந்திய) நாயகனை மிகவுங்கோபிக்கும் நாயகியேயாம். ஆராயுங்கால்வழங்கிய அருத்தமில்லாதவார்த்தைசொல்லுதல், தன்பத்தோடுதவிக்கின்ற மூச்சுவிடுதல், உயர்ந்தபுதிய சித்திரத்தைப்போற் சும்மாவிருத்தல், கண்ணீர்கொள்ளல் முதலானவை யந்நாயகியின் குணங்களென்று அறிவிக்கலாம் எ-று. (உசு)

முத்தாகண்டிதைக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

கலசக்குறிகடன்மார்பிடைத்தோன்றுவகாண்பளெனச்
சலசக்கையாற்சொந்தநாயகன்றன்விழிதான்மறைக்கக்
குலபத்தினிவிளையாட்டிதுவென்றுளங்கொண்டுநின்றாள்
புலரிப்பொழுதிற்சுகவனநாதர்பொருப்பிடத்தே.

(இ - ள்.) சுகவனநாதர்மலைச்சாரிலே, சொந்தநாயகன் உதயகாலத்திற்றன்மார்பிற்றோன்றுங் கலசக்குறிகளை யிவள்கண்டுகொள்வாளென்று தாமரைமலர்போன்ற கைகளால் நாயகியின்கண்களைப்பொத்த அந்தக்குலபத்தினியிதுவுமொரு விளையாட்டென்று மனத்தினினைத்துநின்றாள் எ-று. (உஎ)

மத்தியாகண்டிதைக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

குதலையொருத்திசுகவனர்வெற்பிற்றன்கொண்கனெஞ்சி
லிதரதனக்குறிகண்டெதிரொன்றுமியம்பிலள்பின்
பதறியுயிர்த்திலள்பானுவுதயபருவமதில்
வதனமிலக்குதல்போலக்கண்ணீர்வடித்தனளே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரில் மழலைச்சொற்களையுடைய வொருநாயகி தன்மணவாளன்மார்பில் வேறே தனக்குறியுண்டாயிருப்பதைக்கண்டு அவனுக்கெதிராக, வொருவார்த்தையுஞ்சொல்லிலள், பின் பதட்டத்தினாலே பெருமூச்சுவிட்டிலள், சூரியனுதிக்குங்காலையிற் றனதுமுகத்தை விளக்குவதுபோலக் கண்ணீர்வடித்தாள் எ-று. (உஅ)

பிரபுடாகண்டிதைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

அன்னியமான்முககுங்குமநெற்றியணிந்துதயந்
துன்னியநாயகனைக்கண்டுயிர்ப்புவன்சொற்றவிர்ந்தோர்
மின்னிதுமங்களமென்னச்சுகவனர்வெற்பிலவன்
றன்னியல்காணச்சகிகைக்கண்ணாடியைத்தந்தனளே.

(இ - ள்.) சுகவனநாதர் மலேச்சாரிபில் ஒருநாயகியானவள் தனது நாயகன் வேறொருத்தியினுடைய முகத்திலிருந்த குங்குமத்தைத் தன்னெற்றியிலணிந்துகொண்டு உதயகாலத்தில் வரக்கண்டு பெருமூச்சு கடினவார்த்தை முதலானவைகளொன்று மில்லாதவளாய் இது மங்களகரமென்று நினைக்கும்படி அந்நாயகன் றனது தன்மையைத்தானே காணச்சமீபத்திருந்த சகியின் கையிலுள்ள கண்ணுடியையவாங்கி யவனிடத்திற் கொடுத்தாள் எ-று. (உக)

பரகீயாகண்டிதைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

மாற்றவடாயத்தணிதோய்கழுத்தொடுவானுதயத்
தேற்றபதிவரக்கண்டயலோர்க்கஞ்சியேகடுஞ்சொற்
சாற்றலளாய்க்கட்புனல்விரற்கொண்டுபிற்சார்ந்தசகி
மேற்றெளித்தாண்மெய்ச்சுகவனர்வெற்பொருமெல்லியலே.

(இ - ள்.) மெய்ம்மைபொருந்திய சுகவனநாதர் மலேச்சாரிபில் ஒரு நாயகியானவள் தனக்கேற்ற நாயகன் வேறொருத்தியினுடைய தாயத்துச்சரம் அழுந்தின கழுத்துடனே பெருமைதங்கிய வுதயகாலத்தில் வரக்கண்டு அயலோர்க்குப்பயந்தே கடினவார்த்தைகளொன்றுஞ் சொல்லாதவளாய்த் தனது கண்களிலுண்டாகிய நீரை விரலாலெடுத்துப் பக்கத்திலேயிருந்த சகியின்மேற்படும்படி தெளித்தாள் எ-று. (கூo)

சாமானியாகண்டிதைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

சீர்த்திடுகொங்கையுதயத்துன்மார்பிற்றெரியுதடா
பார்த்திடவேடிக்கையாயெனக்கீய்ந்தபணந்தவிரப்
பூர்த்தியுடன்பணியொன்றருளென்றொருபூவையன்ப
னேர்த்திருவாழிபறித்தாள்சுகவனர்நீணிலத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் நெடியநாட்டின்கண் ஒருநாயகியானவள் பிரியனேநோக்கிச் சிறப்புப்பெற்ற தனக்குறிகள் இந்த வுதயகாலத்திலே யிதோவுனது மார்பிற்றெரிகின்றன பாரடா வேடிக்கையாகப் பார்த்துப்போகலாமென்றெனக்கு முன்னே கொடுத்தபணத்தை யல்லாமலும் இப்போது மனப்பூர்த்தியுடனே ஓராபரணத்தை யெனக்குக்கொடு நீயென்று சொல்லிக்கொண்டு அந்த நாயகனுடைய பொலிவான வழகுதங்கிய மோதிரத்தைப் பறித்துக்கொண்டாள் எ-று. (கூக)

ரு - வது மலர் முற்றும்.

கலகாந்தரிதாநாயகியி னிலக்கணமும்
அவள்குணங்களும்.

அன்பனைவெஞ்சினத்தாலெண்ணாது நிந்தித்தவமானித்தகற்றிச்சென்
ற, பின்புகுழைந்தாகுலிக்கும்பேதைகலகாந்தரிதைபெருமூச்சிடு
வன்பிரமைபரிதாபமதனவேதனையழுகைவகைக்காகாச்சொ [லோர்.
லென்பமுதலானவை மற்றிவள்குணங்களாக வெடுத்திசைப்பர் மே

(இ - ள்.) கலகாந்தரிதையென்பவள் கோபத்தினாலே மதியாமற் றனது நாயகனைநிந்தித்து அவமானப்படுத்தி வெளியேதுரத்திவிட்டு அவன்போனதின்பின் மனதிரங்கி விசனப்படும் நாயகியேயாம், பெருமூச்சு, வலியமயக்கம், பரிதாபம், விரகவேதனை, அழுகை, உபயோகமற்றவார்த்தை முதலானவைகள் இந்நாயகியின் குணங்களாக வெடுத்துச்சொல்வர் முன்னோர் எ-று. (௫௨)

முத்தாகலகாந்தரிதைக் கிலக்கியம்.
கவிக்கூற்று.

சினந்தேகுநாதன்பின்சென்றுபசாரஞ்செயாடனது
மனந்தேர்சகிமுதலோர்க்குவெட்கத்தினவ்வாறுசொலாள்
கனந்தோய்சுகவனர்நாட்டிளங்கால்பொரக்கட்புனல்கொண்
டனந்தாழ்சிறுநடைமின்படுக்கைக்குளயர்குவளே.

(இ - ள்.) அன்னமுங் கீழ்மைப்படுகின்ற சிறியநடையினையுடைய வொருநாயகியானவள் கோபித்துக்கொண்டு போகின்ற நாயகனுக்குப் பின்னே சென்று போகவேண்டாமென்று உபசாரமொன்றுஞ்செய்யமாட்டாள் வெட்கத்தினாலே தனது மனதறிந்த சகிமுதலானவர்களுக்கு அவ்வகையைத் தெரிவியாள், கனம்பொருந்திய சுகவனநாதர்நாட்டில் இளமையான தென்றலானது வீசி வாதிக்கக் கண்களிலே நீர்பொருந்தப்பெற்று படுக்கைக்குள்ளே வருந்தி மெலிகுவள் எ-று. (௫௩)

மத்தியாகலகாந்தரிதைக்கிலக்கியம்
கவிக்கூற்று.

இடர்சகிமார்க்குச்சொலாவிடிற்றீருவதில்லைசொல்ல
மடநெடுவெட்கம்விடாதென்செய்வோமெனவல்லவனாற்
றொட்டர்கலகஞ்சொலவன்னவர்பாற்சென்றுஞ்சொல்கிலளா
யுடனெதிர்சென்னிவளைத்தாள்சுகவனரூர்வஞ்சியே.

(இ - ள்.) சுகவனநாதர்தலத்தி லொரு நாயகியானவள் நமதுமனவருத்தத்தைச் சகிமார்களுக்கு நாம் சொல்லாவிட்டால் தீருவதில்லை, சொல்வதற்கோ அறியாமையையுடைய நெடிய வெட்கமானது நம்மைவிடமாட்டாது இ

தற்கென்னசெய்வோ மென்றொருவாறு துணிந்து தனது நாயகனுற்றொடர்ந்த கலகத்தைத் தெரிவிப்பதற்கு அந்தச் சகிமார்களிடத்தில்வந்தும் ஒன்றுஞ் சொல்ல மனமில்லாதவளாய் உடனே யவர்களுக்கு நேரே தலையைவளைத்து நின்றாள் எ-று. (ரு௪)

பிரபுடாகலகாந்தரிதைக்கிலக்கியம்.

கவிசகூற்று.

வாதுக்கிங்கேன்மட்டிவாயேதுணிந்தனைவாள்விழிகா
ளேதுக்கெங்கோன்முன்சிவந்தீர்கைகாள்விளைந்தேன்கலக
நீதித்தப்பாகவிளைத்தீர்நன்றினர்நினைகுவரோ
சோதிச்சுகவனர்நாட்டென்றொருகுயில்சோர்ந்தனளே.

(இ-ள்.) ஒருநாயகியானவள் அறியாமையையுடைய என்வாயே இங்கேன் வாதுபேச நீதுணிந்தாய், வாள்போன்ற கண்களே நீங்கள் என் நாயகனுக்கெதிரே யேதுக்குச்சிவந்தீர்கள், கைகளே நீங்களேன் கிரமப்பிசகாவிளைந்து கலகத்தைவிளைத்தீர்கள், மூடர்கள் நன்மையைநினைத்து அறிவார்களோ ஞானப்பிரகாசத்தையுடைய சுகவனநாதர் நாட்டினிடத்தென்றுசொல்லி விசனத்தாற்சோர்ந்தாள் எ-று. (ருரு)

பரகியாகலகாந்தரிதைக்கிலக்கியம்.

தலைவிசொல்லியது.

தயிரியபந்தயம்போயிற்றன்றேவெட்கஞ்சாய்ந்ததுற்றோர்
செயிரொழுநொந்தனர்வாய்க்கால்களானதிரைநதிக
ளுயிரினுமன்பனைப்போபோவென்றேன்சினந்துள்ளதன்றே
பயில்விதியின்பயன்யார்க்குஞ்சுகவனர்பாரிடத்தே.

(இ - ள்.) தயிரிய பந்தயங்களெல்லாம் அன்றேபோயின, வெட்கமும் அவ்வாறேபோயிற்று, உறவினரெல்லாம் குற்றமுடையவர்களாய் நொந்தார்கள், அலைகளையுடைய நதிகளெல்லாம் வாய்க்கால்களாயின நானிங்ஙன நடந்தும் இப்போது என்னுயிரினும்பிரியமுடைய என்னாயகனைத் திரஸ்கரித்துபோபோ வென்று தரத்தினேன் சுகவனநாதர்நாட்டில் யாருக்கும்பொருந்திய விதிப்பயன் உண்மையானதன்றோ எ-று. (ருசு)

சாமானியாகலகாந்தரிதைக்கிலக்கியம்.

தலைவிசொல்லியது.

உயர்பொற்குவிபலதந்துஞ்சுகவனரூரிலென்பாற்
றயவுற்றுச்சம்பளமில்லாமற்சேவகத்தன்மைசெய்த
நயசித்தசன்பிழையொன்றேன்பொறுநின்றுநான்சினந்தேன்
வயதுச்சிறிக்கிகட்கையோபிடரில்மதியுண்மையே.

(இ - ள்.) சுகவனநாதர் தலத்தில்உயர்ந்த பலசொர்ணக்குவியல்களை யெனக்குக்கொடுத்தும் என்மேற் பக்ஷமிகுந்த சம்பளமில்லாமலே சேவகத்தன்மைசெய்துகொண்டு இநவனைவந்த நயம்பொருந்திய மன்மதனென அந்தநாயகனுடைய வொருதப்பிதத்தைப் பொறுத்துக்கொள்ளாமல் ஏனவனையின்று நான்கோபித்தேன் அய்யோ வயதுச்சிறிக்களுக்குப் பிடிமேற் புத்தியெனப்பதசத்தியமே. (௧௭)

௬ - வது மலர் முற்றும்.

புரோடிதபதிகாநாயகியினிலக்கணமும் அவள்குணங்களும்.

தனதுநகர்விடுத்துமறுதலத்தினிற்சென்றுறைந்தசொந்தத்தலைவன்றன்னை, மனதுதனினினைத்துருகிமழைமுகில்காணுமயில்போல வருந்தாநின்ற, வனநிகருநடையுடையவரிவை புரோடிதபதிகையவத்தைபத்தும், பனகபணகடிதடவப்பைந்தொடிதன் குணங்களெனப்பகரலாமே.

(இ - ள்.) புரோடிதபதிகை யென்பவள் தனது நகரத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய் மறுதேயத்திலிருக்கின்ற சொந்தநாயகனை மனதிலே நினைத்துருகி (மழைமேகத்தைக்காணாத மயிலைப்போல்) வருத்தப்படுகின்ற (அன்னம்போலு நடையினையுடைய) நாயகியேயாம், தசாவத்தைகளும் (சர்ப்பபடைத்தையொத்த வல்குலையும் பசியவளைகளையுமுடைய) அந்நாயகியின் குணங்களென்று சொல்லலாம் எ-று. (௧௮)

முத்தாபுரோடிதபதிகைக்கிலக்கியம். கலிக்கூற்று.

அல்லல்சகிகட்குணர்த்தாள்பைம்பாசியணையடுத்து
மெல்லவதிற்றுயிலாள்வெள்கிக்கட்புனல்விஞ்சவிடாள்
சொல்லமிடறிறுக்காள்பதறுள்ளிச்சுகவனவூர்
வல்லவியெண்ணத்தைமன்மதனேயறிவான்மதித்தே.

(இ - ள்.) சுகவனநாதர் நகரிலொருநாயகியானவள்¹ தனது மனவருத்தத்தைச் சகிகளுக்குத் தெரிவியாள்,² பசிய நீர்ப்பாசியாற்செய்த³ சயனத்தையடுத்தும் வெட்கத்தாலதிற் படுத்துறங்காள்,⁴ கண்ணீரை யதிசரிக்க வெளியில்விடாள், வார்த்தைபேசுவதிற் றொண்டையை யிறுக்கிக்கொள்ளாள்; பதறமாட்டாள், இவளெண்ணத்தை மன்மதனே மதித்தறிவான் எ-று. (௧௯)

மத்தியாபுரோடிதபதிகைக்கிலக்கியம்.
தலைவிசகியைவினவுதல்.

பண்டுளவேயிவ்வளையனைனாண்கலைபார்க்கினிசை
வண்டுமுல்வேனிலில்வேறுகத்தோன்றியவாறென்னசொல்
விண்டுவணங்குஞ்சுகவனநாயகர்வெற்பின்மிசைச்
செண்டுவருந்தத்திரண்டெழுபூண்முலைத்தேன்மொழியே.

(இ - ள்.) திருமால் பணியாநின்ற சுகவனநாதர் மலையின்மேற் புட்பச் செண்டுகளுந் தோற்று வருந்தும்படி திரண்டுவளர்ந்த ஆபரணங்களையணிந்த முலைகளையுந், தேனைநிகர்த்த சொற்களையுமுடைய சகியே, இந்த வளைகளும் அரைஞாணுந் துகிலும் முன்னிருந்தவைகளே, பார்க்குமிடத்துக் கீதங்களைப் பாடுகின்ற வண்டுகள் சுழன்றுலாவும் வசந்தகாலத்தில் இவைகள் வேறுகத் தோற்றிய காரணமென்னசொல் எ-று. (௬0)

பிரபுடாபுரோடிதபதிகைக்கிலக்கியம்.
கவிக்கூற்று.

முத்தாரமுமரைஞாணுங்கமலமுகிழ்வடமும்
பத்தாநடந்தவன்றேபின்னடந்தனபாசிபந்து
சத்தாமுயிருளதோவிலதோவெனத்தானறிய
வித்தாரிமுன்கைசுகவனர்வெற்பில்விரைந்துற்றதே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சாரி லொருநாயகியின் முத்தாரங்களும் அரைஞாணுந் தாமரையரும்பின் சரங்களுந் தன்னுநாயகன் ஊர்ப்பயணம்புறப்பட்ட வப்போதே அவன்பின்னேபோய்விட்டன இப்போது இவளுக்குச்சத்தாகிய பிராணனிருக்கின்றதோ வில்லையோவென்று நாடிப் பார்த்தறியும்பொருட்டு வேகமாக பாசிபந்தானது விர்ப்பன்னியாகிய அவள் முன்கையை யடைந்தது எ-று. (௬௧)

பரகீயாபுரோடிதபதிகைக்கிலக்கியம்.
கவிக்கூற்று.

அம்மாமிநல்கம்புயப்பூவைப்பார்ப்பளலதுதொடா
ளெம்மாயமோவென்றிரங்குநங்கைக்குமெதிர்புகலாள்
விம்மாவிகுளையர்சொற்குமனத்துள்விடைகொடுப்பள்
சும்மாசுகவனர்நாட்டுபிர்க்காள்வஞ்சிசோர்ந்தஞ்சியே.

(இ - ள்.) சுகவனநாதர்நாட்டில் வஞ்சனைமிகுந்த வொருநாயகியானவள் தனது அழகிய மாமியாள் கொண்டுவந்துகொடுத்த தாமரைப்பூவைக்கண்ணும் பார்ப்பளேயல்லது கையாற் றெடமாட்டாள், இவளுக் கென்ன மாயா

வஸ்தையோ வந்துளதென்று விசனப்படுகின்ற நங்கைக்கெதிர் மொழியொன்றுஞ்சொல்லாள், விம்மிச்சகிமார்கள் வார்த்தைக்கு மனத்தினுள்ளே விடைகொடுப்பள், சும்மாவருந்தி அன்னியர்க்குப் பயந்து பெருமூச்சு விடாதிருப்பள் எ-று. (சஉ)

சாமாணியாபுரோடிதபதிகைக்கிலக்கியம்

கவிக்கூற்று.

அன்புநம்மீதிலுடையாளிவளென்றறிந்துநண்பன்
பின்புதனங்களனந்தமுதவப்பெறுவதெண்ணித்
தென்புயர்கண்ணின்மிளகுஜாத்திட்டுச்சிமிட்டிநின்று
மென்புனல்காட்டுந்தெருவிற்சுகவனர்வெற்பொர்மின்னே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சார்பில் ஒருநாயகியானவள் நம்மீது அதிகபிரியமுடையவ ளிவளென்று தெரிந்து நாயகனானவன் பின்னநேகபணங்கள் கொண்டுவந்துகொடுக்கத் தான் பெற்றுக்கொள்ளலாமென்று நினைத்துத் தென்புபொருந்திய தனது கண்ணில் மிளகையுஜாத்துத்தடவித் தெருவிலே நின்று சிமிட்டி மெல்லியநீரை உண்டாக்கிக்காட்டுவள் எ-று. (சந)

எ-வது மலர்முற்றும்.

அபிசாரிகாநாயகியினிலக்கணமும்,

அவள்குணங்களும்.

தனைத்தலைவனனுசரிக்கத்தானவனையனுசரிக்கத்தகுந்தசெய்வா
ணினைத்தவபிசாரிகையங்நேரங்கட்கேற்றவணிநிறைத்தல்சங்கை
கனத்தமதிவலிகபடமரியவினைமுயற்சியைந்தக்கன்னிபண்பா
மனத்தைநிகர்சுவீயைபரகீயையபிசாரிகைகட்கற்றமொன்றே.

(இ - ள்.) (மதித்த) அபிசாரிகையென்பவள் நாயகன் றன்னை யனுசரிக்கவாவது, தான் அவனை யனுசரிக்கவாவது, தகுந்தவைகளைச்செய்யும் நாயகியேயாம். அவ்வவ் வேளைகட்கேற்ற வாபரணங்களை நிறையத்தரித்தல்; சந்தேகம் (கனத்த) புத்தி, வல்லமை, கபடம், அசாத்திய காரியமுயற்சி, இந்த வைந்தும் அந்நாயகியின் குணங்களாகும் (அன்னம்போன்ற) சுவீயாபிசாரிகைக்கும், பரகீயாபிசாரிகைக்குஞ் சமயமொன்றே எ-று. (சச)

முத்தாபி சாரிகைக் கிலக்கியம்.

தலைவிக்குச் சகிசொல்லியது.

மேககணிதன்பயணநிமித்தம்விளக்கமின்னுந்
தோகையிருடுறந்தாள்சுவர்க்கோழிசுபமொலித்த
நாகரிகநிகுஞ்சஞ்செலற்கீதுநலசமயம்
வாசர்சுகவனர்வெற்பணங்கேயொருவாய்மகிழ்ந்தே.

(இ - ள்.) அழகிற் சிறந்தவராகிய சுகவனநாதர் மலைச்சார்பில் வசிக்குங் கன்னிகையே! மேகமென்னுங் கணிதவான்பயணத்திற்குரிய நிமித்தத்தை விளக்கக்காட்டினன்; மின்னலென்னுஞ் சகி யிருளையோடும்படி விலக்கினள்; சுவர்க்கோழிகள் சுபமாக வொலித்தன; நாகரிகமான புதர்வீட்டிற்குப்புறப்பட விதுவே நல்லசமையம் ஆதலால், நீ மனமகிழ்ந்தெழுவாய் எ-று. (சரு)

மத்தியாபிசாரிகைக் கிலக்கியம்.

தலைவன் றலைவியொடு சொல்லியது.

நாகமிகித்துவருவாயென்பொற்புயநண்ணவொவ்வாய்
மேகவிடிக்குமங்கஞ்சாயிங்கென்சொல்வெறுத்துமுக
கோகனகத்தைத்திருப்புவையென்செய்குவதிதற்கு
மாகர்துதிக்குஞ்சுகவனநாதர்வரைமயிலே.

(இ - ள்.) தேவர்கள் புகழாநின்ற சுகவனநாதர் மலைச்சார்பில் வசிக்கும் மயிலே நீ வழியிலே சர்ப்பங்களையு மிதித்துவருவாய், எனது புயங்களிற் பொருந்தச் சம்மதிக்கமாட்டாய், மேககர்ச்சனைக்கு மங்கே பயப்பட்டாய், இங்கே யென் மிருதுவசனங்களை வெறுத்து உனது தாமரைமலர்போன்ற முகத்தைத் திருப்பிக்கொள்வாய், நானிதற்கென்னசெய்வது எ-று. (சகூ)

பிரபுடாபிசாரிகைக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

தனபாரநின்னிடைதாங்காதிருளிற்றளிரடியா
லனமேயெவ்வாறுசெல்வாயென்றபாங்கியையாயிழைபார்த்
தெனதாமனேரதமுங்காமபாகனுமிங்கிருக்கப்
பினரோதுதாழ்வுசுகவனர்நாட்டெனப்பேசினளே.

(இ - ள்.) அன்னம்போல்பவளே முலைகளாகிய பெரியபாரத்தை உனது சிற்றிடை பொறுக்கமாட்டாது, அன்றியும் இந்தக் கடினவிருளிலே தளிர்போல் மிருதுவாகிய பாதங்களைக்கொண் டெப்படிநீ நடந்துசெல்வாய் என்ற சகியை அந்த நாயகிநோக்கி யென்னுடைய மன்மரகிய தேரும், மன்மதனாகிய சாரதியு மிங்கேயெனக்கு அமைந்திருக்கச் சுகவனநாதர்நாட்டிற் பின்பென்ன குறையென்று சொல்லினுள் எ-று. (சஎ)

பரகீயாபிசாரிகைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

இரவேபகல்புயலேகதிர்வல்லிருளேயொளிவெங்
கரவாகியவழியேமார்க்கங்காடுகளேபடுக்கை
தரலேமெத்தையுடைமுந்தியேயெனத்தான்றிரிவள்
விரகானலத்தினெருத்திசுகவனர்வெற்பிடத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் வரைக்கண் ஒருநாயகி தனது விரகாக்கினியினாலே இராத்திரியே பகல், மேகமே சூரியன், வலியவிருளே பிரகாசம், வெவ்வியதிருட்டுவழியே நல்லவழி, காடுகளே படுக்கைவீடு, சேலை முள்ளுகளையே பக்குவமான நீலோற்பல மலரணையென்னும்படி தான் சஞ்சரிப்பள் எ-று. ()

சாமானியாபிசாரிகைக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

பரிபுரமாடவளைகள்பண்பாடப்பணைத்தமுலை
சரிசரியென்றுகுலுங்கவுல்லாசத்தனிநடைபெற்
றுரியபொன்னாசைபிடித்துந்தநண்பனுறையுள்வந்தா
ளரியசுகவனர்வெற்பிலொருத்தியணிகார்த்தே.

(இ - ள்.) அருமையான சுகவனநாதர் வரைக்கண் ஒருநாயகி பாதச்சிலம்புகள் கலகலென்றாடவும், வளைகள் அதற்குத்தக்க பண்களைப் பாடுவனபோலொலிக்கவும் பருத்தமுலைகள் இவ்விரண்டுஞ் சரிசரியென்று மகிழ்வனபோற் பூரித்துக்குலுங்கவும், உல்லாசமாய் ஒப்பற்ற நடையை யுடையவளாய்ப் பொருளாசை பின்னேநின்று தன்னைப்பிடித்துத் தள்ளிவிட நாயகனிருக்குமிடத்தைத்தேடி யன்னம்போல் வந்தனள் எ-று. (௪௯)

சந்திரிகாபிசாரிகைக்கிலக்கியம்

கவிக்கூற்று-

கலைமதிதோன்றியபோதின்றானுங்கலைமதிபெற்
றிலைதிகழ்பூணினளன்பனிருக்குமிடங்குறித்து
மலைமுலையேந்திநெடுமாலெனும்படிவந்தனளா
லலைநதிசூடுஞ்சுகவனநாதரணிவெற்பினே.

(இ - ள்.) அலைகளோடுகூடிய கங்காநதியைத்தரித்த சுகவனநாதரது அழகியவரைக்கண் இலைவடிவாகப் பிரகாசிக்கும் ஆபரணத்தையணிந்த வொருநாயகியானவள் கலைகளையுடைய சந்திரனுதித்த சமயத்திலே தானும் சின்னபின்னமாகக்கலைந்த அறிவையுடையவளாய்க் கோவர்த்தனமலையை முல்லைநிலமாகிய ஆயர்பாடியிற் குடைபோலெடுத்துநின்ற திருமாலுக்கொப்பாக அலங்கரித்த முலைகளைத்தாங்கி யிவள்கொண்டது நெடியவிரகமென்று எவரும் நினைக்கும்படி நாயகனிருக்குமிடத்தைத் தேடிவந்தாள் எ-று. (௫௰)

திவாபிசாரிகைக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

பகியரசன்சொற்படிக்கேவிழாவணிபார்த்துவர
விதிமுறையாருஞ்செலும்போதுதாமும்விரைந்துடன்போ
யதிகவலுவலிருப்பதுபோற்பின்னின்றுடினரோர்
மதிமுகமானும்புமானுஞ்சுகவனர்மண்டலத்தே.

(இ - ள்.) சுகவனநாதர்நாட்டிற் பட்டினத்திராசன் கட்டளைப்படிக்கே திருவிழாப்பார்த்து வருவதற்கு கிரமமா யனைவரும் செல்கின்றபோது தாங்களும் அவர்களுடனே விரைவாகப்போய் இடையேயதிகமானசோலியேதோ தமக்கிருப்பதுபோற் பின்னிட்டுநின்று சந்திரனையொத்த முகத்தையுடையவொருநாயகியும் நாயகனும் கலந்து விளையாடினார்கள் எ-று. (௫௧)

நாயகிகளின்விரிதொகை.

முதல்வகுத்தநாயகிகள்பதினறுவருந்திறத்தான்முறையேயிந்த
விதமடுத்தவெண்மர்களாய்விளங்குவரவ்வாறு தொகைவிரிக்குங்காலே
யிகமிகுத்தநூற்றிருபத்தெண்மருத்தமாதிகுணவியைபாலன்றே
ருததிசுற்றுமுலகின்முன்னூற்றெண்பத்துநால்வர்களாயோங்குவாரே

(இ - ள்.) முதற்குச்சத்தில் வகுத்துப்போந்த பதினறுவகை நாயகிகளும் தனித்தனி தத்தம் ஏதுக்களாற் கிரமப்படியிவ்விதமாக இந்தக்குச்சத்திலமைந்தசுவாதீனபதிகாதி அட்டநாயகிகளாய்ப்பிரகாசிப்பர், அவ்வாறேதொகையைவிரிக்குங்கால் (இனிகமமிகுந்த நூற்றிருபத்தெட்டு நாயகிகளாவர், அவர்கள் உத்தமாதிகுணசம்பந்தத்தால் (கடல்சூழ்ந்தபூமியின்கண்) முந்நூற்றெண்பத்துநான்கு நாயகிகளா யுயர்வார்கள் எ-று. (௫௨)

இதுவுமது.

இத்தகைபரினந்திவ்வியாதிபேதத்தாலாயிரத்துநூற்றைம், பத்
திருவராஞ்சாதிபேதத்தாற்கணக்கிடிற்பற்பலராய்நிற்ப, ரத்தகையசு
வாதீனபதிகாதிபேதமுத்தைக்கமையாவேனு, முத்தமமுன்னூலுள
வென்றுணர்த்துமென்பர்சிலரதுகொண்டுணர்த்தாமன்றே.

(இ - ள்.) இத்தன்மையையுடைய முந்நூற்றெண்பத்து நான்குநாயகிகளும், இன்னந் திவ்வியாதிபேதத்தால் ஆயிரத்து நூற்றைம்பத்திரண்டு நாயகிகளாவர், சாதிபேதத்தாற் கணக்கிடப்புகின் அநேகராய்நிற்பர், (அந்தப்பெருமைதங்கிய) சுவாதீனபதி காதிபேதங்கள் முத்தைக்குப் பொருந்தமாட்டாதகளென்னினுஞ் சிலகிரந்தகர்த்தர்கள் (நன்மையினையுடைய) முன்னூல் அப்பேதங்கள் முத்தைக்கும்பொருந்துமென்று அறிவிக்குமென்பர், ஆதலால் அவ்வுறுதிகொண்டு நாமும் அவ்வாறேசொல்லினேம் எ-று. (௫௩)

அ-வது மலர்முற்றும்.

இன்னுஞ்சிலநாயகிகள்வருமாறு.

இன்னவிதநாயகிகளெவரினுஞ்சம்பந்த மொன்றுமிலராயினு
ம், பன்னரியபிரவச்சற்பதிகையென்றுஞ்சமாகச் சற்பதிகையென்று
ம், வன்னமுலைநாயகிகண்மற்றிருவருளரென்பர்வட நூல்வல்லோ, ர
ன்னவர்தமிலக்கணமுமமைகுணமுமினிவிவரித்தறைதுமாதோ.-

(இ - ள்.) இந்தவிதமாகவழங்கிய பலநாயகிகளினுஞ் சம்பந்தமொன்று மில்லாதவர்களாய்ச் (சொல்லுதற்கரிய) பிரவச்சற்பதிகையென்றுஞ் சமாகச்சற்பதிகையென்றும் (அலங்கரிக்கின்ற மூலைகளையுடைய) நாயகிகள் மற்றுமிருவர்களுண்டென்று வடநூலாசிரியர் சொல்லுவர்; அந்நாயகிகளினிலக்கணமும் அவர்க்கமைந்தகுணமும் இனி விவரித்துச்சொல்வோம் எ-று.

இப்பெயர்களை வடநூலார், ப்ரவச்சத்பதிகா, சமாகச்சத்பதிகாவெ ன்பர். (௫௪)

பிரவச்சற்பதிகாநாயகியினிலக்கணமும்,

அவள்குணங்களும்.

அக்கணத்திலூர்ப்பயணமதுசெயநிச்சயித்தபதி யணங்கேநீங்காப், பக்கமுற்றபிரவச்சற்பதிகைமனத்துயர்மருண்டபார்வைதாப, மிக்கடுத்தமூர்ச்சைபெருமூச்சுமிடறிறுகியசொல்வெள்ளம்போலு, மைக்கயற்கண்ணீர்பயணத்தடைக்குறியின் னனவவள்பால்வருபண்பாமே

(இ - ள்.) (நீங்காப்பிரியம்பொருந்திய) பிரவச்சற்பதிகை யென்பவள் அந்தக்ஷணத்திலே ஊர்ப்பயணஞ்செய்ய நிச்சயித்தபுருடனையுடைய நாயகியேயாம், மனவருத்தமும், மருண்டபார்வையும், தாபமும், மிகவுண்டாகிய மூர்ச்சையும், பெருமூச்சும், தொண்டையிறுகியசொல்லும், (மையெழுதிய கெண்டையொத்த) கண்களில் வெள்ளம்போலோடுகின்றநீரும், பயணத்தடைக்குறியு முதலானவை அந்நாயகியினிடத்து வருங்குணங்களாம். (௫௫)

முத்தாபிரவச்சற்பதிகைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

தலைவன்பயணஞ்சொலவுடனேயுட்டளர்வினளா
யலைமென்கொடிமுகம்பாதிவிளக்கவதுதெரிந்து
நிலையங்கவன்பிரியாதச்சுகவனர்நீள்வனாமின்
முலையொன்றிடக்குயில்போற்சகிகாவின்முழங்கினளே.

(இ - ள்.) நாயகன் றனது பயணத்தைத்தெரிவித்தவுடனே மனவருத்த முடையவளாய் அலைகின்ற மெல்லிய கொடிபோலும் நாயகியானவள் தன்முகத்தைப் பாதிவிளக்கச் சகியதை யறிந்து நிலைமையையுடைய வந்நாயகன் பிரியாதவனாகி சுகவனநாதராது நெடியவனாக்கண் அந்தநாயகியின் முலைகளில் ஆலிங்கனஞ்செய்து கொள்ளும்படி சோலையிற்போய் நின்று குயில்போற் சத்தித்தனள் எ-று. (௫௬)

மத்தியாபிரவச்சற்பதிகைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

அயல்போவதனைச்சுகவனர்வெற்பனடுத்துணர்த்தக்
கயலேர்விழிப்புனல்காட்டாடடைச்சொற்களைப்புகலா
ளியல்பாமுயிர்ப்புங்கொளாடன்றலையெழுத்தீதெனுமச்
செயல்போலநெற்றியைத்தொட்டாளடிக்கடிசேயிழையே.

(இ-ள்.) சுகவனநாதர் மலைச்சார்பிற் றனது நாயகன் மறுதேசத்திற்குப் புறப்படுஞ்செய்தியைத் தன்னிடத்தில் அடுத்தறிவிக்க, அப்போது சென்னை மீன்போ லழகியகண்களிலே நீராவடியாள், தடைச்சொற்களொன்றஞ் சொல்லாள், இயல்பாகிய நெடுமூச்சும் விடாள், தன் றலையெழுத்திதுவென்று காட்டும் அச்செய்கைபோல் அடிக்கடி அந்நாயகி தனது நெற்றியைத்தொட்டாள் எ-று. (௫௭)

பிரபுடாபிரவச்சற்பதிகைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

பயணசித்தத்தைபன்பன்சொலவெள்ளிலைபாகுநல்கித்
தயவிருக்கட்டுமுற்றும்போய்வருகதடம்புயவென்
னியல்சுபச்செய்தியினிக்கேட்பையிவ்வளவேயெனநன்
னயனுறத்தானறிவித்தாள்சுகவனர்நாட்டணங்கே.

(இ - ள்.) நாயகன் தான் பயணசித்தமாயிருப்பதைச் சொல்லியமாத்திரத்தில் அவன்கையில் வெற்றிலைபாக்குக்கொடுத்து உமக்கென்மே லெப்போதுந் தயவிருக்கட்டும், போய்வாரும் விசாலித்த புயங்களையுடையவனே, யெனது நடக்குஞ் சுபச்செய்தியை யினிக்கேட்பாய், இவ்வளவேதானென்று சுகவனநாதர் நாட்டின்கண் அந்தநாயகி நல்ல மகிழ்ச்சிபொருந்தத் தெரிவித்தாள் எ-று. (௫௮)

பரகீயாபிரவச்சற்பதிகைக் கிலக்கியம்.

தலைவிதலைவனொடு சொல்லியது.

மாமணக்கேள்வற்றுரும்பாக்கினேனத்தைமாமனுக்கு
நாமமிட்டேனெறிகெட்டேனுனைநம்பிநான்பயண
நீமதித்தாய்விடுமாவுழ்சுகவனர்நீள்வரையோய்
காமவெப்பூடுவிழறகுமிந்தக்கசட்டுடற்கே.

(இ - ள்.) சுகவனநாதர் நெடியமலைக்கண் வசிக்குமன்பனே! உனையே சதமாகநம்பி யெனது சொந்தக்கணவனை நான் ஒருதுரும்பாகப் பாவித்தேன், அத்தைக்கும் மாமனுக்கும் நாமம்போட்டேன், கிரமங்களையும் விட்டேன், இ

ப்படியிருக்க நீ ஊர்ப்பயணஞ்செய்யத் துணிந்தாய், ஊழ்வினைவிடுமா, இந்த ப்பாவியினுடைய குற்றமான வுடம்புக்குக் காமாக்கினி வெப்பத்தில் வீழ்வது தகும் எ-று. (ருக)

சாமானியாபிரவச்சற்பதிகைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

அகல்வேனென்றன்பன்சொலநாதவென்மெய்யதன்முனெய்த்து
மிகவேவளைகைநழுவினபார்நின்விரலணியும்
புகலாமிதிலென்றவன்மோதிரத்தையப்போதுமெத்திக்
ககநேருநோக்கிசுகவனர்வெற்பிற்கவர்ந்தனளே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சார்பிற் பாணங்களைநிகர்த்த கண்களையுடைய வொருநாயகியானவள் தனதுபிரியன் வேறே ஊர்க்குப் புறப்படுவேன் என்றுசொல்ல வோபிராணநாதா அதற்குமுன் எனது சரீரமெல்லா மிளைத்துமிகவுங் கைவளை நழுவிப்போயின இதோபாருனது மோதிரமும் இதிற்புகுவதாகுமென்று அப்போதும் அவன்கைமோதிரத்தை யெத்திப்பறித்துக்கொண்டாள் எ-று. (கூ0)

கூ வது - மலர் முற்றும்.

சமாகச்சற்பதிகாநாயகியி னிலக்கணமும்
அவள்குணங்களும்.

பதிமறுதேசத்திருந்துவரக்கண்டாள்சமாகச்சற்பதிகையாமத்
ததியெழுபேருவகைபுளகதிசயநோக்கொடுவிரகசாந்திமூர
லதிவிதமாமுன்னுரைபாராட்டன்முகமலர்ச்சியொன்றுமறிவுறாமை
யெதிர்தருமானந்தவிழிப்புனல்குறிப்புமுடிதன்முதலிவள்பண்பாமே.

(இ - ள்.) சமாகச்சற்பதிகையென்பவள் தனது பதிதேச சஞ்சாரத்திலிருந்து வரக்காணு நாயகியேயாம். அப்போதேயுண்டாகிய பெரியமகிழ்ச்சியும், புளகாங்கிதமும், அதிசயமான பார்வையும், விரகஞ்சாந்தப்படுதலும், புன்சிரிப்பும், வேடிக்கையாக முந்திய சமாசாரங்களைப் பேசிப்பாராட்டுதலும், முகமலர்தலும், என்றுமறியாதிருத்தலும், தோன்றுகின்ற ஆனந்தபாஷ்பமும், குறிப்புநிறைவேறுதலும், முதலானவை யிந்நாயகியின் குணங்களாம் எ-று. (கூக)

முத்தாசமாகச்சற்பதிகைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

இத்தனைநாட்சென்றும்வாராதஜென்னின்னமென்றிரங்கு
மத்தகியன்பன்புகமுலைவேர்வையடியலம்புந்
சுத்தநன்னிரொனத்தந்துநகைவெண்டுணரினர்ச்சித்
துத்தமிசேக்கைசுகவனர்வெற்பிடத்துற்றனளே.

(இ - ள்.) இவ்வளவு நாளாகியும் இன்னம் வராமலிருப்ப தென்னவென்று வருந்தும் அந்தச்சமயத்திலே நாயகன் வரக்கண்டு தனது தனங்களிலுண்டாகிய வேர்வையை யவனுக்குக் கால்சமுவும் சுத்தமான நல்லநீராகக்கொடுத்து சிரிப்பாகிய வெள்ளியபுட்பங்களால் அவனை யரிச்சித்து சுகவனநாதர் வரைக்கண் அந்தவுத்தம குணத்தையுடையநாயகி படுக்கைவீட்டைச் சேர்ந்தாள் எ-று. (கூஉ)

மத்தியாசமாகச்சற்பதிகைக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

தூரத்திருந்துபதிவரக்கண்டன்புதூண்டவண்மிச்
சேரத்துணிவளிற்கேகத்துடிப்படிருந்திரண்டு
நேரொத்ததாலசையத்தெரியாதுநிறம்புனைசிங்
காரப்பொற்பாவைநிகர்த்தாள்சுகவனர்கானமின்னே.

(இ - ள்.) சுகவனநாதர் புகழாகிய கீதத்தையுடைய வொருநாயகியானவள் தனது கணவன் தூரதேசத்திலிருந்து வரக்கண்டு மனத்தின் அன்பானது தூண்டுதலால் அவனையடுத்துத் தழுவுதற்குத் துணிவாள் படுக்கைவீட்டிற்செல்லப் பதறுவாள் திருந்திய இவ்விரண்டெண்ணங்களுஞ் சமமாயிருந்ததால் ஒன்றுஞ் செய்வதற்கிடமின்றி அசையவுந்தெரியாதவளாய் நிறத்தைத் தரித்த அலங்காரமான சொர்னப்பாவையை நிகர்த்துநின்றாள் எ-று. (கூங)

பிரபுடாசமாகச்சற்பதிகைக்கிலக்கியம்

வினாவிடை.

தனமிசைபொற்புங்கணின்மருணோக்கமுஞ்சாயமிதழ்
துனநகையும்பெறவோர்பதிதந்ததென்சொல்லதுகே
ளனநடைகிள்ளைமொழியம்புயமதிக்கானமென்மை
யினிமைமணந்தண்சுகவனர்வெற்பிறையீந்தனனே.

(இ - ள்.) ஓநாயகியே உனதுமுலைகளிற் பொலிவுங் கண்களில் மருண்டபார்வையும் அதரத்திற் சாயமுண்டாகும்படி சிரிப்பும் நீபெறுவதற்கு இப்போது வந்தநாயகன் உனக்கென்னதந்தான் சொல் ஓசகியே அன்னநடைக்கு மென்மையும் கிளிவார்த்தைக் கினிமையும் தாமரைமலருக்கு வாசமுஞ்சந்திரனுக்குக்குளிர்ச்சியும் சுகவனநாதர்வரைக்கண் அந்தநாயகன்கொடுத்தான்.

பரகீயாசமாகச்சற்பதிகைக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

வருதலைவன்றெருவூடேகத்தன்மனைவாய்க்கதவி
னருகினில்வந்தொஞ்சரித்தங்குளார்சொற்காடாதசொல்லி
வெருவறநோக்கிவிரகக்கனலினைவேர்வையெனு
மொருகடலாலவித்திட்டாள்சுகவனரூர்வஞ்சியே.

(இ - ள்.) சுகவனநாதர் தலத்தில் ஒருநாயகியானவள் தேச சஞ்சாரத்திலிருந்துவந்தநாயகன் வீதியினூடுபோகத் தனது வீட்டுக்கதவின் சமீபத்தில் வந்து அக்கதவை யொஞ்சரித்திருந்து அங்கேயுள்ளவர்கள் வார்த்தைகளுக்கெவ்வளவுஞ் சம்பந்தமில்லாத பிரதியுத்தரங்களைச் சொல்லிக்கொண்டு அந்நாயகனைப் பயந்தீரும்படிபார்த்துத் தான்கொண்ட விரகாக்கினியை வேர்வையாகிய ஒருசமுத்திரத்தினால் அவித்தாள் எ-று. (௬௫)

சாமானியாசமாகச்சற்பதிகைக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

வந்திடுநேயனெதிர்போய்மெய்போற்கண்மழைபொழியத்
தந்திரமாயழைத்துள்ளாக்கிமெத்தைதனிலிருத்திப்
புந்திமகிழும்படிசெய்துமெள்ளப்பொருண்முடிப்பைச்
சிந்திவிடாதுகைக்கொண்டாள்சுகவனர்சேலமின்னே.

(இ - ள்.) சுகவனநாதர் சேலமாநகரிலோர்நாயகி தேசசஞ்சாரஞ்செய்துவந்த தலைவனுக்கெதிர்போய் மெய்போலக் கண்களிரண்டும் நீராமழைபோற்பொழிய வுபாயமாய் அவனையழைத்துத் தன்வீட்டுக்குட் கொண்டுவந்து மெத்தையின்மேலிருத்தி மனமகிழத் தகுந்தபடிசெய்து மெள்ள அவன்கையிலிருந்த பணமுடிப்பைச் சிதறிவிடாமற் பறித்துக்கொண்டாள் எ-று. (௬௬)

௧0-வது மலர்முற்றும்.

சகிதூதிகளினிலக்கணமும்

அவர்குணங்களும்.

அருமையொடுமிகநேசித்தகமகிழும்படியேநாயகியின்பக்க
மருவியுறைபவள்சகியாம்வனைதலுபாலம்பனம்பின்வழாதசிட்சை
வெருவில்பரிகாசமவள்குணந்தூதுசெலத்தகுந்தமின்னாந்தூதி
பருவவிரகந்தெரியப்படுத்தலுஞ்சேர்க்குதலுமிவள்பண்பாமன்றே.

(இ - ள்.) சகியென்பவள் அருமையுடனே நிரம்பவும் விசுவாசித்து நாயகி மனமகிழும்படி யவளது பக்கத்தே பொருந்தியிருப்பவளாம், அலங்கரித்தலும், உபாலம்பனமும் (பின்புவழுவாத) சிக்ஷையும் (பயமில்லாத) பரிகாசமும் அவட்குரிய குணங்களாம். தூதியென்பவள் தூதுசெல்வதற்குத் தகுந்தவளேயாம், பருவமான விரகத்தையறியப்படுத்துதலும், சேர்க்குதலும், இவட்குரிய குணங்களாம் எ-று. (௬௭)

அலங்கரித்தலுக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

வகைவகைகோலமுலேக்கிடும்போதுமணுளன்விரற்
றகையுயிர்பாய்வனபோலவன்கையைச்சகியெழுத
நகைகொட்டதட்டிச்சுகவனர்வெற்பினன்னங்கைகண்ணின்
முகைவிரிமாலிகையாலடித்தாளொருமோகினியே.

(இ - ள்.) சகியானவள் தனது முலேகளின்மேல் வகைவகையாகக் கோலஞ்செய்யுஞ் சமயத்திலே நாயகனது அழகிய விரல்களினகங்கள் பாயும்பாவனேபோலிருக்கும்படி யவனதுகையை யம்முலேகளின்மேல்எழுத அதுகண்டு ஒருநாயகியானவள் புன்சிரிப்போடு அதட்டிக்கொண்டு சுகவனநாதர்வரைக்கண் அந்தச்சகியினது கண்களில் அரும்பலர்ந்த பூமாலிகையினுல் அடித்தாள் எ-று. (சுஅ)

உபாலம்பனத்துக் கிலக்கியம்.

தலேவியைச் சகிவினவுதல்.

பருவமழையினுலகந்தழைக்கும்படிவருங்கார்
பொருவவுனதுளம்பூரிக்கச்செய்யும்புமானிடத்திற்
கருணேயிலாதிருக்கின்றனேயந்தக்காரணமென்னே
வருணகுடிலசுகவனநாதர்வரையணங்கே.

(இ - ள்.) நீரைத்தரித்த சடாமகுடத்தையுடைய சுகவனநாதர் வரைக்கண் வசிக்கும் நாயகியே பருவத்தே தான்பொழிகின்ற மழையினுல் உலகங்களெல்லாந் தழைத்தோங்கும்படிவருகின்ற மேகத்தைப்போலுனது சரீரமுழுதும் பூரிக்கச்செய்யும் அந்தநாயகனிடத்துக் கொஞ்சமாயினும் நீதயவில்லாதிருக்கின்ருய் உன் அந்தரங்க நினேவுயாதோ தெரியச்சொல் எ-று. (சுக)

சிட்டைக் கிலக்கியம்.

தலேவிக்குச் சகிசொல்லியது.

சுகமணவாளனேத்தேடிப்பொழிற்புதர்துன்னுவையேற்
பகலளிகோடிபண்பாடிச்சுழலும்படரிரவிற்
றிகழுமநேகசகோரத்திரளிவைதேர்ந்துசெல்வாய்
மகபதிபோற்றுஞ்சுகவனநாதர்வரைமயிலே.

(இ - ள்.) தேவேந்திரன்வந்து பணிகின்ற சுகவனநாதர் வரைக்கண் மயில்போலு நாயகியே இன்பத்தைத்தருகின்ற வுனதுநாயகனே நீதேடிக்கொண்டு அந்தச்சோலேயிலிருக்கும் புதர்வீட்டிற்குப்போகத் துணிவாயாகிற் பகற்காலமெல்லாங் கோடானுகோடி வண்டினங்கள் கீதங்களேப்பாடிக்கொண்டெங்குஞ் சுழன்றுதிரியும் பரந்தவிராக்காலத்தோவெனின் அநேக சகோரப்புட்களின்

கூட்டங்கள் பிரகாசித்தலாவும் ஆதலாலிவைகளையோசித்து அங்கே செல்லக் கடவாய் எ-று. (எ0)

சகிகள்நாயகியைப்பரிகாசித்தலுக் கிலக்கியம்.

கவிக்கூற்று.

பலவுமெழுதியுளசித்திரப்பொற்படத்தொருபாற்
குலவுசுகவனநாதருருவுக்குமித்தமைத்து
மெலவிவர்யாரொன்றிகுளேயர்கேட்கமுன்வெள்கிநகைத்
தலர்விழியால்விடைதந்தாண்மகிழ்ந்துசொர்ணும்பிகையே.

(இ - ள்.) தனதுசகிமார்கள் பலவடிவங்களையும் தனித்தனி எழுதியிருக்கின்றவழகிய சித்திரப்படத்தின்மேல் ஒருபக்கத்தில் விளங்காநின்ற சுகவனநாதரது திருவுருவத்தையும் எழுதிவைத்துக்கொண்டுபைய அம்மா இவர்யார் சொல்வாயென்று கேட்டமாத்திரத்திற் சொர்ணும்பிகையானவள் முன்னமே யப்பேர்சொல்ல வெட்கமுற்றவளாய்ப் புன்சிரிப்புடனே தாமரைமலர்போன்ற கண்களால் அவர்களுக்கு மகிழ்ந்துவிடைகொடுத்தாள் எ-று. (எக)

நாயகிநாயகனைப்பரிகாசித்தலுக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

சூதாடலிற்றன்பணிகோன்மறைக்கச்சுகவனநன்
ஞுதாவெடுத்ததருள்சத்தியத்துக்குநாணுவையோ
நீதானனல்விழிகொண்டாய்வெம்பாம்பொடுநீர்தரித்தா
யாதாரமேயவையென்ருள்சிரித்துச்சொர்ணும்பிகையே.

(இ - ள்.) சுகவனநாதருஞ் சொர்ணும்பிகையுஞ் சொக்கட்டான்விளையாடுமிடத்தே தேவியினது ஆபரணத்தை அக்கடவுளெடுத்து மறைத்துக்கொள்ள அச்சொர்ணும்பிகை அவரைநோக்கிப் புன்சிரிப்புடனே சுகவனநாதரே யென்னிடத்திருந்து எடுத்துக்கொண்ட வாபரணத்தைக்கொடும் ஏன் இல்லையென்றுசாதிக்கின்றீர் நீர்சத்தியம்பண்ணவும் நாணுவீரோமாட்டீர் ஏனென்ருல் அக்கினியைக் கண்ணில் வைத்துக்கொண்டீர் பாம்பையும் நீரையுந் தரித்திருக்கின்றீர் அவைகளுமக்காதாரமே யினியெதற்குப் பயப்படுவீர்என்ருள் எ-று. ()

விரகந் தெரிவித்தலுக் கிலக்கியம்.

நாயகனுக்குத்துதிசொல்லியது.

பங்கயனெங்குமிலங்கவருந்திப்படைத்தகுல
நங்கையெனும்பெருந்தீபங்கடைத்திசைநண்ணரியதாற்
சங்கைதவிர்ந்தெழில்பொங்கநின்னேயதயிலநிறை
வெங்கயதுங்கனிறைஞ்சுஞ்சுகவனர்வெற்பரசே.

(இ-ள்.) வெவ்விய அயிராவதமென்னும் யானையினையுடைய வுயர்ந்த தேவேந்திரன் வணங்குஞ் சுகவனநாதர் வரைக்கண் வசிக்கின்ற நாயகனே யெங்குங் காந்தி பிரகாசிக்கும்படி பிரமதேவனால் மிகவும் வருந்திச் சிருட்டிக்கப்பட்டிருக்கின்ற வெங்கள் குலநாயகியாகிய பெரியதீபமானது இப்போது முடிவானதிசையை யடுத்துள்ளதால் அத்தீபமானது சந்தேகநீங்கப்பெற்று அழகாலதிகரிக்கும்படி யுனது சிநேகமென்னுந் தயிலத்தை நிறையச்செய்வாய் எ-று. (எங)

சேர்த்தலுக்கிலக்கியம்.

நாயகனுக்குத்தூதிசொல்லியது.

சரசந்தெரிபவர்மெச்சுமிராவந்ததுசுரும்பின்
றிரளென்றிடவிருளெங்கும்வளைந்ததுதேர்ந்திளைஞர்
விரகங்கொளக்கணைவிற்பூட்டினன்மதவேள்விரைந்து
பரவுஞ்சுகவனர்வெற்போய்செய்வாய்செய்பவைகளையே.

(இ-ள்.) எல்லாவுலகமுந் துதிக்கின்ற சுகவனநாதர் வரைக்கண் உள்ள நாயகனே சரசவிநோதங்களின் அருமைபலவுந் தெரிந்தோர்களால் மெச்சப்பட்ட விராக்காலமிதோ வந்தது வண்டின்கூட்டங்களெங்கும் வியாபித்ததென்று நினைக்கும்படி யிருளும் வளைந்துகொண்டது இவைகளையறிந்து மன்மதனானவன் இளமையையுடைய தலைவி தலைவர்கள் யாவரும் விரகத்தையடையத் தனது கருப்புவில்லிற் புட்பபாணங்களைப் பூட்டினன் ஆதலால் நீவிரைந்து செய்யத்தக்கவைகளை யிப்போது செய்வாய் எ-று. (எச)

கக-வது மலர் முற்றும்.

இத்தனைமலர்களாலிக்குச்சம்
முடிவுபெற்றதெனல்.

எட்டுவிதநாயகிகளிலக்கணமும் பின்னிருவரியல்பும்பத்து
மட்டுவிரிமலராகமற்றமைந்தபலவுமொருமலரோயாகக்
கட்டுளவப்பதினொருபூக்களிலிரண்டாங் குச்சமதைக்கவினச்செய்தா
நெட்டுவரிப்புவிமதிக்கநிறைமூன்றுங் குச்சமினிநிகழ்த்துவோமால்.

(இ-ள்.) எட்டுவகையாக வழங்கிய நாயகிகளி னிலக்கணமும், பின்னிருவகையாக வழங்கிய நாயகிகளினிலக்கணமும், ஆகியவிப்பத்தும் வாசனைவிரியப்பெற்ற பத்துமலர்களாக அப்பாற்சொல்லிய பலவிலக்கணமும் ஒருமலராகத்தொடர்ச்சியுள்ள அப்பதினொருமலர்களால் இரண்டாவது குச்சத்தை யழகுபொருந்த வலங்கரித்தோம், இனி நெடியகடல்சூழ்ந்த பூவுலகமதிக்கும்படி நிறைந்த மூன்றுங்குச்சத்தைப் பிரகாசிக்கச்செய்வோம் எ-று. (எரு)

இரண்டாவதுகுச்சம் முற்றும்.

ஆ செய்யுள் கஅஉ.

உ

சிவமயம்.

மூன்றாவது குச்சம்.

நாயகர்களிலக்கணாரம்பம்.

வளமைதிகழ்சேலநகர்வளர்சுகவனேசர்திருமலர்த்தாள்போற்றி
யிளமுறுவனாயகிகளிலக்கணமுமுட்பிரிவினியல்புமேனை
யுளபலவுமிரண்டுகுச்சத்துணர்த்திவந்தாமினியவர்கட்குரியராய
தளவவணிநாயகர்பேதமுமிலக்கணமும்பிறவுந்தகவிற்சொல்வாம்.

(இ - ள்.) சகல வளமையும்பெற்று பிரகாசிக்கின்ற சேலமாநகரில் வீற்றிருந்தருளிய சுகவனநாதரது அழகிய தாமரைமலர்போலும் திருவடிகளை வணங்கி யிளமைவாய்ந்த புன்னகையினையுடைய நாயகிகளினிலக்கணமும் உட்பிரிவுகளின் றன்மையும், மற்றுமுள்ளன பலவும் இவ்விரண்டு குச்சங்களாலும் அறிவித்துவந்தாம், இனியந்நாயகிகளுக் குரியவர்களாகிய முல்லைமாலிகையைத் தரித்தநாயகர்களின் பேதமும் இலக்கணமும் வேறுள்ளனவும் கிரமப்படி சொல்லுவோம் எ-று. (க)

நாயகர்பேதமும் பதியினிலக்கணமும்
அப்பதியின்பேதமும்.

நாயகர்கள்பதியுமுபபதியுநல்வைசிகனுமெனநவிலுமூவ, ராயமைவாரங்கவர்க்குளரியபதிவிதிமுறைவேட்டவனாமன்றே, னேயவனுகூலனென்றுந்தட்சிணனென்றுந்திருட்டனென்றுமேனைத், தூயசடனென்றுமொருநான்குவகைப்படுமென்பர்தொன்னூல்வல்லோர்.

(இ - ள்.) நாயகர்கள்பதியென்றும், உபபதியென்றும், (நல்ல) வைசிகனென்றும் சொல்லப்பட்ட மூவர்களாய் வழங்குவார்கள்; அவர்களுள் (அருமைதங்கிய) பதியென்பவன் விதிப்படி மணஞ் செய்துகொண்ட நாயகனேயாம், அந்நாயகன் (பொருந்திய) அனுகூலனென்றுந் தக்ஷிணனென்றுந் திருட்டனென்றுஞ் (சுத்தத்தையுடைய) சடனென்றும் வகுக்கப்பட்ட நான்குபேதங்களை யடைவனென்று புராதனக்ரந்தகர்த்தர்கள் சொல்வர் எ-று. (உ)

பதிக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

அதிவேனிலினுஞ்சொர்ணம்பிகைமேனிகன்றுறுவப்ப
மதியேயமூதககநீர்விசுனதுமணிப்பட்த்தாற்
புதிதாங்கிழலினைவாசுகியேகுடைபோற்புரிவா
னதியேபுனறுளியென்னுஞ்சுகவனநாயகனே.

(இ - ள்.) சுகவனநாதன் றனது நாயகிமேல்வைத்த பிரியத்தினுல் தான் அணிந்துள்ளவைகளைநோக்கி ஓசந்திரனே யிந்தச்சொர்ணம்பிகையினது திருமேனி யதிகவேனிற்காலத்தினும் வருந்தாமல் மகிழும்படி நீ அமிர்தகிரணங்களைவீசு, ஓவாசுகியே யுனது மாணிக்கத்தையுடைய படத்தினுற்குடைபோற் புதிதாகிய நிழலை நீயுண்டாக்கு, ஓகங்கையே நீர்த்துளியைச் சிந்தென்று கட்டளையிட்டருளுவன் எ-று. (ங)

அனுகூலதக்ஷிண நாயகர்களின்

இலக்கணம்.

கலகமதர்விழிப்பரமங்கையர் கட்மைச்சொப்பனத்துங் கருதாதென்றுங், குலமனைவிமீதிலன்புகூர்ந்திருக்குங் காந்தனனுகூலனிகும், பலதருணநாயகிகள் பாலுமொன்றுபோற்பிரியம் படைத்துநிற்போ, னுலகுபுகழ்தட்சிணனென்றுரைப்பர்மற்றேரியல்பும்மெடுத்துணர்த்துவாமே.

(இ - ள்.) அனுகூலனென்பவன் (கலகங்களைவிளைத்து மதர்த்தகண்களையுடைய) அன்னியமாதர்களைக் கனவினும் எண்ணுதவனுகி யெப்போதுந் தனது குலநாயகியின்மீது அன்பு மிகுந்திருக்கும் நாயகனேயாம்; (பூமியிற்புகழப்பட்ட) தக்ஷிணனென்பவன் இளமையையுடைய பலநாயகிகளினிடத்தினும் ஒரேதன்மையாகப் பிரியம்வைத்து நிற்குநாயகனேயாமென்றுசொல்வர் முன்னேர், ஏனைநாயகர்களிலக்கணங்களையும் எடுத்தறிவிப்போம் எ-று. (ச)

அனுகூலநாயகனுக் கிலக்கியம்.

தலைவன் சொல்லியது.

தரையேமிருதுவடைபானுவேதண்சசியினெளிர்
விரைபாதையேகுன்றுதென்றலேயுடல்வேர்வைதணி
யுரைசோலையேயணித்தாவாய்சுகவனரூர்முலைமால்
வரைநாயகியெழுந்தாண்மலர்கொய்துவருவதற்கே.

(இ - ள்.) சுகவனநாதர் தலத்தில் முலைகளாகிய பெரியமலைகளையுடைய விந்நாயகி மலர்கொய்து வருவதற்காக இதோபுறப்பட்டனள், ஆதலால் பூமியே நீ மிருதுத்தன்மையைப்பொருந்தியிரு, சூரியனே நீ குளிர்ந்த சந்திரனைப்போற் பிரகாசிவிரைந்து நடப்பதற்கு இடமாகியவழியே நீசுருங்கு, தென்றலே யிவள்உடலில் உண்டாகும் வேர்வையை நீதணி, உயர்ந்தசோலையே நீ சமீபித்துவிடு எ-று. (ரு)

தக்ஷிணநாயகனுக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

சித்தசனுந்தொடரித்தனைமாதர்திரளிலெவ்வா
றொத்தசமரசபார்வைவைப்பேனென்றொருபுருடன்
முத்தநகையெழமெய்புளகெய்தமுறையினன்பா
யத்தர்சுகவனர்வெற்பிற்கண்மூடியமர்ந்தனனே.

(இ - ள்.) அத்தராகிய சுகவனநாதர்வரைக்கண் ஒருநாயகன் றனக்கெதிர் மொய்த்த பலநாயகிகளையு நோக்கி மன்மதனும் ஆசைகொண்டு தொடரத்தக்க இத்தனைநாயகிகள் கூட்டத்தில் எப்படி நான் சமரசமான பார்வையை வைப்பேனென்று முத்துக்களையொத்த புன்சிரிப்புத்தோன்றவும், சரீரம் புளகிக்கவும், முறைப்படி யெல்லோரிடத்தினும் ஒரேதன்மையாகப் பிரியங்கொண்டு தனது கண்களை மூடியிருந்தனன் எ-று. (௬)

திருட்டசடநாயகர்களினிலக்கணம்.

தவறியற்றியிருந்துமதிற்சங்கையின்றிநாயகிமுன்சார்ந்துபின்னு
மவள்வெறுக்கக்கண்டுமகலாதுரிமைபாராட்டியன்புகூர்வோ [பாற்
னுவகைமிக்கதிருட்டனடர்ந்தோங்கு மிருகளபமுலையுடையோர்தம்
கவடவித்தைசாதிக்குங்கனசமர்த்தன்சடனெனலாங்கருதுங்காலே.

(இ - ள்.) நினைக்குங்கால் மகிழ்ச்சிமிகுந்த திருட்டனென்பவன் தான் அபராதஞ்செய்திருந்தும் அதிற் சந்தேகமில்லாதவனாகி நாயகியின் முன்னே போய்ப் பின்னுமந்த நாயகி பரிகரிக்கக்கண்டும் அவளைவிட்டு விலகாமற் சொந்தம்பாராட்டி யதிகபிரியத்தைக்காட்டும் நாயகனேயாம்; சடனென்பவன் ஒன்றோடொன்று நெருங்கிவளர்ந்த விரண்டுகளபங்களையணிந்த தனங்களையுடைய பெண்களினிடத்திற் கபடமாகிய வித்தையைச்சாதிக்கும் கனமான சமர்த்தியத்தைப்பெற்ற நாயகனேயாமென்று சொல்லலாம் எ-று.

திருட்டனென்னும் பெயரை வடநூலர் திர்ஷ்டனென்பர். (எ)

திருட்டநாயகனுக்கிலக்கியம்.

தலைவி சகியொடு சொல்லியது.

மணிவடத்தாலடித்தோட்டிவிட்டேனெசமானையவன்
கணிசமுற்றொலெனப்பார்த்திருந்தான்புறங்காப்பினைநான்
றணிவறத்தேடிநின்றேன்றானுந்தேடவந்தான்சிடுத்தே
னணியணைக்குட்படுத்தானென்சுகவனர்நாட்டணங்கே.

(இ - ள்.) சுகவனநாதர் நாட்டின்கண் வசிக்கின்ற சகியே, என்னுடைய நாயகனை நான் முத்தாரத்தினலடித்து வெளியே துரத்திவிட்டேன், அவன் அதினு லதிக கனமடைந்தவனைப்போலத் தூரத்தேயிருந்து பார்த்துக்கொண் டிருந்தான், பின்பு நானிடைவிடாமல் எனது கைக்காப்பைக் காணேமென்று தேடுகின்றேன், அவனு மென்னைப்போலவே தேடவந்தான், மறுபடியு மவனை த் திட்டிக் கோபித்தேன், படுக்கையி லென்கிட்டப் படுத்துக்கொண்டான் இது வென்ன வாச்சரியம் எ-று. (அ)

சடநாயகனுக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

செழுமலர்சூட்டிச்சரம்பூட்டிநானத்திலகமிட்டு
வழுவறநம்பியமாதனைஞாணைவளஞ்செயல்போன்
முழுநிருவாணத்தொடுதுள்ளச்சேலைமுடியைமெல்ல
விழுமியகேள்வனவிழ்த்தான்சுகவனர்வெற்பிடத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் மலைச்சார்பிற் சிறந்த ஒருநாயகன் றனது நாய கிக்கு அழகிய புட்பஹாரங்களைக் கூந்தலிற்சூட்டிச் சரப்பணிகளை, மார்பிற்பூ ட்டிக் கத்தூரிப்பொட்டை நெத்தியிற்றீட்டித் தன்னையெவ்வளவுஞ் சந்தேகமில் லாமல் நம்பிய அந்நாயகியின் அரைஞாணைத்திருத்துவதுபோல் அந்தநாயகி முழு நிருவாணத்துடனே குதிக்கும்படி யவளது சேலைமுடியை மெள்ள அவிழ்த்தான் எ-று. (கூ)

சடபேதங்களுமவ்விலக்கணமும்.

வருசடனிலடங்கினராய்மானியென்றுஞ்சதுரனென்றும்வழங் காநின்றோர், ரிருவருளரவர்கட்பின்மானிமனவுரோசமுள்ளோனென் னலாகும், கருவவுரைகளினேனுங்காட்டுதொழில்களினேனுங் கடல் சூழ்ஞாலத், தருமைபெறுவியங்கியமுள்ளவன்சதுரனெனவுணர்த்து மாதிநூலே.

(இ-ள்.) மேல்வந்த சடனென்பவனுக்குள் மானியென்றுஞ் சதுரனென் றும் வழங்குகின்ற நாயகர்களிருவருண்டு, அவர்களில் மானியென்பவன் மன த்திலதிக வுரோசமுள்ள நாயகனென்றுசொல்லலாம். சதுரனென்பவன் (கட ல்சூழ்ந்த பூமியின்கண்ணே) கருவந்தங்கிய வார்த்தைகளினாலாவது காட்டப் பட்ட செய்கைகளினாலாவது அருமையான வியங்கியமுள்ள நாயகனுமென் று புராதனவடநூலறிவிக்கும் எ-று.

வியங்கியமென்பது சாதாரணமாயிருக்கும் அருத்தத்தையல்லாமல் வே றோருத்தத்தையுங் காட்டுவது. (கo)

மானிக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

உனதுளமோவச்சிரஞ்சொற்களோவமுதொக்குமெனச்
சொனவுடனேர்நின்றிடாதயல்போய்ப்பின்னுந்துன்னிமுக
வனமலர்கோட்டிச்சுகவனர்வெற்பவன்வைகலுந்தன்
கனவிசனந்தெரிவித்தெனப்பார்த்தனள்காரிகையே.

(இ - ள்.) நாயகி நாயகனைநோக்கி உன்னுடைய மனமோவச்சிரத்தைப் பார்க்கினுங் கடினமுடையது, வார்த்தைகளோ அமிர்தத்தை யொத்திருக்கின் றனவென்று சொன்னவுடனே அவனுக்குநேராக நில்லாதவளாகி வெளியே போய்ப் பின்னும்வந்து தனதுமுகமாகிய அழகிய தாமரைமலரை வளைத்துக் கொண்டு சுகவனநாதர் வரைக்கண் அந்தநாயகனிருந்த மாத்திரத்தில் அந்நாய கியானவள் தனது கனத்தவிசனத்தை யறிவிக்கும்பாவனையாக அவனைப்பார் த்தனள் எ-று. (கக)

வார்த்தையால்வியங்கியத்திற்கிலக்கியம்.

தலைவன்றலைவியைவினவுதல்.

நமனுநடுங்குநடுநிசியூடந்நதிக்கரையிற்
கமழ்தருசோலைசெல்கின்றாயுனதுகருத்தெனசொல்
லமலசுகவனர்வெற்பிலுனக்கயலானலனோ
சமர்விழியாயென்னினுந்துணையாரத்தனிவழிக்கே.

(இ - ள்.) யுத்தத்தைச்செய்யுங் கண்களையுடையவளே யமனும்பயந்து நடுங்கத்தக்க இந்தநடுவிராவிலே யந்த ஆற்றங்கரையிலிருக்கும் வாசனைவீசுகி ன்ற சோலைக்குப்போகின்றாயே யுனதெண்ணமென்ன களங்கரகிதரான சுக வனநாதர் மலைச்சாரிலுனக்கு நானன்னியனல்லேன் நீ தனியாகச்செல்லு ம் அவ்வழிக்கு என்னைப்பார்க்கினுந் துணையாரிருக்கின்றார்கள் உண்மையைச் சொல்லு எ-று. (கஉ)

தொழிலால்வியங்கியத்திற்கிலக்கியம்.

கவிக்கூற்று.

ஒயிலாகவேயெலுமிச்சம்பழத்தைக்கைக்குள்ளமைத்துப்
பயிலாலுயர்ந்தபதிவிந்தைகாட்டிடப்பார்த்துமணி
வெயிலார்மனைநிலைச்சித்திரச்சூரியவிம்பமிசை
மயிலோர்கத்தூரிப்பொட்டிட்டாள்சுகவனர்மாநிலத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் பெருமைதங்கிய நாட்டின்கண்ணே கைகைவல்லமையாலுயர்ந்த வொருநாயகன் உல்லாசமாக வோரெலுமிச்சம்பழத்தைத் தனது கையில்வைத்துக்கொண்டு நெருடல் கசக்கல்முதலிய சிலவேடிக்கைகளைக்காட்ட வதுகண்டு மயில்போன்ற நாயகியானவள் ரத்தினங்களின் ப்ரபைநிறைந்த தனது வீட்டுநிலை மேற்சித்திரித்திருந்த சூரியவிம்பத்தி லொருகத்தூரிப்பொட்டை இட்டனள் எ-று. (கரு)

க - வது மலர் முற்றும்.

உபபதிவைசிகநாயகர்களின்

இலக்கணம்.

வரம்புகெட்மறைந்தொழுகவல்லவனே யுபபதியாம்வகுத்துப்போந்த
வுரங்கொளனுகூலாதிபேதமிவனுக்குமடுத்துள்ளவேனும்
தரம்பரவுசடத்துவமேமுக்கியமாம்பரத்தையர்தஞ்சரசபோக
நிரம்பவிழைகின்றசுகிதானேவைசிகனெனலாநினைக்குங்காலே.

(இ - ள்.) உபபதியென்பவன் ஆசாரமுதலியவரம்பு கெடும்படி வஞ்சனையாசமறைந்து நடப்பதில் வல்லமையுடைய நாயகனேயாம். இவனுக்கு முன்னேசொல்லிவந்த (வுறுதியைக்கொண்ட) அனுகூலாதி பேதங்கள் பொருந்தியுள்ளவாயினும் (வலிமைமிகுந்த) சடத்துவமே முக்கியமாயிருக்கும், இனியோசிக்குங்காலையில் வைசிகனென்பவன் வேசியருடைய சரசகிரீடையின்பத்தையேநிரம்பவும் விரும்புகின்ற சுகியாகிய நாயகனென்று சொல்லலாம் எ-று.()

உபபதிக் கிலக்கியம்.

தலைவிசொல்லியது.

அதிபயத்தாலிமையாதுற்றுப்பார்க்கவொண்ணாதுவளை
யிதிநெலிப்பாமென்பதாலேமுயங்கற்கிட்மில்லைத்
ததியிதழ்ப்பற்குறிபுட்குரல்காணத்தகாதெனிலிப்
பதியுடற்றேய்வொருதோய்வோசுகவனர்பட்டினத்தே,

(இ - ள்.) சுகவனநாதர் பட்டினத்தில் நாமிந்தநாயகனை யிமையாதுற்றுப்பார்க்கலாமெனில் அதிகபயத்தினால் அதற்குக்கூடாது, கைவளைகள் இச்செய்கையிற் சத்திக்குமென்பதால் ஆலிங்கனஞ்செய்வதற்கு மிடமில்லை, கிரீடாசமயத்தில் இதழிற் பற்குறியுங் கண்டத்திற் புள்ளொலியும் காணத்தகாதல்லவா, ஆதலாலிவனது சரீரத்திற்சேர்வது ஒருசேர்க்கையோ எ-று. (சு)

உ - வது மலர் முற்றும்.

வைசிகனுக் கிலக்கியம்.

தலைவன்பாங்கனொடு சொல்லியது.

தண்டைபுலம்பவளைபம்பக்கும்பதனந்ததும்பக்
கொண்டைகுலுங்கக்குயிலிசைகாட்டிக்குலாவுமிவ
ளண்டையிணங்குவதேயின்பம்பொன்செலவாயினுமென்
பண்டைநஞ்சுண்டசுகவனநாதர்பதிநண்பனே.

(இ - ள்.) முன்னாளி லாலகாலத்தையுண்டருளிய சுகவனநாதர் தலத்திலிருக்கும் நண்பனே பாததண்டைகள் புலம்பவும் கைவளைகள் சத்திக்கவும் பூரணகும்பங்களையொத்த தனங்கள் பூரித்துத்ததும்பவுங் கொண்டைகுலுங்கவுங் குயில்போலு மினியகீதத்தைக் காட்டிக்கொண்டு ப்ரகாசிக்கு மிந்தநாயகியினதிடத்திற் சேர்வதேயின்பம் அதனாற் பலதிரவியஞ் செலவானாலு மென்ன எ-று. (கசு)

வைசிகநாயகபேதமும்

உத்தமவைசிகனிலக்கணமும்.

அத்தகுவைசிகனுத்தமாதிகுணத்தால்வகைமூன் றாகத்தோன்று, முத்தநகைநாயகிமற்றெத்தனைகோபங்கொளினு முகங்கோணுமன், மெத்தவுபசாரமவட்கொத்தபடியடுத்தடுத்துவிரும்பிச்செய்வோ, னுத்தமவைசிகனுமென்றுணர்த்துவர்முன்னூல்களினாலுயர்ந்துளோரே.

(இ - ள்.) அந்தத்தகுதியையுடைய வைசிகன் உத்தமாதிகுணங்களால், உத்தமவைசிகன், மத்திமவைசிகன், அதமவைசிகனென மூன்றுவிதபேதங்களையுடையவனாகத் தோன்றுவன். உத்தமவைசிகனென்பவன் முத்தை நிகர்த்த பற்களையுடைய நாயகியானவள் எவ்வளவு கோபங்கொண்டாலுந் தான் முகங்கோணாதவனாகி மிகவு முபசாரங்களை யவளுக்கேற்றபடியடுத்தடுத்துப் பிரியமுற்றுச்செய்யு நாயகனேயாமென்று சான்றோர்கள் முன்னூல்களினாலறிவிப்பார்கள். (எ)

உத்தமவைசிகனுக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

விரிகோபத்தாற்பொதுமான்கண்சிவந்தவிதந்தெரிந்துந்
தெரியானெனத்தேபுறம்பாராதுமுன்சொற்சிரிப்பகற்றிப்
பரிவாமெத்தைக்குட்குனிந்துற்றிலைமடிப்பான்பதிபின்
சரியாசத்தாமந்தொடுப்பான்சுகவனர்சார்பிடத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் நகரினிடத்தொரு நாயகனானவன் வேசையினு டையகண்கள் விரிந்தகோபத்தினாற் சிவப்பேறியவிதத்தைத் தெரிந்துந்தெரி யாதவனைப்போன்று புறம்பாராதவனாகி தான் முந்திப்பேசும் வார்த்தையுஞ் சிரிப்பும்விட்டுப் பிரியமாக மெத்தையிற் றலைகுனிந்திருந்துகொண்டு தாம்பூல த்தைமடிப்பன் பின்னும் புட்பஹாரங்களைக் கிரமமாகத்தொடுப்பன் எ-று. ()

மத்திமவைசிகனிலக்கணம்.

கருவபரிமளகளபகன்தனநாயகிவெகுண்டகாலந்தன்னி
லருகிலுளதன்சினமுமன்புந்தோன்றாதடக்கியவடன்பண்பாற்
பருவமனநிலையறியலாமெனச்சும்மாவிருக்கும்பதியேயின்ப
மருவுமதிலிதசரசமத்திமவைசிகனென்றுவகுக்கலாமே.

(இ - ள்.) இன்பம்பொருந்திய அதிக சரசவித்தையுடைய மத்திமவைசி கனென்பவன் மதங்கொண்டு வாசனைமிகுந்த களபங்களையணிந்த கனத்தமு லைகளையுடைய நாயகியானவள் கோபித்தகாலத்திற் பக்கத்திலுள்ள தனது கோபத்தையும் பிரியத்தையும் வெளியிற்காட்டாம லடக்கிக்கொண்டு அந்த நாயகியினது குணங்களாலே பருவமானநிலையை யறியவேண்டுமென்று சும் மாவிருக்கும் நாயகனேயாமென்று சொல்லலாம் எ-று. (கக)

மத்திமவைசிகனுக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

சரசமகற்றிவிழிசிவப்பேற்றித்தலைவிதனத்
திரவெழுதத்தகுங்கோலம்பலவுமிட்டேர்புனைந்து
வரவிடன்மெச்சியறிவோமிவடன்மனதெனப்பூ
ணுரகசுகவனர்நாட்டவள்வீட்டின்முன்னுற்றனனே.

(இ - ள்.) நாயகியானவள் சரசவிநோதங்களையெல்லாம்விட்டுத் தனது கண்களிற் சிவப்பையுண்டாக்கி முலைகளி லிராக்காலத்தெழுதத்தகுந்த பல வித கோலங்களையும் அப்போதேயெழுதி யழகாகவலங்கரித்துக்கொண்டிருக்க வதுகண்ட காமியாகிய நாயகன் அவளைமெச்சி யிவள்மனத்தை யின்னமறி வோமென்று சர்ப்பாபரணத்தைத்தரித்த சுகவனநாதர் நாட்டின்கண் அவள் வீட்டுமுன் வாசலிலே பொருந்தினான் எ-று. (உ௦)

அதமவைசிகனிலக்கணம்.

கருணைபயம்வெகுளிவெட்கமிவைமுழுதுந்தான்விடுத்துக்கனிவுகூர
முருகுவிரிமலரளகமுகிழ்முறுவற்களபவிளமுலைநல்லாரை
மருவுபொழுதிதுசெயலாமிதுசெயலாகாதெனுமம்மனவிசார
மொருசிறிதுமின்றியிருப்பவனதமவைசிகனென்றுரைக்கலாமே.

(இ - ள்.) அதமவைசிகனென்பவன், இருபை, பயம், கோபம், வெட்கம் முதலியகுணங்களை யெல்லாம் விட்டவனாகி யாவரு மகிழ்ச்சிகூரும்படி வாசனைவிரிந்த மலர்களைத் தரித்த கூந்தலையும் முல்லையரும்பை யொத்த பற்களையும் இளமைதங்கிய முலைகளையுமுடைய பெண்களைக் கூடும் சமயத்தில் இன்னது செய்யலாம் இன்னது செய்யலாகாதென்கிற அந்த மனவிசார மோரற்பமுமில்லாமலிருக்கும் நாயகனும் என்றுசொல்லலாம் எ-று. (௨௧)

அதமவைசிகனுக்கிலக்கியம்.

தலைவிசொல்லியது.

நீதிகருணைவெட்கங்கோபநம்பிக்கைநீங்கியிந்த
மேதினிவேசையர்மென்மையுடம்பைமிகவருத்தும்
வாதினனுமிவனென்னதந்தாலுமனஞ்சகியேன்
போதினனேத்துஞ்சுகவனநாதர்பொருப்பிடத்தே.

(இ - ள்.) தாமரைமலரில் வசிக்கின்ற பிரமதேவன் துதிக்குஞ் சுகவனநாதர் மலைச்சார்பிலிருந்த நாயகனானவன், நீதியுங் கருணையும், வெட்கமும், கோபமும், நம்பிக்கையுமில்லாதவனாகி யிவ்வுலகிலுள்ள வேசையர்களின் மிருதுவான சரீரத்தை மிகவும் வருந்தச்செய்கின்ற வாதுடையவனுமிவன் என்ன கொடுத்தபோதிலுஞ் சேர்வதற்கு நான் மனஞ் சகியேன் எ-று. (௨௨)

௩ - வது மலர் முற்றும்.

புரோடிதனாயக னிலக்கணம்.

வேறு.

தணந்துபோய்த்தேயசஞ்சாரத்துற்றுழி
யிணங்குநாயகிதனையெண்ணியெண்ணியங்
குணங்கியேமிகவுநெஞ்சுருருகின்றவ
னணங்குகூர்புரோடிதனாகுமென்பவே.

(இ - ள்.) ஆசைமிகுந்த புரோடித னென்பவன் பிரிந்து சென்று அன்னிய தேயசஞ்சாரத்திலிருக்கும்போது தனக்கிணங்கிய நாயகியை யங்கே நினைத்து நினைத்து வாடி மனது உருகும் நாயகனே யாமென்று சொல்வருயர்ந்தோர் எ - று. (௨௩)

புரோடிதநாயகபேதங்கள்.

புரோடிதபேதமூன்றும்புகன்றிடிற்
புரோடிதபதியெனப்புன்னெறிச்செலும்
புரோடிதவுபபதியெனப்பொலம்புனை
புரோடிதவைசிகனெனப்பொருந்துமே.

(இ - ள்.) மேற்கூறிய புரோடிதநாயகபேதங்கள் மூன்றாகும், அவைக ளைச்சொல்லுமிடத்துப் புரோடிதபதியென்றும் (அற்பமார்க்கத்திற் செல்லு கின்ற) புரோடிதவுபபதியென்றும், அழகைத்தரித்த புரோடித வைசிகனென் றும் பொருந்தும் எ-று. (உச)

புரோடிதபதிக்கிலக்கியம்.

தலைவன்சொல்லியது.

கடிதடவாவிமுலையிளைநீர்பொற்கவான்கதலி
படிகுழன்மாலைமுகமதிசொற்சுதைபார்வைமலர்
வடிவிடைதோன்றவளர்பூங்கொடியைமகிழ்ந்தணையா
விடினகலாதுசுகவனநாட்டென்விரகவெப்பே.

(இ - ள்.) அல்குலென்னுந் தடாகமும், முலைகளென்னு மிளைநீரும், அழ கிய தொடைகளென்னும் வாழையும், பொருந்திய கூந்தலென்னும் இரவும், முகமென்னுஞ்சந்திரனும், சொற்களென்னுமமுதமும், கண்களென்னுந் தாம ரைமலரும், தனது வடிவினிடத்தே பிரகாசிக்கும்படி வளர்கின்ற பூங்கொடி யாகிய அந்நாயகியை மனமகிழ்ந்து நானிப்போது சேராவிடிற் சுகவன நாதர் நாட்டின்கண் எனது விரகாக்கினியின் வெப்பந்தணியமாட்டாது எ-று.(உரு)

புரோடிதவுபபதிக்கிலக்கியம்.

தலைவன்சொல்லியது.

புனலாடச்செல்லும்பொழுதிற்றொடர்ந்துபின்போனவென்னை
முனநேயத்தோடுடல்பூரித்துப்பார்த்துமுறுவலித்துத்
தனதாகத்தொண்டுகொண்டாண்டாளையிண்டுத்தழுவவிழை
மனதாவற்கென்னினிச்செய்வேன்சுகவனர்மாநிலத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் பெருமைதங்கிய நாட்டின்கண் முன்னொருநாள் நீராடுவதற்குச் செல்லும்போது தொடர்ந்து பின்னேபோகிய வென் முகத் தை பிரியத்துடனே மேனிபூரித்துப் பார்த்துச் சிரித்துச் சொந்தமாக வென் னை யடிமைகொண்டாண்ட அந்தநாயகியை யிவ்விடத்தே தழுவ வேண்டு மென்று விழைகின்ற எனது மனவாசைக்கினி யென்னசெய்வேன் எ-று.

புரோடிதவைசிகனுக்கிலக்கியம்.

தலைவன்சொல்லியது.

மெலநடைதோன்றவெண்மெட்டிகலீரொனமேனிமின்னப்
பலநிதிமான்கள்கட்பார்வைவலைக்கட்படத்தெருவூ
டுலவுமவ்வேசைதனைநான்பிரிந்திடவும்படைக்க
மலரயனுக்கென்னசெய்தேன்சுகவனர்மாதலத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் பெருமை தங்கிய தலத்தின்கண் மெல்லிய நடை தோன்றவும், வெள்ளிய மெட்டிகள் கலீரென்று சத்திக்கவும், மேனி மின்னற் கொடிபோற் பிரகாசிக்கவும், பலநிதிமான்களுந் தனதுகண்களின் பார்வை யாகிய வலைக்குட்படவுந், தெருவினூடே வுலாவிய அந்தவேசையை நான் பிரியும்படியாகவும் என்னைச் சிருட்டிக்கத் தாமரைமலரி லிருக்கும் பிரமதேவனுக்கு முன்னே யென்னதப்பிதஞ் செய்தேன் எ - று. (உஎ)

அபிஞன்நாயகாபாசன்என்னும்
இவர்களினிலக்கணம்.

ஆசறுமபிஞனுமன்றிநாயகா
பாசனுமெனவிருபதிகள்கற்றுணர்
தேசினனபிஞனுந்தெளிவிலாதவ
னேசியநாயகாபாசனென்பவே.

(இ - ள்.) (குற்றமற்ற) அபிஞனென்றும் அல்லாமலும் நாயகாபாசனென்றும் இருவித நாயகர்களுண்டு; அவர்களில் அபிஞனென்பவன் பலவுங் கறறறிந்த புத்திப்ரகாசத்தையுடைய நாயகனும்; (இகழ்ந்த) நாயகா பாசனென்பவன் அங்ஙனமறிவில்லாத நாயகனுமென்று சொல்வருயர்ந்தோர் எ - று. (உஅ)

அபிஞனுக்கிலக்கியம்.

தலைவிசகியொடுசொல்லியது,

எனதுளத்துறைகின்றவனென்பதற்கேற்கநினை
வனவனைத்துந்தெரிந்தவ்வவ்வகைமன்மதனுமெச்சத்
தினநடத்துந்தொழிலாற்சகியேயிச்சிநேகபதி
தனதுபுத்திக்கிணையுண்டோசுகவனர்சார்பிடத்தே.

(இ - ள்.) சுகவனநாதர் நகரினிடத் தெனது மனத்திற் குடிகொண்டிருப்பவனென்பதற்கு இணங்க நானினைக்கின்றவைகளை யெல்லாம் உடனுடனறிந்துகொண்டுஅந்தந்தப்படிக்கே மன்மதனும் பார்த்து மெச்ச நிதமும் பலவித கலவித்தொழில்களை நடத்துவதால் இந்தப் பிரியமுள்ள நாயகனது புத்தி வல்லமைக்கு வேறே யொப்புண்டோ வில்லை எ-று. (உகூ)

நாயகாபாசனுக்கிலக்கியம்.

தலைவிசகியொடுசொல்லியது.

ஆரும்புகாமலர்க்கான்றனிச்சென்றருகாயவற்குக்
கோருங்குறிப்பைக்கண்ணாற்காட்டிப்பாகிலைகொள்வதுபோ
னேருந்தனந்தெரியத்துகினீத்துமென்னெஞ்சறியான்
றேரும்படிக்கென்னசெய்வேன்சுகவனர்சேலமின்னே.

(இ-ள்.) சுகவனநாதர் சேலமாநகரி லிருக்கின்ற சகியே, நான் ஒருவரும் புகக்கூடாத பூஞ்சோலையிற் றனியே சென் றிந்த நாயகனுக்கருகே நின்றுகொண்டெனது கோரிக்கைக் குறிப்பைக் கண்களாற் காட்டியுந் தாம்பூலங்கேட்பதுபோற் பொலிவுள்ள தனங்கள் தெரியும்படி சேலையை நீக்கியும் என்மனக்கருத்தை யிவனறிகிலான் இனி யிவனறிந்து கொள்ளுவதற் கென்னசெய்வேன் எ-அ. (௯0)

பரிகாசகநாயகனிலக்கணம்.

உளன்பரிகாசகனென்னவோர்பதி
களங்கறுவெவ்விலக்கணனன்னனெனி
லிளங்கொடியனையவரிதயம்வெள்குற
வளங்கெழுபகடிசெய்வகையில்வல்லனே.

(இ-ள்.) பரிகாசக னென்றோர் நாயகனுண்டு; அவன் குற்றமற்ற எவ்வித விலக்கணத்தையுடையவனோ வென்னில் இளமையான பூங்கொடிபோன்ற பெண்கள் மன நாணும்படி வளமை பொருந்திய கேலிகளைச் செய்யும் வகையில் வல்லமையிருந்தவனே யாம் எ-று. (௯க)

பரிகாசகனுக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

விழியிற்சகிதனையேவுகின்றயன்றிமென்மதுர
மொழியுத்தரவிலையென்னச்சுகவனர்மூரல்கொள
வழிபொற்கதிர்மதிமாமுகங்கோட்டினள்வாணகைதோ
யெழிலிற்பொலிகொவ்வைச்செவ்வாய்ச்சொர்ணம்பிகையென்னுளே.

(இ-ள்.) சுகவனநாதர் தமது தேவியைநோக்கி ஓபெண்ணே நீ கண்களாற் சகியை யேவுகின்றயல்லது மெல்லிய மதுரமானவார்த்தையா லுத்தரவில்லையென்றுசொல்லிப் புன்சிரிப்புக்கொள்ள வொளிபொருந்திய பற்குறிதோய்ந்த அழகாற் பிரகாசிக்குங் கொவ்வைப்பழத்தையொத்த சிவந்த வாயினையுடைய சொர்ணம்பிகையென்னும் நாயகியானவள் பொலிந்து வழிகின்ற கிரணங்களிறைந்த சந்திரனைப்போற் பெருமைதங்கிய முகத்தை வளைத்துக் கொண்டாள் எ-று. (௯உ)

திவ்வியாதிநாயகபேதம்.

திவ்வியவியன்முதற்றிகழ்முப்பேதமு
மவ்வினநாயகிகட் கடுத்தபோ
லிவ்விதநாயகர்கட்குமேற்குமென்
றெவ்வியவடகலையுணர்த்துமென்பவே.

(இ-ள்.) திவ்வியத்தன்மைமுதலாக பிரகாசிக்கின்ற மூன்றுபேதங்களும் அங்கேசொல்லிய நாயகிகள் கூபத்திற் கடுத்திருப்பதுபோலவே யிந்தவித நாயகர்களுக்கும் ஏற்குமென்று பொருந்திய வடநூலறிவிக்குமென்ப ருயர்ந்தோர் எ - று.

எனவே திவ்வியை அதிவ்வியை திவ்வியாதிவ்வியையென்று நாயகிகளைச் சொன்னதுபோலவே நாயகர்களையுந் திவ்வியன் அதிவ்வியன் திவ்வியாதிவ்வியன்என்று சொல்லத்தகுமென்றாயிற்று. (௩௩)

திவ்வியநாயகனுக்கிலக்கியம்.

தலைவிசொல்லியது.

திங்கள்புயங்கமிரண்டுமிணங்கச்சிரத்தமைத்து
வெங்கனலேந்திப்புலியுடுத்தாலமிடற்றடக்கி
யங்கசனைச்செயித்தோராஞ்சுகவனராமொருவர்
துங்கவிடைப்பொலிந்துற்றுரொன்னெஞ்சுந்தொடர்ந்ததுவே.

(இ - ள்.) மன்மதனைச் செயித்தவராஞ்சுகவனநாதராம் ஒருவர் தம்மிற் பகையின்றி யுறவாயிணங்கும்படி சந்திரனையும் பாம்பையுந் தமது சிரசிலமைத்து வெவ்வியநெருப்பைக் கையிலேந்தி புலித்தோலை யிடையிற்றரித்து விடத்தைக்கண்டத்திலடக்கிக்கொண்டு உயர்ந்த விடபவாகனருடராய் எழுந்தருளினர் அதுகண்டெனது மனமும் அவரைத்தொடர்ந்து போயினது எ-று.

அதிவ்வியநாயகனுக்கிலக்கியம்.

தலைவிசொல்லியது.

வடங்களைச்சீறிமணிக்கச்சையெற்றிவனங்கலந்து
திடம்படைத்தோங்கியவென்முலையானையைச்சிக்கிரத்திற்
கடம்பனைப்பெற்றசுகவனர்வெற்பிற்கண்காட்டிநின்றோன்
றடம்புயத்தூணெடுபூட்டினல்லான்மதந்தாழ்வரிதே.

(இ - ள்.) இயல்பாகிய யானை தன்னைக்கட்டியிருந்தவடத்தைக் கோபித்தறுத்து கழுத்திற்புனைந்த அழகியகயிற்றை யெறிந்து காட்டிற்பிரவேசிப்பதுபோல் மேலேதரித்த முத்தவடங்களைச்சீறி அழகிய இரவிக்கையைக்கிழியும்படி யெற்றி சந்தனக்கோலம் பொருந்தப்பெற்று வலிமைபடைத்துயர்ந்த எனது முலையென்னும் யானைகளை விரைவாக நான் கடப்பமாலிகையையு

டைய குமரக்கடவுளைப் பிள்ளையாகப்பெற்றருளிய சுகவனநாதர் மலைச்சாரிலில் என்னை அழைப்பதுபோற் கண்ணையிமைத்துச் சைகைகாட்டிநிற்கும் இந்த நாயகனது பெரியபுயங்களாகிய தூண்களோடு பூட்டினாலல்லது அவைகளின் மதந்தணிவது அரிது எ - று. (ருடு)

திவ்வியாதிவ்வியநாயகனுக்கிலக்கியம்.

தலைவிமனத்தொடுசொல்லியது.

வின்முனைராமனருச்சுனனாதியர்மேன்மையெலாம்
பன்முறைகேட்டிருக்கின்றேனன்னோர்பற்பலருமிவன்
முன்மருவிற்பகன்மின்மினிபோல்வர்முகக்குறிப்பி
னன்மனமேயிச்சுகவனர்வெற்பன்றென்னாட்டெய்வமே.

(இ - ள்.) வில்லாற்சவுரியமிகுந்த இராமன் அருச்சுனன் முதலானவர்களுடைய குணமேம்பாடுகளையெல்லாம் பலதடவை பெரியோர்களால் யான் கேட்டிருக்கின்றேன், அவ்வித நாயகர்கள் பலரும் இவனுக்கு முன்னேவரிற் பகலின்முன் மின்மினிபோல் ஒளிமழுங்குவார்கள் அன்றியும் முகக்குறிப்பினாலே பார்க்குமிடத்து நல்லமனமே சுகவனநாதர் மலைச்சாரில் இந்த நாயகன் பூருவத்திற்றெய்வமே எ - று. (ருசு)

ச - வது மலர் முற்றும்.

நருமசசிவர்களின்பேதம்.

வேறு.

செப்பிவந்தபதிகளிடத்தினிநருமசசிவரொனச்சிலருண்டன்னோ,
ரொப்பிநின்றுகிரீடைகளுக் குதவிசெய்வோராம் விவரித்துணர்த்துங்
காலைத், தப்பிகந்தபீடமர்த்தகனும் விடனுஞ்சேட்கனுந் தனைநேரில்
லாத், துப்பிசைந்தவிதூடகனுமென்றொரு நால்வகையினராய்த்தோ
ற்றுவாரால்.

(இ - ள்.) இங்கேசொல்லிவந்த நாயகர்களிடத்தே நருமசசிவரென்று சிலருண்டு; அவர்கள் யாரோவெனிற் சம்மதித்துநின்று கிரீடைகளுக்கு வேண்டிய சகாயங்களைச் செய்வோர்களேயாம்; இன்னம் விவரித்தறிவிக்குங் காலையில் அவர்கள் (குற்றநீங்கிய) பீடமர்த்தகனென்றும் விடனென்றுஞ் சேடகனென்றுந் (தனக்கு நேரில்லாத மனப் பூரிப்பினையுடைய) விதூடகனென்றும் வகுக்கப்பட்ட நால்வகையோர்களாய் வழங்குவார்கள் எ-று(ருஎ)

நருமசசிவர்களினிலக்கணம்.

வருபீடமர்த்தகனின்மொழிகொடுநாயகிசினத்தைமறுப்போனின்பந்
தருகாமநூலில்வல்லோன்விடன்றலைவிதலைவர்களைச்சமயநோக்கி
யொருசூழல்சேர்ப்பவன்சேடகனங்கவிகாரமன்னவுரைமற்றுலுந்
தெருளாயபரிகாசஞ்செய்கிற்போன்விதூடகனுந்தெரியுங்காலே.

(இ-ள்.) யோசிக்கும் காலையில் மேல்வந்த பீடமர்த்தகனென்பவன் நாயகியினது கோபத்தை யினிய வசனங்களினாலே மாற்றுகின்றவன், விடனென்பவன் இன்பத்தைக்கொடுக்குங் காமசாஸ்திரத்தில் வல்லமை யுடையோன், சேடகனென்பவன் சமயம்பார்த்து தலைவி தலைவர்களை யோரிடத்திற் சேர்ப்பவன், விதூடக னென்பவன் அவயவ விகாரங்களினாலும் அப்படிப்பட்ட வார்த்தைகளினாலும் மற்றைவைகளாலுந் தெளிவாகிய பரிகாசஞ் செய்வோனாகும் எ-று. (௩அ)

பீடமர்த்தகனுக்கிலக்கியம்.

தலைவியொடுசொல்லியது.

அட்மனதூடிருந்தாலுஞ்சரிசொல்லினுமெளிமை
தொடர்நினைவுன்னைவிடாதுடல்வாசிக்குந்தோய்சினத்துன்
விடவிழிசேப்பப்பெற்றோன்பெற்றதேபலன்மேலுமவன்
றிடவிரதத்தைவந்தித்தேன்சுகவனர்சேலமின்னே.

(இ-ள்.) சுகவனநாதர் சேலமாநகரிலிருக்கின்ற பெண்ணே! யுனது மனத்தினூடே அடமிருந்தாலுஞ் சரியே, வார்த்தைகள் எளிமையை யடைகின்றன நீ செய்யத்தொடங்கி யிருக்கும் எண்ணமானது உனைவிட்டு நீங்காமல் உனது தேகத்தில் வாசனையை யடைகின்றது, பொருந்திய கோபத்தினாலுனது விடம் போன்ற கண்கள் சிவக்கப்பெற்ற நாயகனெவனோ அவன் பெற்றதேபேறு மேலு மவனுடைய வலிய தபசுக்குநான் வந்தனஞ்செய்கிறேன் எ-று. (௩௯)

விடனுக்கிலக்கியம்.

தலைவிக்குச்சொல்லியது.

மதிமலைமாருதம்வந்தவண்டோதைமலிந்தவிவை
பதிகுருதேச்சுரஞ்சர்வேச்சுரம்பிற்பயிரவமென்
றெதிரறுமாத்திரையாமதபண்டிதனெய்தியுநின்
கொதிசினநோயுளதாமோசுகவனர்குன்றணங்கே.

(இ-ள்.) சுகவனநாதர் மலைச்சாரிலுள்ள நாயகியே, யிதோ சந்திரோதயமும் பொதியமலைத் தென்றலும் அல்லது மோதுகின்ற தென்றலும் வந்தன, வண்டினுடைய கீதங்களெங்கும் நிறைந்தன, விவைகளையே பொருந்திய குருதேச்சுரஞ் சர்வேச்சுரம் பின் பைரவமென்று சொல்லப்பட்ட வொப்பற்ற மாத்திரைகளாகக் கொண்டு மன்மதனாகிய வயித்தியன் இப்போது வந்தும் உனது கொதித்த கோபமாகிய வியாதி நிலைத்திருக்குமோ நில்லாது எ-று. (௪0)

சேடகனுக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

பருவமுகிலங்கதோவருகின்றதுபார்த்துவக்குங்
கருவமயிலுமிதோவந்ததிங்கினிக்காரியமென்
மருவளர்காவின்மக்கென்றுநீர்தெரிவான்றனைப்போ
லொருவன்மெலவெளிச்சென்முன்சுகவனரூரிடத்தே.

(இ-ள்.) சுகவனநாதர் தலத்தின்கண் ஒருவன் தன்னூற் சமயந்தெரிந் தழைக்கப்பட்ட நாயகனும் நாயகியும் ஓரிடத்திற்குவர வப்போது நாயகனாகிய பருவகாலமேகம் அதோ அங்கே வருகின்றது அம்மேகத்தைப் பார்த்து மகிழும் நாயகியாகிய கருவமிகுந்த மயிலும் இதோ இங்கேவந்தது வாசனைநிறைந்த விச்சோலையில் இனியென்ன நமக்கலுவலென்று சொல்லிக்கொண்டு தாகத்திற்குத் தண்ணீர் தேடிப் பார்ப்பவனைப்போல் மெள்ளவெளியே சென்முன் எ-று. (சுக)

விதூடகனுக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

நாயகிமேன்முந்திநாயகன்பற்றிநயந்திழுத்துப்
பாயணைநண்ணிமுலைக்கச்சவிழ்க்கும்பருவமதிற்
போயயல்வைகலறிசேவல்சாதகம்போலொலித்தா
னேயனொருவன்சுகவனர்வெற்பவனின்றஞ்சவே.

(இ-ள்.) ஒரு நாயகனுனவன் றனது நாயகியை மேற்சேலை முந்தி பிடித்துப் பிரியமாயிழுத்துக்கொண்டுபோய் விசாலித்த படுக்கையைச் சார்ந்து அவளது தனத்திரவிக்கையை யவிழ்க்காநின்ற சமயத்திலே சுகவனநாதர் மலைச்சார்பி லந்நாயகன் சும்மாநின்று பயப்படும்படிக் கோர் சிநேகன் அயலிற் போயிருந்து விடியற்காலத்தை யறிகின்ற சேவலைப்போலவுஞ் சாதகப் புள்ளைப்போலவுஞ் சத்தித்தான் எ-று. (சுஉ)

டு-வது மலர் முற்றும்.

சாத்துவிகோதயவிலக்கணம்.

அன்னியரின்பத்தையிச்சிப்பதனுற்றேகத்தினிலுண்டாகுந்தோற்றந், தன்னிகருஞ்சாத்துவிகோதயமதுதான்சிறுவேர்வைதம்பமேன்மேன், மன்னியெழும்புளகஞ்சொற்றடுமாற்றநடுக்கமொளி மழுங்கல் பாட்பந், துன்னிவரும்பெருமயக்கமென்றிருநால்வகைத்துமுன்னூற் றணிவிகாமே.

(இ - ள்.) தனக்குத் தானே நிகராகிய சாத்துவிகோதய மென்பது அன்னியருடைய வின்பத்தை மனதி லிச்சிப்பதினாலே சரீரத்தி லுண்டாகின்ற தோற்றமேயாம், அது சிறுவேர்வையும், அசைவின்றி யிருத்தலும், அதிகமாய்ப் பொருந்தி யெழுகின்ற புளகாங்கிதமும், சொற்றமொற்றமும், நடுக்கமும், காந்தி குறைதலும், அழுகையும், நெருங்கி வருகின்ற பெருமயக்சமும் என் றெட்டுவகைப்படும், இது புராதனகிரந்தத்தின் றுணிவாம் எ-று. (சங)

சாத்துவிகோதயத்துக் கிலக்கியம்.

சகியெண்ணியது.

சொற்றளர்வுங்கவுள்வெண்மையுங்கொங்கைத்துணைவெயர்வு
முற்றகண்ணிருமதரநடுக்குமுடற்பொடிப்புங்
கற்றநடைமந்தமுமனமூர்ச்சையுங்காணுவவிப்
பொற்றொடிபார்த்தனள்போலுஞ்சுகவனர்பொற்பினையே.

(இ - ள்.) இந்த நாயகிக்கு வார்த்தையிலே தழுதழுப்பும், கபோலங்களிலே வெண்மையும், தனங்களிலே வேர்வையும், பொருந்திய கண் களிலே நீரும், அதரத்திலே நடுக்கமும், சரீரத்திலே புளகமும், படித்துள்ள நடையிலே மந்தமும், மனத்திலே மூர்ச்சையுங் காணுகின்றன ஆதலாற் பொன்னாற்செய்த வளைகளையுடைய விவள் சுகவன நாதரது திருவழகைப் பார்த்தாள் போலும் எ - று. (சச)

சிங்காரபேதமும்

சம்போகசிங்காரத்தினிலக்கணமும்.

வேறு.

கலைபுணர்த்துசிங்காரஞ்சம்போகசிங்கார
மிலகுவிப்பிரலம்பசிங்காரமென்றிரண்டாம்
பலவிதக்கலவியும்புரிபொழுதெழும்பண்பே
மலைவகற்றுசம்போகசிங்காரமாய்வழங்கும்.

(இ - ள்.) நூல்களாலறிவிக்கப்பட்ட சிங்காரமானது சம்போக சிங்காரமென்றும்(பிரகாசித்த) விப்பிரலம்ப சிங்காரமென்றும் இருவகைப்படும்; அவற்றுட்பலவித கிரீடைகளையுஞ் செய்கின்ற சமயத்திலுண்டாகுந் தன்மையே மயக்கத்தை நீக்குகின்ற சம்போக சிங்காரமென வழங்கும் எ - று. (சரு)

சம்போகசிங்காரத்துக்கிலக்கியம்.

நாயகன்சொல்லியது.

கூர்மங்குலுங்கக்குலமணிநாகங்குழைந்தலுக்கப்
பார்விண்சலித்தகுதிகொண்டவெற்பம்பரஞ்சுழன்ற
கார்மஞ்சலைந்தமதிபொங்கவெங்குங்கணமுதிர்ந்த
சீர்மன்சுகவனரூர்மானைநான்கொஞ்சிச்சேர்பொழுதே.

(இ - ள்.) செல்வமிலேபெற்ற சுகவனநாதர் தலத்திலந்த நாயகியை நான் கொஞ்சிச்சேர்ந்தவச்சமயத்திலே அடியிலிருக்கும் ஆமைகுலுங்க, மாணிக்கத்தையுடையகுலநாகம் வருந்தியலுக்க, பூமியும் ஆகாயமும் அசைந்தன, மலைகள் குதிகொண்டன, சமுத்திரங்கள் சுழன்றன, கரியமேகங்களலைந்தன, சந்திரன்பிரகாசிக்க நக்ஷத்திரங்களெக்குமுதிர்ந்தன எ - று.

இவைகளை முறையே புறவடியும் அல்குலும் பின்புறமும் இடையும் முலைகளும் கண்களும் கூந்தலும் முகமும் சிரிப்புமென்றறிக. (சுசு)

சவிப்ரலம்பசிங்காரத்தினிலக்கணம்.

பிரிவுபெற்றுழிக்கருத்தியன்முற்றுறுப்பிழையாற்
பரியுமப்பருவத்தினிற்றேன்றியபான்மை
யுரியவிப்பிரலம்பசிங்காரமென்றுரைப்ப
ரரியபத்தெனுமவத்தையுமதனிலுண்டாமால்.

(இ - ள்.) தலைவிதலைவர்களிலொருவரை யொருவர் பிரிந்திருக்குமிடத்திற் றமதெண்ணமுடிவுபெறாத குற்றத்தினால் வருந்துமக்காலத்திற் றேன்றிய தன்மையே காமிகளுக்குரிய விப்ரலம்ப சிங்காரமென்று சொல்வருயர்ந்தோர் அருமையான தசாவத்தைகளு மதிலுண்டாகும் எ - று. (சுஎ)

விப்பிரலம்பசிங்காரத்துக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

படர்மழைக்கார்விண்கண்டன்பன்வரும்வழிபார்க்கவுயிர்
மிடறடுத்தன்றவன்முற்பறந்தாயினுமேவவன்னு
ளடர்தனக்குன்றம்புயவிலைத்தோங்கயருகணிந்த
மடலுடைத்தாமச்சுகவனநூர்வஞ்சிமால்வியப்பே.

(இ - ள்.) எங்கும்பரந்து வியாபித்த மழைமேகங்களை யாகாயத்திற் கண்டவுடனே நாயகன் வருகின்ற வழியைப்பார்க்கும் பொருட்டு விரைந்து பிராணனானது கண்ட சமீபத்திலடுத்தது அன்றியும் அந்நாயகனுக்கெதிரே பறந்தாவது நாம்போய்ச் சேர்வோமென்று துணிந்தவைகளைப்போல நெருங்கி யவளது தனங்களாகிய மலைகள் தாமரையிலைகளாகிய இறகுகளைத் தமது பக்கங்களிற்றரித்தன ஆதலாலிதழ்களைப்படைத்த பூமாலையினையுடைய சுகவனநாதரது தலத்தின்கணுள்ள நாயகிகொண்டிருக்குமாசையானது விந்தையாகவிருந்தது எ - று. (சுஅ)

தசாவத்தைகளின்பெயர்.

வேறு.

உரியவபிலாசைசிந்தைமிருதிகுணகீர்த்தனைபின்னுத்துவேகஞ், சரியில்விலபனந்தணியாவுன்மத்தம்வியாதிபொல்லாச்சடதையோடு, தெரியிலயமெனுமிவையேதிகழ்ந்ததசாவத்தைகளாஞ்செவ்வையாக, வரிசைவடநூற்படியேயவற்றினிலக்கணங்களையும்வகுத்துச்சொல்வாம்.

(இ - ள்.) உரித்தான அபிலாசையுஞ் சிந்தையும், மிருதியுங் குணகீர்த்தனையும் பின்பு உத்துவேகமும் (ஒப்பில்லாத) விலபனமும் (தணியாத) உன்மத்தமும் வியாதியும் (பொல்லாத) சடதையும் (தெரிகின்ற) இலயமும் என்று சொல்லப்பட்ட விப்பத்துமே விளங்கிய தசாவத்தைகளாகும் இனிமுறையாகவரிசையினையுடைய வடநூலின்படியே யவைகளினிலக்கணங்களையும் வகைப்படுத்திச் சொல்லுவோம் எ - று. (சக)

மேற்கூறியதசாவத்தைகளின்.

இலக்கணம்.

கலவிகஞ்சயபிலாசைவையிவிவை காண்பமெனுங்கருத்தேசிந்தை, குலவிமருவியசெயலைக்குறித்திடுதன்மிருதியன்பர்குணவிசேடம், பலவுமுறைமுறையெடுத்துப் பகர்தல்குணகீர்த்தனையுட்பரிவுகூர்ந்து, விலகரியபிறபொருள்கண்முழுதையும்தாம்வெறுப்பதுத்துவேகமாமே.

(இ - ள்.) கலவியின்மேலுண்டாகும் விருப்பமே யபிலாசை, இவைசெய்வதாலிவைகாணலாமென்றெண்ணுவதே சிந்தை; முன்னமே கொஞ்சிக்கலந்த செய்கைகளை ஞாபகம் பண்ணுவதே மிருதி, பிரியர்களுடைய குணவிசேடங்கள் பலவற்றையும் அடிக்கடி யெடுத்துச்சொல்வதே குணகீர்த்தனை; காமத்தால் மனவருத்த மிகுந்தமையால் விலகுதற்கரிய பிறபதார்த்தங்களெல்லாவற்றையும் வெறுப்பதே வுத்துவேகம் எ - று. (ரு0)

இதுவுமது.

"காதலரைக்குறித்துவருகற்பனைச்சொல்விலபனமுற்கண்டையென்றோர், பேதமதிற்படுமதுதம்மவசரத்தாற்பயனிலவாப்பேசும்வார்த்தை, யேகமனத்துயரிலுண்டாம்பிரமைமற்றுன்மத்தமதுவிரண்டாய்த்தோன்றும், வாதையுடைக்காயகவுன் மத்தமொடுவாசகவுன்மத்தமென்றே.

(இ - ள்.) பிரியர்களைக்குறித்து வருகின்ற கற்பனையுடைய சொற்களே விலபனம் அதிலுற்கண்டையென்றோர் பேதந்தோன்றும், அதுதமது ஆத்திரத்தாற் பிரயோசனமொன்று மில்லாதவைகளாகப் பேசப்பட்டவார்த்தை

யேயாம், குற்றமான மனவருத்தத்தாலுண்டாகிய ப்ரமையே உன்மத்தம், அவ்வுன்மத்தங் காயகவுன்மத்தமென்றும் வாசகவுன்மத்தமென்று மிரண்டு வகைப்படும் எ - று. (௫௧)

இதவுமதூ.

மதனசரமடரவந்தசந்தாபமெய்யிளைப்பிவ்வகைவியாதி
யதனமெனுமோகவிகாரத்தையன்றிமற்றொன்றுமறிகிலாத [லோ
விதமுடையவுயிருளதோர் வெவ்வுவத்தை சடதையென்பர்மேலேநூ
ரிதமநிலநிலயமதற்கிலக்கணமோடிலக்கியஞ்சொற்றிடவேண்டாவே.

(இ- ள்.) மன்மதபாணங்களடர்ந்து வாதிப்பதாலுண்டாகிய விரகசுரம் மேனியிளைப்பு முதலானவைகளே வியாதி அதிகமென்று சொல்லப் பட்ட மோகவிகாரங்களை மாத்திரமறிந்து மற்றொன்றையு மறியா திருக்குந் தன்மையைப் பெற்றவுயிருள்ளதாகிய கொடிய அவத்தையே சடதை யென்று சொல்வருயர்ந்தோர் இலயமென்பது இதமுடையதன்றுதலா லதற்கிலக்கண விலக்கியங்கள் சொல்லவேண்டுவன வல்ல எ - று. (௫௨)

அபிலாஷைச்கிலக்கியம்.

நாயகன்சொல்லியது.

தாவிச்சுகவனர்வெற்பின்மடந்தைசவுந்தரிய
வாவிக்குளேயென்மனம்பார்வைவீழ்ந்தனமற்றவற்றிற்
பாவித்தனிமனம்பாரத்தினாழ்ந்ததுபார்வைநொய்தின்
மேவிச்சுழன்றுமிதந்தவந்தோவென்செய்வேனிதற்கே.

(இ - ள்.) சுகவனநாதர் வரைக்கணுற்ற நாயகியினது சவுந்தரிய மாகிய தடாகத்தினுள்ளே யெனதுமனமும் பார்வைகளுங் குதித்துச் சென்று விழுந்தன, அவைகளில் ஒப்பில்லாத பாவியாகிய மனம் பாரமானதால் அதிலே யமிழ்ந்திவிட்டது, பார்வைகள் இலேசானதால் அதின்மேலே பொருந்திச் சுழன்று மிதந்தன, நானிதற்கென்ன செய்வேன் எ - று. (௫௩)

சிந்தைச்கிலக்கியம்.

நாயகன்சொல்லியது.

இந்தப்புதருற்றடிக்கடிகூவுகின்றேன்குயில்போ
லந்தக்குமரிவசந்தபருவமடுத்ததெனச்
சொந்தத்தொடுதன்விழித்தாமரைமலர்த்தோரணநேர்
முந்தப்புரிவள்சுகவனர்வெற்பின்முயன்றுகின்றே.

(இ - ள்.) நானிந்தப் புதர்வீட்டின் சமீபத்துற் றடிக்கடி குயில்போற் கூவுகிறேன்; அந்தநாயகியானவள் வசந்தகாலம் வந்ததென்று சுகவனநாதர் வரைக்கண் முயற்சியாகநின்று சொந்தத்துடனே தனது கண்களாகிய தாமரைப்பூத்தோரணத்தை நேரேமுந்தி பிரகாசிக்கச் செய்வள் எ-று. (௫௪)

மிருதிக்கிலக்கியம்.

சகிசொல்லியது.

அருமைப்பதியைப்பிரிந்துமென்னேகண்ணருவிகொளா
ளொருநெட்டுயிர்ப்பும்விடாண்மெய்ப்புதுப்பொடிப்போடிருப்பள்
வெருவச்சமனைமுன்வென்றசுகவனர்வெற்பிலன்னான்
மருவிச்சுகித்தபண்பெண்ணினள்போலுமிவ்வாணுதலே.

(இ - ள்.) முன் பயப்படும்படி யமனை யுதைத்து வென்ற சுகவனநாதர்வரைக்கண் ஒளிபொருந்திய நெற்றியினையுடைய இந்தநாயகி அருமையானதனது நாயகனைப் பிரியப்பெற்றுங் கண்களில் அருவிபோல நீரைக் காட்டமாட்டாள் ஒரு பெருமூச்சேனும் விட்டிலாள், சரீரத்திற் புதிய புளகாங்கித முண்டாக விருக்கின்றாள், ஏதோ தெரியவில்லை, அந்நாயகன் கலந்து சுகித்த தன்மைகளை யெண்ணினாள் போலும் எ - று. (௫௫)

குணகீர்த்தனைக்கிலக்கியம்.

நாயகன்சொல்லியது.

மொய்யேரளகமடந்தைபொற்கும்பமுலைநெருடுங்
கையேகைநன்னலங்காணுங்கண்ணேகண்கலந்தழுந்து
மெய்யேமெய்சொல்வினவுஞ்செவியேசெவிவேறுளவோ
மையேய்கிரீபசுகவனர்வெற்பின்மதிவலர்க்கே.

(இ - ள்.) வண்டினங்கள் பொருந்திய கூந்தலையுடைய அந்தநாயகியினது சொர்ணகும்பத்தை யொத்த முலைகளை நெருடப்பெற்ற கைகளே கைகள், அவளது நல்ல அழகைப்பார்க்கப்பெற்ற கண்களே கண்கள், அவளை யாலிங்கனஞ்செய் தழுந்தப்பெற்ற தேகமே தேகம், அவளுடைய மிருது வசனங்களைக் கேட்கப்பெற்ற காதுகளே காதுகள், நீலகண்டத்தையுடைய சுகவனநாதர் வரைக்கட் புத்திமான்களுக் கிவைகளைப் பார்க்கினும் வேறென்ன இருக்கின்றன. எ - று. (௫௬)

உத்தூவேகத்துக்கிலக்கியம்.

நாயகிசொல்லியது.

ஆதிச்சுகவனர்வெற்பிடைமானனையாரைநல்கி
யேதிச்சித்தோமதிப்பாலையுந்தென்றலெனும்புலியும்
வாதிக்குமால்வலைவேள்வேடுவனும்வரப்புரிந்தாய்
நீதிக்கிதோமுறைநீவாழிவேதநிரந்தரமே.

(இ - ள்.) ஒபிரமாவே முதற்கடவுளாகிய சுகவனநாதர் வரைக்கட் பெண்களென்னு மான்களை நீபடைத்தனையே அப்பாலெதை நினைத்து அம்மான்களுக்கிடையூறுண்டாகும்படி சந்திரோதயமாகிய பாலைவனத்தையுந் தென்றலாகிய புலியையும் வருத்துகின்ற ஆசையாகிய வலையினையுடைய மன்மதனாகிய வேடனையும் வரச்செய்தாய், உனது நீதிக்கிதுவோ முறை, யெப்பொழுதும் நீவாழ்வாய் எ - று. (௫எ)

உற்கண்டைக்கிலக்கியம்.

நாயகன்சொல்லியது.

அடிக்கடிவீதிவராமற்றன்வீட்டிலடங்குவளோ
படித்தெவரென்னசொன்னாரோவின்றேலந்தப்பாவைமனம்
பிடித்திடலேதிதுகாறுமெவ்வாறினிப்பேய்மதவேள்
வடிக்கணைவேதைகடப்பேன்சுகவனர்மால்வெற்பினே.

(இ - ள்.) அந்தநாயகியானவள் அடிக்கடி வீதியிலே வராம லிப்படி தன் வீட்டுக்குள்ளே யடங்கி யிருக்கமாட்டாளே, எனிப்போ தப்படி யிருக்கின்றாள், யார் என்ன மித்திரங்களைப் படித்தப்படித்துச் சொன்னார்களோ, இல்லாவிட்டால் அவளிதுவரை மனது பிடித்திருப்பதுண்டோ சுகவனநாதர் பெரிய வரையினிடத்துப் பைசாசுபோன்ற மன்மதனது கூரிய பாணங்களா லுண்டாகின்ற வருத்தத்தை நானினி யெப்படிக் கடப்பேன் எ-று. (௫அ)

காயகவுன்மத்தத்துக்கிலக்கியம்.

கவிக்கூற்று.

மிகமனைமேற்பளிங்கின்சுவர்தோன்றும்விதுநிழல்பெண்
முகமெனவிந்தையநேகமனாளன்மொழிந்தெதிர்சொற்
புகல்கிலதாற்சினம்போலுமிவட்கென்றுபோயதனைச்
சுகவனநார்த்தன்புளகக்கைநீட்டித்துழாவினனே.

(இ - ள்.) சுகவனநாதர் நகரின்கணொருநாயகனானவன் மேன்மாடத்திற் கட்டிய பளிங்குச்சுவரினூடே மிகுதியாகப் பிரதிவிம்பித்த சந்திரனது நிழலை நாயகியினது முகமென்று நினைத்துப் பலவிதவேடிக்கை வார்த்தைகளைத் தான் சொல்லியும் அதற்கெதிர்மொழியது சொல்லாமையா லிவளுக்குக் கோபம்போலிருக்கின்றதென்று சமீபித்துத் தனது புளகாங்கிதந்தங்கிய கைகளைநீட்டி யதைத்தடவினான் எ - று. (௫௯)

வாசகவுன்மத்தத்துக்கிலக்கியம்.

நாயகன்சொல்லியது.

திரும்பவலகண்சுகவனநார்வஞ்சிசெவ்விநலம்
விரும்பிநடந்துட்பதிந்தனெநெஞ்சைவிடுக்கவஃதும்
வரும்பரிசோர்கிலைச்சென்றால்வராவுயிர்மாத்திரமுண்
டரும்பிரயோசனமென்னிநிற்செய்யவதுகற்குமே.

(இ - ள்.) சென்றாற்பின்பு திரும்பிவர வல்லமையுடைய வென தா கண்கள் சுகவனநாதாது தலத்தின்கணந்த நாயகியின் சிறந்தவழகை விரும்பிச் சென்றதினுள்ளே பதிந்துவிட்டன, அப்பால் மனத்தையனுப்பினேன் அதுவும் அவ்வாறே வருந்தன்மையை யறியவில்லை, போனால் வருவதற்குச் சக்தியில்லாத வுயிர்மாத்திரமிப்போ தென்னிடத்திருக்கின்றது, அவ்வுயிர் இந்தக்காரியத்திலருமையான வென்ன பிரயோசனத்தைச் செய்யக் கற்றுக்கொள்ளும் எ - று. (சுo)

வியாதிக்கிலக்கியம்.

தலைவனொடு சகிசொல்லியது.

பொருதனுவம்புகொண்டுள்ளம்புகலினிப்பூங்கொடியும்
வருமதனுஞ்சரியாவாரொனினுமம்மாமதனுக்
கருவமதிகமதையுமிவளடையாதிருக்கக்
கருணைபுரிதிசுகவனர்வெற்பிளங்காதலனே.

(இ - ள்.) சுகவனநாதர் வரைக்கண் இளமைதங்கிய நாயகனே மன்மதனைவன் போர்க்குரிய கருப்புவில்லையும் புட்பபாணங்களையும் ஏந்தி மனத்தில் வாசஞ்செய்வான், அதுபோலவே யிந்தநாயகியும் புருவங்களாகிய வில்லையும் கண்களாகிய பாணங்களையும் ஏந்திக்கொண்டு உனதுமனத்தில் வாசஞ்செய்வள், ஆதலால் இந்தநாயகியும் அந்தமன்மதனுஞ் சமானமாவார்கள், ஆயினும் அந்தப்பெருமைதங்கிய மன்மதனுக்குச் சரீரமில்லாமையொன்றதிகமாயிருக்கின்றது, அதையுமிந்த நாயகி பெற்றுக்கொள்ளாதிருக்கும்படி நீ தயவுசெய்வாய் எ - று. (சுக)

சடதைக்கிலக்கியம்.

தலைவனுக்குச் சகிசொல்லியது.

விழிசுழலாதிமையாதசையாதுவிரும்புசெவ்வாய்
மொழிபயிலாதுவளைதொடிதண்டமுறையொலியா
தெழில்புனைபாவையொப்பாமேனுநின்பெயரோயுரைக்கிற்
கழிபுளகெய்துஞ்சுகவனர்வெற்பிளங்காரிகையே.

(இ - ள்.) சுகவனநாதர்வரைக்கண் இளமைதங்கிய அந்தநாயகியானவள் விரகமிகுதியால் கண்கள் சுழலாமலு மிமையாமலுஞ் சரீரமசையாமலும் வி

ரும்பத்தக்க சிவந்த வாய் வார்த்தகளைச்சொல்லாமலும், வளை கங்கணந் தண்டை முதலியவைகள் ஒலிக்காமலுமிருக்கப்பெற்று அழகைத்தரித்த சித்திரப்பாவைக்கே ஒப்பானாள், ஆயினும் உனதுபேரைச்சொன்ன வுடனேமிகுந்ததேகபுளகாங்கிதத்தை யடைகின்றாள் எ - று. (சுஉ)

தெரிசனபேதமும்

அவற்றினிலக்கணமும்.

காதலர்தத்தமிற்காணுங்காட்சி தெரிசனமதுதான்கருதுங்காலை,யோதருமைச்சொற்பனமுஞ் சித்திரமுமெதார்த்தமுமென்றொரு மூன்றாகு, கோதலறக்கனவினிடைநோக்கலெழிற்சித்திரத்தினோக்கலுண்மை, யாதரவுற்றெதிர்நோக்கலாமவைதாமுறையினெனன்பரறிந்துளோரே.

(இ - ள்.) அன்பர்களி லொருவரையொருவர் காணுங்காக்ஷியே தெரிசனமெனப்படும், அத்தெரிசனமானது நினைக்குங்காலையில் (சொல்லுதற்கரிய) சொப்பனதெரிசனமென்றும், சித்திரதெரிசனமென்றும்,எதார்த்ததெரிசனமென்றும் மூன்றுவகையாம்; (வருத்தந்தீரும்படி) கனவினிடத்துக்காண்பதே சொப்பனதெரிசனம், சித்திரத்திற் காண்பதே சித்திரதெரிசனம், உண்மையாக வெதிரிற்காண்பதே எதார்த்ததெரிசனமென்று சொல்லுவர், பலவுமறிந்துள பெரியோர்கள் எ - று. (சுகூ)

சொப்பனதெரிசனத்துக்கிலக்கியம்.

தலைவிசகியொடுசொல்லியது.

நேற்றிரவூடுதிருடனொருவனென்னேரடுத்து
மேற்றிகழ்பொற்பணியொன்றுந்தொடாதுவிரைவினுள்ளாய்த்
தோற்றிதயத்தைக்கவர்ந்தேகினனென்னசொல்லுவன்யான்
கூற்றினைவென்றசுகவனர்வெற்பிளங்கோகிலமே.

(இ - ள்.) யமனை வெற்றிகொண்ட சுகவனநாதர் வரைக்கண் இளமைதங்கிய குயில்போலு மொழியினையுடைய சகியே! நேற்றிராத்திரியினூடே யொருதிருடன் எனக்கு நேராகவந்து என்மேலே பிரகாசிக்கின்ற சொர்ணபரணங்க ளநேகமிருக்க அவைகளி லொன்றையுமெடாமல் உள்ளேயிருந்த மனத்தைத் திருடிக்கொண்டுபோயினன் நானென்னசெய்வேன் எ-று. (சுஎ)

சித்திரதெரிசனத்துக்கிலக்கியம்.

தலைவிசகியொடுசொல்லியது.

உல்லாசமாகவென்னுள்ளுறைகாளையுருவவியல்
பெல்லாமமைந்ததெவளவும்பேதமிலதெனினுஞ்
சொல்லாதுவார்த்தையணைத்தாலுங்கொங்கைதொடாதுபுறஞ்
செல்லாதம்மாவிச்சுகவனர்வெற்பெழிற்சித்திரமே.

(இ - ள்.) ஓசகியே! சுகவனநாதர் வரைக்கண் அழகிப் இச்சித்திரமான்து வேடிக்கையாக வெனதுமனத்தே குடிகொண்டிருக்கின்ற அந்நாயகனது சொருபகுணங்களெல்லாவற்றையும் பெற்றிருக்கின்றது; எவ்வளவுமதிற் பேதமில்லதாயினு மெதிர்வார்த்தையொன்றுஞ் சொல்லாது, நான்வலிதிற்கட்டியணைத்தாலும் என்முலைகளைத் தொடாததானிருக்குமிடத்தை விட்டுப் புறத்தினுஞ்செல்லாது இதுவென்னவிந்தை எ - று. (சுரு)

எதார்த்ததெரிசனத்துக்கிலக்கியம்.

தலைவிசொல்லியது.

மனமேவருந்தல்விழிகாலிமையன்மின்மாரவினிச்
சினமேகொளேல்குளிர்திங்காளுலர்பயிர்தேறவெழுங்
கனமேயெனும்படிநான்றெறிசிக்கக்கருணையினென்
முனமேசுகவனர்வந்தாரிதோவெண்ணமுற்றுறுமே.

(இ - ள்.) மனமே நீவருந்தாதே, கண்களே நீங்கள் இமையாதேயுங்கள், மன்மதனே யினி நீ கோபியாதே, சந்திரனே நீ குளிர்ந்திரு, காய்ந்தபயிர்கள் தேறித்தழைக்க எழுகின்ற மேகத்தைப்போல நானிப்போதுகண்டு தெரிசிக்கும்படி காருண்ணியத்தினுல் எனக்கெதிராக இதோ சுகவானநாதர் எழுந்தருளினர் இனி யெனதுகோரிக்கை முழுதும் நிறைவேறும் எ - று. (சுசு)

இத்தனைமலர்களாலிக்குச்சம்

முடிவுபெற்றதெனல்.

திரிவிதநாயகர்திறமுப்பூவாகப்பிறரியல்போர்செழும்பூவாகப்
பரிநருமசசிவர்பண்போர்பூவாகவேனையவோர்பைம்பூவாகச்
சரிமலர்களாறினின்மூன்றுங்குச்சம்புனைந்தனங்குச்சங்கண்மூன்றாற்
புரிவுறுசிங்காரரசமஞ்சரிமுற்றிற்றுலகம்புகழமாதோ.

(இ - ள்.) மூன்றுவித நாயகர்களிலக்கணமும் மூன்று பூவாக மற்றை நாயகர்களிலக்கணமொரு செழியபூவாக அன்பையுடைய நருமசசிவர்களி னிலக்கணமொருபூவாகவேனையபலவு மோரழகிய பூவாக சரியான விவ்வாறு மலர்களால் மூன்றுவது குச்சத்தை யலங்கரித்தனம், இப்படி மூன்று குச்சங்களாலே விருப்பமிகுந்த சிங்காரரசமஞ்சரி யுலகம்புகழும்படி முடிவுபெற்றது எ - று. (சுஎ)

சு-வது மலர் முற்றும்.

மூன்றுவது குச்சம்

முற்றும்.

வாழி.

முகில்வாழிகடல்வாழிமுனிவர்தவம்வாழிமறைமுதுநூல்வாழி
யகிலாதிபுவனமுழுவதும்வாழிதமிழ்வாழியறிஞர்வாழி
சிகிகூவுமலர்ச்சோலைச்சேலநகர்வாழிபெருஞ்செல்வம்வாழி
மகிழ்கூர்சொர்ணம்பிகைத்தாய்வாழிசுகவனநாதர்வாழிமாதோ.

சிங்கார ரசமஞ்சரி

முற்றிற்று.

ஆ செய்யுள் உருo.